

தென் சூடானில் படகு விபத்து: 200க்கும் மேற்பட்டோர் சாவு

பக். 5



ஈழத்தில் நடைபெற்ற போர் என்னையும் நோகடித்தது

பக். 7



அருகிப் போகும் பட்டிப் பொங்கல்

பக். 8



தங்கப்பந்தை வென்றார் றொனால்டோ

பக். 15

இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 28 °c

குறைந்த வெப்பநிலை 24 °c

மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 050 வள்ளுவர் ஆண்டு: 2044 தை 02, புதன் 15.01.2014


## வேகமாக பரவுகிறது டெங்கு

யாழ்ப்பாணம், ஜன.15

இந்த வருடத்தில் நேற்று முன்தினம் வரையான 13 நாள்களில் 23 பேர் டெங்குக் காய்ச்சல் தொற்றுக்கு உள்ளாகிச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாத்திரம் 2 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் டெங்கினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மழை காலம் என்பதால் பொது மக்கள் தமது சூழலைத் துப்புரவாக வைத்திருக்குமாறும் நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு அவற்றைச் சுத்தமாக வைத்திருக்குமாறும் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (த-4)

# சர்வதேச விசாரணை கோரி கொழும்பு நகரில் போராட்டம்

### இம்மாத இறுதியில் காணாமற்போனோரின் உறவுகள் களத்தில் குதிப்பு


கொழும்பு, ஜனவரி 15

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் காணாமற்போன ஊடகவியலாளர்கள், இளைஞர், யுவதிகள், குடும்பஸ்தர்கள், குடும்பப்பெண்கள் ஆகியோரை மீட்டுத் தருமாறு கோரியும், காணாமற்போனோர் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானத்தை எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றுமாறு வலியுறுத்தியும் இம்மாத இறுதியில் கொழும்பில் மாபெரும் போராட்டம் நடைபெறவுள்ளது.

> “இந்த அரசு காணாமற்போனோரை மீட்டுத் தரும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச சமூகம் தான் இதில் உடன் தலையிடவேண்டும்; காணாமற்போனோரை மீட்டுத்தர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் காணாமற்போனோரைத் தேடியறியும் குழுவின் ஏற்பாட்டில் ஜனநாயக ரீதியில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

13 ஆம் பக்கம் பார்க்க



தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு அளவெட்டி குருக்கள் கிணற்றடி பிள்ளையார் ஆலய நிர்வாக சபையினர் வறுமைநிலையில் உள்ள ஒரு மாணவனுக்கு சைக்கிள் ஒன்றை வழங்கியுள்ளனர். வன்னிப் போரில் தந்தையை இழந்த அளவெட்டி வடக்கைச் சேர்ந்த கதிர்காமநாதன் விஜிதன் என்ற மாணவனுக்கு அவரது கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. (த)

## நிகழ்வின் ஒளிநாடாவைப் பறித்து முல்லையில் பொலிஸார் அடாவடி

### அரசுக்கு எதிராகச் செயற்பட முனைந்தமையே காரணமாம்

யாழ்ப்பாணம், ஜன. 15

முல்லைத்தீவில் நடைபெற்ற விசேட தேவைக்குட்பட்ட முன்னாள் போராளிகளின் கலாசார நிகழ்வில் புகுந்த பொலிஸார் அந்த நிகழ்வைக் குழப்பினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அந்த நிகழ்வை ஒளிப்பதிவு செய்யக்கூடாது எனத் தடுத்து ஒளிநாடாவையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

விசேட தேவைக்குரிய முன்னாள் போராளிகளைப் பயன்படுத்தி இலங்கை அரசுக்கு எதிராகச் சர்வதேச ரீதியில் செயற்பட முனைந்தமையினாலேயே குறித்த ஒளிநாடா பறிமுதல்

13 ஆம் பக்கம் பார்க்க

## இன்றும் மழை

யாழ்ப்பாணம், ஜன.15

வடக்கில் இன்று மழை பெய்யும் என்று யாழ். திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

13 ஆம் பக்கம் பார்க்க

## வீதியில் சாகசத்தால் போக்குவரத்து தடை

### பருத்தித்துறை வீதியில் இளைஞர்கள் அட்டகாசம்





யாழ்ப்பாணம், ஜன. 15

இளைஞர்களின் வீதிச் சாகசத்தால் யாழ். பருத்தித்துறை பிரதான வீதியூடான போக்குவரத்தில் சிறிது நேரம் இடையூறு ஏற்பட்டது. இதனால் பாதசாரிகள் கடும் விசனம் அடைந்தனர்.

யாழ். - பருத்தித்துறை பிரதான வீதியில் ஆவரங்கால் சந்திக்கும் - வல்லைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் நான்கு ஓட்டோக்

13 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு அதிகாரிகளுடன் முதல்வர் முதல் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

வடக்கு மாகாண சபை பதவியேற்று நான்கு மாதங்களின் பின்னர் வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுடன், திணைக்களத் தலைவர்களையும்ஒரேநேரத்தில் முதலமைச்சர் முதல் தடவையாக நாளை வியாழக்கிழமை சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்றது. இதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாணசபையைக் கைப்பற்றி ஒக்ரோபர் மாதம் ஆட்சி அமைத்திருந்தது.

13 ஆம் பக்கம் பார்க்க

## கனேடியக் குழுவினர் நேற்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ். மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த கனேடிய வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

கனேடிய வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் இரு நாள் பயணமாக நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். முதலில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரை இவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அதன் பின்னர் யாழ். நகரில்

13 ஆம் பக்கம் பார்க்க


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

இன்னும் 2 நாள்களில்

Gold Sponsor

(C/10528)


## கொக்கிளாய் கடல் நீரேரியில் தொடரும் சட்டவிரோத மீன்பிடி

யாழ்ப்பாணம், ஜன. 15

புது வருடத்திலும் கொக்கிளாய் கடல் நீரேரியில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும், புல்மோட்டையிலிருந்து வரும் மீனவர்களே இவ்வாறான நடவடிக்கை களில் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கொக்கிளாய் கடல்நீரேரியில் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பாவித்துத் தொடர்ச்சியாக மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு

13 ஆம் பக்கம் பார்க்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டி

கொழும்பு,ஜன 15
எதிர்வரும் மேல் மாகாண சபை தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது இதனைத் தெரிவித்தார்.
இதன்படி மேல் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடவுள்ளதாக ஹக்கீம் கூறினார். (த)

## ஆச்சரியத்தில் ஆழ்த்திய பட்டங்கள்

வடமராட்சி, ஜன. 15
தரையில் ஓடுவனவும் கடலில் நீந்துவனவும் தைப்பொங்கல் தினமான நேற்று பட்டமாக வானில் பறந்து அனைவரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கின.
நேற்று வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தினால் உதய சூரியன் மதவடிக் கடற்கரையில் பட்டம் ஏற்றும் போட்டி நடத்தப்பட்டது.
வானில் பறக்கும் விமானம், பழங்காலத்து தட்டிவான், கடலில் செல்லும் படகு, ரோபோ, கார், இறால், கடல்கன்னி, நாகபாம்பு, கழுகு எனச் சுமார் 43 பட்டங்கள் இந்தப் போட்டியில் கலந்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தின. இந்தப் பட்டப் போட்டியைக் காண நூற்றுக் கணக்கான மக்கள் அங்கு கூடினர். (த-422)



## வேட்புமனுத் தினம் இவ்வாரம் அறிவிப்பு

கொழும்பு,ஜன 15
தென் மற்றும் மேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் வேட்புமனு தாக்கல் செய்யும் தினத்தை நாளை அல்லது நாளை மறுதினம் வெளியிடவுள்ளதாகத் தேர்தல் செயலகம் தெரிவித்தது.
இந்த இரண்டு மாகாண சபைகளுக்கும் 2013ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலே பயன்படுத்தப்படவுள்ளதாகவும் தேர்தல் செயலகம் தெரிவித்தது.
இது தொடர்பில் தேர்தல் செயலகம் மேலும் தெரிவித்ததாவது:-
தென் மற்றும் மேல் மாகாண சபைகளின் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்யும் வர்த்தமானி அறிவிப்பு இவ்வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.
இதற்கிணங்க நாளை அல்லது நாளைமறுதினம் இந்த இரண்டு மாகாணங்களுக்கான வேட்புமனுத் தாக்கல் அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது.
தேர்தல் நடைபெறும் மாவட்டங்களில் தேர்தலில் போட்டியிடவுள்ள உறுப்பினர்களின் தொகை, பெயர் குறித்து நியமனம் செய்ய வேண்டிய வேட்பாளர்கள் தொகை, சுயேச்சையாகக் கட்டுப்பணம் செலுத்துபவர்கள் பற்றிய விவரங்கள் இதன்போது வெளியிடப்படும்.
இதேவேளை 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பில் மேலதிக வாக்காளர் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல் செயலகம் தெரிவித்தது. (த)

## ஜெனிவா அமர்வுக்கு முன் நிஷாவின் வருகை உறுதி

யாழ்ப்பாணம், ஜன. 14
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் ஜெனீவா அமர்வுகளுக்கு முன்பாக இலங்கைக்கு வருகை தருவார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

> “இலங்கை தொடர்பில் கடுமையான நிலைப்பாடுகளையே எடுத்து வந்தார். இந்த நிலையில் அமெரிக்காவின் போர்க் குற்ற நிபுணர் ஸ்ரீபன் ஜே.ராப்பின் பயணத்தை தொடர்ந்து நிஷா இலங்கைக்கு வருவார் .

முன்னதாகக் கடந்த 11ஆம் திகதி நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கைக்கு முதன்முறையாக வருகை தருவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் அந்தப் பயணம் நிறுத்தப்பட்டது. இந்திய - அமெரிக்க ராஜதந்திர முறுகல் நிலை காரணமாக ஆசியாவுக்கான அவரது பயணம் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளதாக அமெரிக்க ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலராக இருந்த ரொபேர்ட் ஓ பிளேக்கின் இடத்துக்கு நிஷா தேசாய் பிஸ்வால் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் இலங்கை தொடர்பில் கடுமையான நிலைப்பாடுகளையே எடுத்து வந்தார். இந்த நிலையில் அமெரிக்காவின் போர்க் குற்ற நிபுணர் ஸ்ரீபன் ஜே.ராப்பின் பயணத்தை தொடர்ந்து நிஷா இலங்கைக்கு வருவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.
இலங்கைக்கு வருவதற்கு முன்னர், அமெரிக்க உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், இந்தியா செல்லவும் திட்டமிட்டிருந்தார். ஆனால் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இராஜதந்திர முறுகலை அடுத்து, அவரது இந்தியப் பயணம் தாமதமடைந்துள்ளது.
இதனால் நிஷா தேசாய் பிஸ்வாலின் இலங்கைப் பயணமும் தாமதமடைவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஜெனீவா அமர்வுகளுக்கு முன்னதாகவே அவர் இலங்கைக்கு வருகை தருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## கூட்டமைப்புடன் இணைந்து ஸ்ரீபன் ராப் இரட்டை வேடம்

### சட்டத்தரணிகள் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன 15
போர்க் குற்றங்கள் தொடர்பான அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் விசேட நிபுணர் ஸ்ரீபன் ராப், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து இலங்கை தொடர்பில் சர்வதேசத்துக்கு இரட்டை வேடம் போடுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
இலங்கைச் சட்டத்தரணிகள் ஒன்றியம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.
இந்த நிலையில் நாட்டின் சகல தொழிற் சங்கங்களும் இணைந்து இவ்வாறான காட்டிக் கொடுப்புக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்றும் ஒன்றியத்தின் இணைப்பாளர் ரவீந்து மனோஜ் குறிப்பிட்டுள்ளார்.
ஸ்ரீபன் ராப் போன்றோர் இங்கு வந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் இணைந்து, அன்று விடுதலைப் புலிகளால் குண்டுகளால் பெற்றுக்கொள்ள முடியாததை இன்று பேனையினால் பெற்றுக்கொள்ள முனைகின்றனர். இதற்கு ஒரு போதும் இடம்கொடுக்க கூடாது என்றும் அவர் கூறியுள்ளார். (த)

## சஜித், தலதா உள்ளிட்டோர் ஐ.தே.க வேட்புமனு குழுவில்

நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜித் பிரேமதாஸ மற்றும் தலதா அத்துக்கோரள ஆகியோர் உட்பட 12 பேர் கொண்ட வேட்புமனுக் குழுவொன்றை ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவச் சபை நேற்று அறிவித்துள்ளது.
தலைமைத்துச் சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களையும் குறித்த குழுவின் அதிருப்தி உறுப்பினர்களான சஜித் பிரேமதாஸ மற்றும் தலதா அத்துக்கோரள ஆகியோரைக் கொண்டதாக இந்தக் குழு உள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜித் பிரேமதாஸ மற்றும் தலதா அத்துக்கோரள ஆகியோர் அண்மையில் நியமிக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவச் சபையில் இணைய மறுத்தமை குறிப்பிடத்தக்கது.
இவர்களுடன் கரு ஜயசூரிய, லக்ஸ்மன் கிரியெல்ல, திஸ்ஸ அத்தநாயக்க, ஜோன் அமரதுங்க, கபீர்ஹாசீம், ரவி கருணாநாயக்க, மங்கள சமரவீர, ருவான் விஜயவர்த்தன, ரேணுகா ஹேரத், டி.எம்.சுவாமிநாதன் ஆகியோர் இந்த வேட்புமனுக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.
மேல் மற்றும் தென் ஆகிய மாகாண சபைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு கலைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## தென்மராட்சியில் காவலரண்கள் அகற்றப்பட்டன

தென்மராட்சி, ஜன.15
ஏ-9 வீதி உட்பட தென்மராட்சியில் பிரதேச வீதியோரங்களில் நீண்ட காலமாகக் காணப்பட்ட படையினரின் காவலரண்கள் பல நேற்று அப்புறப்படுத்தப்பட்டன. அப்புறப்படுத்தப்படும் பொருள்கள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டன.
புதிய வடமாகாண கட்டளைத் தளபதி உதய பெரேராவின் உத்தரவின் பேரில் காவலரண்கள் அகற்றப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

## தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா ஹோமகமவில்

யாழ்ப்பாணம், ஜன.15
முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும் தேசிய கால்கோள் விழா நாளை வியாழக்கிழமை ஹோமகம பிரதேசத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அரச பாடாலைகளுக்கு முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் கால்கோள் விழாவின் தேசிய வைபவம் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் ஹோமகம நியந்தகல வித்தியாலயத்தின் கீர்த்தி கனிஷ்ட வித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் விசேட அதிதியாக அமைச்சர் நிமால் சிறி பாலடி சில்வா கலந்து கொள்ளவுள்ளார். இதேவேளை வட மாகாணத்தில் கால்கோள் விழா ஏற்கனவே நடைபெற்று முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## முழு நிலா கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன.15
சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் முழு நிலா கருத்தரங்கு இன்று செயற்திறன் அரங்க இயக்கத்தில் (திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி, பலாலி ஆசிரியர் கலாசாலை முன்பாக) நடைபெறவுள்ளது.
பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் "தேசியவாதமும் நவீன அரசின் தோற்றமும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதன் தொடக்கவுரையை ஏ.சி. ஜோர்ஜ் ஆற்றுவதுடன் கருத்துரையை க.அகிலன் வழங்கவுள்ளார்.
கருத்தரங்கின் பின் கலந்துரையாடல் இடம்பெறும் எனவும் இதில் கலை, இலக்கிய, சமூக விஞ்ஞான, அறிவியல் ஆர்வலர்கள் கலந்துகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-10)

## மும்மொழி அடையாள அட்டைகள் அடுத்த மாதம் முதல் விநியோகம்

கொழும்பு,ஜன 15
அடுத்த மாதம் முதல் மும்மொழிகளையும் உள்ளடக்கியதாகத் தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கு ஆள்பதிவுத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
அச்சிடப்பட்டு வெளியிடப்படும் தேசிய அடையாள அட்டை மும்மொழிகளை உள்ளடக்கியதாக விநியோகிக்கப்படும் என திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆர். எம்.எஸ் சரத்குமார தெரிவித்தார். (த)

## வைத்தியசாலை ஊழியர்கள் நாளை பணிப்புறக்கணிப்பில்

யாழ்ப்பாணம்.ஜன.15
நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் கனிஷ்ட தர ஊழியர்கள் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாளை வியாழக்கிழமை காலையில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.


> “ஐந்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

வாரத்தில் ஐந்து நாள்கள் வேலை, சீருடைப்படி அதிகரித்து வழங்கல், மேலதிக நேரத்துக்கு மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவு வழங்கல் உள்ளிட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.
காலை 6.00 மணி தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் கனிஷ்ட ஊழியர்கள் மு.ப. 11.30 மணி தொடக்கம் 1.00 மணிவரைவெளி நடப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## இந்தியர்கள் 6 பேர் கைது

கொழும்பு.ஜன 15
விசா விதிமுறைகளை மீறி இலங்கையில் தங்கியிருந்த 6 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் ஐவர் பெண்கள் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
பொரளை பகுதியில் உள்ள இரவுநேரக் களியாட்ட விடுதியில் பணிபுரிந்த 5 இந்தியப் பெண்களை நேற்றுமுன்தினம் பொரளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
மேலும் குறித்த பெண்களைப் பணிக்கு அமர்த்திய களியாட்ட விடுதி உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் அடியார்கள் வழிபாடு. (ஒ-21)




திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயத்தில்..... (ஒ-56)



தைப்பொங்கல் திருநாளான நேற்று பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் மழைக்கு மத்தியிலும் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வையடுத்து முட்டி உடைத்தல் போட்டி மற்றும் கயிறு இழுத்தல் போன்ற போட்டிகளும் இடம்பெற்றன. (ஒ-135)



மழைக்கு மத்தியில் பொங்கலில் ஈடுபடும் பெரியவர். (ஒ-14)





யாழ்.நகரில் விறகு விற்பனை நிலையம் ஒன்றில்... (ஒ-21)




மன்னார் வங்காலை புனித அன்னாள் ஆலயத்தில்... (ஒ-56)

# மழைக்கு மத்தியிலும் சிறப்பான பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன.15

வடக்கில் நேற்று காலநிலை சீரில்லாது இருந்த போதிலும், தைப்பொங்கல் திருநாள் கொண்டாட்டம் அமைதியான முறையில் சமய சம்பிரதாயங்களுடன் நடை பெற்றது.

குறிப்பாக குடாநாட்டில் இரவிரவாக சுமாரான மழை பெய்தபோதும், காலை மக்கள் பொங்கிப் படைத்து இறைவனுக்கு நன்றி வழிபாட்டை நிறைவேற்றினர்.

விடியற் காலையில் அநேகமான இடங்களில் மழை விட்டுக் கொடுத்த நிலையில் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் நிறுவனங்களில் வழமை போன்று மாவிலை தோரணங்கள் கட்டி மக்கள் ஆர்வத்துடன் பொங்கல் பொங்கி மகிழ்ந்தனர்.

இந்து ஆலயங்களில் அதிகாலையில் விசேட பூசைகள் இடம்பெற்றன. நல்லூர் கந்தசுவாமி கோயிலில் அடியார்கள் திரண்டு வந்து பூசை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

கத்தோலிக்க தேவாலயங்களிலும் பொங்கல் பொங்கி திருப்பலிகள் நிறைவேற்றி மக்கள் தமிழர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற பொங்கல் விழாவின்போது உட்கார்ந்தவாறே பண்பாட்டுத் திருப்பலி பங்குத் தந்தை அருட்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகளால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு. ஜெறோ செல்வநாயகம் அடிகளும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

பெரியவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் பட்டாசு கொளுத்திக் கொண்டாடினர். இந்த முறை யாழ்.நகரில் சீன வெடிச் சத்தங்கள் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்தன.

இதேவேளை, வடக்கின் அனைத்துப் பகுதிகளிலும் அமைதியான முறையில் மக்கள் தைத் திருநாளைக் கொண்டாடினர் என்று எமது செய்தியாளர்கள் அறிவித்திருந்தனர்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் சிவாச்சாரியார் பாலசுப்பிரமணியம் மற்றும் கோயிலின் பிரதம குரு கிருஷ்ணன் ஆகியோர் இணைந்து பொங்கல் விசேட பூசைகளை நடத்தினர். மன்னார் புனித செபஸ்த்தியார் பேராலயம் மற்றும் வங்காலை புனித அன்னாள் ஆலயம் ஆகியவற்றிலும் பொங்கல் பொங்கி விசேட மத வழிபாடுகள் இடம் பெற்றன என்று எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-9-14-56-135)

## பொங்கல் சாப்பிடச் சென்றவர் விபத்தில் சிக்கிப் படுகாயம்

தென்மராட்சி, ஜன.15

நண்பனின் வீட்டில் பொங்கல் சாப்பிட மோட்டார் சைக்கிளில் சென்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் பஸ் தரிப்பிடக் கட்டடத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சங்கத்தானையில் இடம்பெற்றது. சாவகச்சேரி வங்கியொன்றில் பாதுகாப்பு ஊழியராகக் கடமையாற்றும் சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த சகாயராஜா நிரோஜன (வயது -21) என்பவரே காயமடைந்தவராவர். இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஒ-9)

## பிள்ளையார் ஆலயத்தில் திருட்டுச் சம்பவம்

### சோகத்தில் குமிழமுனை மக்கள்

முல்லைத்தீவு மாவட்டம் குமிழமுனையிலுள்ள கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார் ஆலயத்தில் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை ஆலயத்துக்குச் சென்றவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பிள்ளையார் விக்கிரகம் வீழ்ந்த நிலையில் கிடப்பதைக் கண்டனர். இது தொடர்பாகத் தகவல் தெரிவிக்கப்பட்டதும் ஆலயத்தின் நிர்வாகிகளும் ஊர்மக்களும் ஆலயத்தில் திரண்டனர். நேற்று முன்தினம் இரவுவேளையில் ஆலயத்துக்கு வந்த திருடர்கள் கதவை உடைத்து உள்ளே சென்று [illegible] தில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையார் விக்கிரகத்தைப் புரட்டிவீழ்த்தி விட்டு அடியில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

சிலநூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்த ஆலயத்தை இந்தப் பகுதி மக்கள் பக்தி சிரத்தையுடன் வணங்கி வருகின்றமை வழக்கமாகும். இந்த நிலையில் பொங்கல் தினமான நேற்றைய தினம் ஆலயத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் இந்தப் பகுதி மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஆலயக்குருக்களுடன் கலந்து ஆலோசித்த பின்னர் ஆலயத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவநேசன்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட றாதாநாயகியின் அன்புக் கணவரான கந்தையா சிவநேசன் கடந்த (11.01.2014) அன்று இந்தியாவில் (திருச்சி) காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெறும். அவரின் இறுதி அஞ்சலி நிகழ்வு 15 ஆம் 16 ஆம் திகதிகளில் அளவெட்டி வடக்கு டச்சுறோட், தம்பயப் புலத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
உடன் பிறந்த சகோதரன்
க. பாஸ்கரன் (077 3685152)

## கண்ணீர் அஞ்சலி



எமது பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக தொடர்ந்து 22 வருடங்கள் பணியாற்றி சங்கங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த அரும்பெரும் சேவையாளர்

### கதிரவேலு பேரின்பநாயகம்

அவர்கள் 13.01.2014 இறைபதமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயறுருகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
வலிகிழக்கு, வடபகுதி (அச்சுவேலி)
பல நோக்கு கூட்டுறவு சங்கம், அச்சுவேலி.

(சி11017)
(10.6.3)

## மரண அறிவித்தல்

திருமதி
### இரத்தினம் நடராசா



சூளானையைப் பிறப்பிடமாகவும், அம்பனை, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் நடராசா நேற்று (14.01.2014) செவ்வாய்க்கிழமை மதியம் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா (பொலிஸ்)வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரியும், அருணகிரிநாதன், சௌபாக்கியவதி (ஆத்தை), ஜெயராஜா (பொது வைத்தியசாலை - வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தாதேவி, ராஜ்குமார் (L.R.D.C.பாதுகாப்பு சேவை), சிவமலர் (ஆசிரியை - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr.ருஷாந்தி (IMO,சித்த போதனா வைத்தியசாலை - கைதடி), ஜர்மிலா (கிழக்கு பல்கலைக்கழகம்), சிறிகஜானி (மாணவி HNDA), கிஷாயினி (கல்வியியற்கல்லூரி - கோப்பாய்), கோகிலாணி (மாணவி, யா/மகாஜன கல்லூரி), ஜனுராஜ் (மாணவன், வவு/ மத்திய மகாவித்தியாலயம்), டிக்ஷிகா (மாணவி, வவு/இறம் பைக்குளம் மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப.2.00 மணியளவில் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பனை,
சுன்னாகம்.
(42377)
(12)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### Dr. சுப்பிரமணியம் இராசவேலு



கரவெட்டி கிழக்கு, செங்குந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr. சுப்பிரமணியம் இராசவேலு நேற்று (14.01.2014) செவ்வாய்க்கிழமை இறைபத மடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், Dr. ராமச்சந்திரன், இந்திராவதிஅம்மா, பரமேஸ்வரி அம்மா, Dr. சிறிவிக்கினேஸ்வரா, யசோ, நிர்மலா, அருள், தமயந்தி, அப்பன் நந்தீஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஸ்சியா, கிருஸ்ணவேணி, அருந்தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசகுமார், இராஸ்வரன், விஜிதா ஆகியோரின் மாமனும், அனுசியா, ஆருரன், ஆதவன், சுடர், கோகில், அச்சயா, அபித்தா, அர்சனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2014) புதன்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: நா. இராசகுமார்,
அனுசிகா மணப்பந்தல்.

கரவெட்டி கிழக்கு.
(சி/11015)
(10.6.3)

## பற்றாக்குறை

அக்கராயன், ஜன.15

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார்.

விஞ்ஞான பாடத்துக்கு 50 ஆசிரியர்களும், கணித பாடத்துக்கு 35 ஆசிரியர்களும், ஆரம்ப கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு 80 ஆசிரியர்களும் எனப் பொதுவாகவே ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதாகவும் மாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### பொன்னையா குணரத்தினம்
(ஓய்வு பெற்ற தபாலக ஊழியர்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும்வும் தற்போது அரியாலை யை வசிப்பிட மாக வும் கொண்ட திரு பொன்னையா குணரத்தினம் நேற்று (14.01.2014) செவ்வாய்க்கிழமை பி.ப. கர்த்தருக்குள் இளைப்பாறுதல் அடைந்து விட்டார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

57/34 திருமகள் வீதி, அரியாலை,
T.P : 071 3055868

தகவல் :
குடும்பத்தினர்

## அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு : இல. 2036 - L.C.D TV
2ஆம் பரிசு : இல. 2024 - தையல் மெஷின்
3ஆம் பரிசு : இல. 2905 - துவிச்சக்கர வண்டி

28.01.2014 ஆம் திகதிக்கு முன் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி, சுதுமலை கிழக்கு,
ஞானவைரவர் தேவஸ்தானம், மானிப்பாய்.

(42380)
(10.14)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்களான திரு. சி. நித்தியானந்தராஜா அவர்களின் தாயாரும் திருமதி இந்திராணி நித்தியானந்தராஜா அவர்களின் மாமியாரும் ஆகிய

### சின்னையா செல்லம்மா

அவர்கள் நேற்று (14.01.2014) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்திவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/ நாவற்குழி ம.வி

## மரண அறிவித்தல்

திருமதி
### தெய்வநாயகி அரியம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர், நவாலி மகா வித்தியாலயம்)



நவாலி அரசடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தெய்வநாயகி அரியம் நேற்று (14.01.2014) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், விநோதினி (ஆசிரியை, யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியா சாலை), ஜெனோதினி (ஆசிரியை, யா/ கீரிமலை வலிதூண்டல் றோ.க.த.க. பாடசாலை), மஞ்சுளா (யாழ். மெமோ ரியல் ஆங்கிலப் பாட சாலை), மயூரதன் (தெய்வா ரவல்ஸ் உரிமையாளர்), ஹயற தன் ( முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம்) ஆகியோரின் பாசமிகு தாயும், பேரின்பம், சிவபாலதேவன், மனோகரன், தர்ஷினி, ஜெயச்சித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜதிஸ்கரன், தெய் வீஹன், கார்த்தீஹன், தெய்வர்ஷா ஆகியோரின் பாசமிகு பேர்த் தியும், சுப்பிரமணியம், செல்வரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2014) புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி அரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அரசடி, நவாலி.

தகவல்: பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

திருமதி **மருதயினார் பார்வதிப்பிள்ளை**

நெடுந்தீவு மேற்கு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மருதயினார் பார்வதிப்பிள்ளை நேற்று (14.01.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு மருதயினாரின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகாத்தைபிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற குமாரவேலு - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், வேலாயுதம், பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குஞ்சாச்சிப்பிள்ளை, பேரம்பலம் மற்றும் இலட்சுமி, இராமநாதர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் யோகராசா (வலயக்கல்வி அலுவலகம் வேலணை), தர்மலிங்கம் (Perantina micro finance company-திருகோணமலை), கேதீஸ்வரன், கலாரஞ்சன், ஜெயகாந்தன் (தவிசாளர் பிரதேசசபை - ஊர்காவற்றுறை) ஆகியோரின் பாசமிகு தாயும் பிரசன்னாவின் (வைத்தியசாலை - கிளிநொச்சி) பெரியதாயும் தேவகுஞ்சரி (ஆசிரியை - செட்டிபுலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வேலணை), ஜெயராணி, சிவகாமிப்பிள்ளை, ரம்பா (S.D.O பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை), கௌசி (தாதிய உத்தியோகத்தர் வைத்தியசாலை கிளிநொச்சி) ஆகியோரின் அன்புமாமியும் சயநீதன், தயானி, வசீகரன், விதுசன், அச்சுதன், பிரசாந்தி, கார்த்திகா, உமாகாந், யதுர்சினி, திவாகர், டிலக்சினி, வினுஜா, துவிசன், துவீபன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சாருஜன், கார்சினி, பாலபானு, விதுத்வாஷன், பிரதியுக்ஷா, யானுஜா, பவிசாளினி ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணியளிவில் நெடுந்தீவு மேற்கு இந்த மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு (077 8065166)

தகவல்
குடும்பத்தினர்

## CAMBRIDGE ACADEMY OF ENGLISH

* Speaking English (100% Practical)
தொழில்புரிவோருக்கும் உயர் கல்வி கற்போருக்கும் உகந்தது.
* Grammer (100% Theory)
பல்கலைக்கழக மாணவர்கள் உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு ஏற்புடையது.
* IELTS, TKT மற்றும் BRITISH COUNCIL இனால் நடத்தப்படும் பரீட்சைகளுக் குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Cambridge Academy Of English
142, Parameshvara Junction
Palaly Road. 077 5508779

## வீடு விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெரு, நாவலர் வீதி சந்திக் கருகில் இல.64, மருதடி வீதியில் நிலப் பரப்பு 1.05 காணியில் அமைந்துள்ள விசாலமான வீடு விற்பனைக்குண்டு. 5 அறை, Kitchen, Attach Bathroom, வாகனத் தரிப்பிடம் (Car or van) (நல்லூர் 300மீற்றர், பொஸ்கோ பாடசாலை 400 மீற்றர்) பார்வையிடும் நேரம் 9.00am - 6.00pm

தொடர்பு: 077 602 8888
(12.6.3)

## வீடு வாடகைக்கு

யாழ். வேம்படி வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
0777 570400
(42378)
(10.6)

## அச்சுவேலி தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா சனசமூக நிலைய புதியகட்டட திறப்பு விழாவும் ஸ்ரீ விக்கினேஸ்வரா பாலர் முன்பள்ளி அங்குரார்ப்பண விழாவும் அழைப்பு

காலம் :- இன்று (15.01.2014) புதன்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி
தலைவர்:- பொ.பாலகிருஷ்ணன் (நிலைய போசகர்)
பிரதம விருந்தினர் :- கௌரவ சுரேஸ்பிரேமச்சந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
சிறப்பு விருந்தினர்கள் :- க.பத்மகுமார (வலிகிழக்கு பிரதேச செயலக பிள்ளைப்பருவ அபிவிருத்தி அலுவலர்)
அ.உதயகுமார் (தவிசாளர் வலிகிழக்கு பிரதேச சபை)
கௌரவ விருந்தினர் :- பு.சாந்தரூபன் (கிராம அலுவலர், அச்சுவேலி தெற்கு)
ஆசியுரை :- பிரம்மஸ்ரீ வி.கஜேந்திரக் குருக்கள் (பிரதம குரு உலவிக் குளம், சித்தி விநாயகர் ஆலயம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

குறிப்பு: 3 வயதுக்கும் 5 வயதுக்கும் உட்பட்ட சிறுவர்கள் பாலர் முன்பள்ளியில் அனுமதிக்கப்படுவார்கள்.

(பிரவேசம், கற்றல் செலவு அனைத்தும் இலவசம்)

ஸ்ரீ விக்கினேஸ்வரா சனசமூக நிலையம், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
நிர்வாகிகளும், முகாமைத்துவக் குழுவும்.

## அமைதியின் சொற்கள்

உங்கள் வாழ்க்கையில் எது செய்தாலும்
உண்மையான அமைதியின் அனுபவம்
ஏற்பட குறைந்தபட்சம் முயற்சியாவது
செய்யுங்கள்.

**பிறேம்ராவத்**

தொடர்புகளுக்கு: 0117 250001
பி.ப 3 மணி-10 மணிவரை

(42375)
(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென் சூடானில் படகு விபத்து: 200க்கும் மேற்பட்டோர் சாவு




ஜூபா, ஜன.15

தென் சூடானில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளை அடுத்து பொது மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து வருகின்றனர். அவ்வாறு நைல் நதியூடாகப் படகு மூலம் தப்பிச் சென்ற வேளை படகு கவிழ்ந்ததில் குழந்தைகள், பெண்கள் உட்பட 200 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

தென் சூடானில் முன்னாள் துணைப் பிரதமர் ரீக் மச்சர் தனது ஆதரவாளர்களுடன் அரசை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். இரு தரப்பினருக்கும் இடையே அமைதியை ஏற்படுத்த பிற ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களும், ஐ.நா குழுவினரும் தொடர்ந்து முயன்று வருகின்றனர். எனினும் இருதரப்பினருக்கும் இடையே மோதல்கள் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

சென்றவாரம் போராளிகள் கைப்பற்றியிருந்த பெண்டியு, போர் போன்ற நகரங்களை மீண்டும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த அரச படைகள் மலக்கல் பகுதியிலும் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தினர். இந்தப் பகுதியில் நேற்று மீண்டும் இரு தரப்பினருக்கிடையேயும் கடுமையான சண்டை ஆரம்பமாகியுள்ளது. அதையடுத்து அங்கிருந்து நைல்நதியூடாக 200க்கும் மேற்பட்ட பொதுமக்களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 200க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். அதிக எண்ணிக்கையானோரை ஏற்றிச் சென்றமையாலே படகு உடைந்து கவிழ்ந்துள்ளது என்று கூறப்படுகின்றது. இதுவரை யாரும் மீட்கப்படாத நிலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறித்த சரியான எண்ணிக்கை கிடைக்கப்பெறவில்லை. (ற)



## இராட்சத திமிங்கிலம்

தென் அமெரிக்க நாடான உருகுவேயின் தலைநகர் மாண்டே வீடியோ கர்ராஸ்கோ கடற்கரையில் இறந்த நிலையில் இராட்சதத் திமிங்கிலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது. 16 மீற்றர் நீளமான இந்த இறந்த திமிங்கிலம் உருகுவே கடற்படையினரின் கடும் போராட்டத்தின் பின்னர் புதைக்கப்பட்டது. 25 தொன் எடையுடைய இந்த ஸ்பெர்ம் வகைத் திமிங்கிலம் பாரம் தூக்கியின் உதவி மூலம் தூக்கி புதைக்கப்பட்ட காட்சியைக் காண்பதற்காக அந்தப் பகுதியில் மக்கள் கூட்டம் அலைமோதியது. (ற)

# தாக்குதல் நடத்தினால் பதிலடி நிச்சயம் உண்டு

### ஜப்பானை எச்சரிக்கின்றது சீனா

பீஜிங், ஜன.15

சர்ச்சைக்குரிய தீவுகளுக்கு அருகே ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள சீனக் கப்பல்கள் மீது ஜப்பான் தாக்குதல் நடத்தினால் அதற்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளது சீனா.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சீன வெளியுறவுத் துறை அமைச்சர் ஹூவா சுன் யிங்,

"எங்கள் பகுதிகளின் இறையாண்மையைப் பாதுகாப்பதில் அரசு கொண்டுள்ள உறுதிப்பாட்டை ஜப்பான் குறைத்து மதிப்பிடக் கூடாது. இந்த விவகாரத்தில் ஜப்பான் எங்களைச் சீண்டினால் அதற்குத் தக்க பதிலடி கொடுப்போம். அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு ஜப்பான்தான் பொறுப்பேற்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.


தாது வளமும், எண்ணெய் வளமும் கொண்டுள்ளதாகக் கருதப்படும் சர்ச்சைக்குரிய தீவுப் பகுதிகள் 2012ஆம் ஆண்டு வரை ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தன. எனினும் தற்போது அவை தமது எல்லைக்குட்பட்டவை என்று சீனா அறிவித்துள்ளது. அந்தப் பகுதி களை இணைத்து தனது வான் பாதுகாப்பு மண்டலமாக சீனா அறிவித்ததை அடுத்து ஜப்பானுக்கும், சீனாவுக்கும் இடையே பதற்றம் அதிகரித்தது.

சீனாவின் நடவடிக்கைகளை அடுத்து 'தற்காப்புக்காக மட்டும் படைகள்' என்ற கொள்கையைக் கைவிட்டு, தாக்கும் திறனை அதிகரிக்கும் வகையில் படைகளை நவீனப்படுத்தப் போவதாக ஜப்பான் பிரதமர் ஷின்ஸா அபே அறிவித்துள்ளார். அத்தோடு நில்லாது இரண்டாம் உலகப்போரில், ஜப்பானின் ஆக்ரோஷமான நடவடிக்கைகளை நினைவுபடுத்தும் யாசுகுன் போர் நினைவகத்துக்குச் சென்றும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஓனோடெரா "எங்கள் கடல் பகுதியில் சீனா மீண்டும் மீண்டும் அத்துமீறுவதை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# பொலிஸாரிடம் தப்பித்து சாவிடம் சிக்கிய எண்மர்

லாகூர், ஜன.15



பொலிஸாரிடம் இருந்து தப்பிக் கொள்வதற்காகச் சிந்து நதியில் குதித்த 3 பெண்கள் மற்றும் 5 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

தேடப்படும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட ஒருவரைத் தேடி வீடுகளில் சோதனையிட பொலிஸார் சென்றபோதே இந்தச் சோகச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.


நதியில் குதித்தவர்களில் ஒரு குழந்தையின் உடல் மீட்கப்பட்டுள்ளது. சுழியோடிகளின் உதவியுடன் மற்றவர்கள் தேடப்பட்டு வருகிறார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸார் தங்களைப் பணயக் கைதிகளாக பிடித்துச் சென்று சம்பந்தப்பட்ட குற்றவாளியை சரணடையும்படி நிர்ப்பந்திக்கலாம் என்று அஞ்சியே அந்தப் பெண்கள் பயந்துள்ளனர். பொலிஸாரிடம் சிக்குவதைவிட தண்ணீரில் குதித்து உயிரை விடுவது மேல் என்ற எண்ணத்தில் இந்த முடிவை எடுத்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்துத் தற்போது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# தூங்கி விழித்த 'யூட்டு' இயங்கத் தொடங்கியது

பீஜிங், ஜன.15



சந்திரனுக்கு சீனா அனுப்பிய யூட்டு ரோவர் விண்கலம் 14 நாள் தூக்க நிலைக்குப் பிறகு மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது என்று தெரிவித்துள்ளனர் சீன விஞ்ஞானிகள்.

சந்திரனில் ஒரு இரவு என்பது பூமியில் 14 நாள்களாகும். இந்தக் காலத்தில் சந்திரனின் வெப்பநிலை மைனஸ் 180 டிகிரி செல்சியஸ் அளவுக்கு குறைந்துவிடும். இதன் காரணமாக ரோவர் விண்கலத்தில் உள்ள சூரிய மின்சக்தி தயாரிப்பு அமைப்புகள் செயற்பட முடியாத நிலை ஏற்படும்.

இதைத் தடுப்பதற்காக சந்திரனில் இரவு நேரத்தின்போது தாமாகவே தூக்க நிலைக்குச் செல்லும் வகையில் யூட்டு ரோவர் விண்கலம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி சந்திரனில் தரையிறக்கப்பட்ட யூட்டு ரோவர் விண்கலம், சீனா அனுப்பிய முதலாவது ரோவர் விண்கலமாகும். (ற)

# ஈரானுக்கு 420 கோடி டொலர் நிதியுதவி: ஒப்பந்தத்தை அடுத்து அமெ. வழங்குகிறது

தெஹ்ரான், ஜன.15

தங்களது ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதால், ஈரானுக்கு 420 கோடி டொலர் நிதியுதவி அளிக்கப்படும் என்று அறிவித்துள்ளது அமெரிக்கா.

ஈரான் இரகசியமாக அணு சக்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறி அமெரிக்கா ஈரான் மீது பொருளாதார தடை விதித்திருந்தது. அதனை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று ஈரான் கோரிக்கை விடுத்திருந்தது. அதனையடுத்து 'பி5 பிளஸ் 1' நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகியவை இணைந்து கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கூட்டு நடவடிக்கை திட்ட ஒப்பந்தத்தை ஈரானுடன் ஏற்படுத்திக் கொண்டன.

அதன்படி, சர்வதேச அளவில் பொருளாதாரத் தடையை நீக்குவதற்காக அடுத்த 6 மாதங்களுக்கு எவ்வித அணுசக்தித் திட்ட நடவடிக்கையையும் மேற்கொள்வதில்லை என்று ஈரான் ஒப்புக்கொண்டுள்ளது. அந்த ஒப்பந்தம் வரும் 20ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது. அதனைத் தொடர்ந்து ஈரானுக்கு 420 கோடி டொலர் நிதியுதவி வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜோன் கெரி கூறுகையில்,

"அணு சக்தி விவகாரத்தால் பொருளாதார தடை விதிக்கப்பட்டிருந்த ஈரானுக்கு 420 கோடி டொலர் 6 மாதத்துக்குள் படிப்படியாக பல்வேறு தவணைகளில் வழங்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையில்,


"அணுசக்தி ஒப்பந்தத்துக்கான நோக்கத்தில் இது எவ்விதம் நிறைவேறும் என்பது பற்றி [illegible] இல்லை. அதனால் தேசிய பாதுகாப்பு மற்றும் சர்வதேச அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றை தூதரக உறவு மூலம் நிலைநாட்ட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனை முக்கிய முன்னேற்றமாகக் கருதும் வேளையில், ஈரானில் அணு சக்தி திட்டங்களில் உள்ள சிக்கல்கள் குறித்து கவலை கொண்டுள்ள நாங்கள், அதற்கு தீர்வு காண்பதை முக்கிய நோக்கமாக கருதுகிறோம். அமைதி மற்றும் பாதுகாப்புக்கு தீர்வு காண முயலும் எங்கள் நடவடிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஈரான் தனது நிலையில் [illegible] அந்நாட்டின் மீது மேலும் புதிதாக பொருளாதாரத் தடை விதிக்கப்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சை விட்டகலாத ஓராண்டு நினைவஞ்சலி

தன் நலம் கருதா பிறர் நலத் தெய்வம்

தோற்றம் 11 . 07 . 1965



மறைவு 26 . 01 . 2013

### அமரர் மயில்வாகனம் நந்தீஸ்வரன்

[அகில இலங்கை சமாதான நீதிவான் (J/P), தொழில்நுட்ப உத்தியோகத்தர் உடற்கூற்றியல்துறை மருத்துவபீடம் யாழ்.பல்கலைக் கழகம்]

திதி:15.01.2014

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று ஓராண்டு ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்காத நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.
ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

பிரான்பற்று, பண்டத்தரிப்பு

தகவல்: மனைவி - நிலா.

(42121)(12.6.3)

## கால்கோள் விழா

மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையின் வலய மட்ட கால்கோள் விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி க.சரவணபவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றூபா உதயரட்ணம் கலந்து கொள்வார். (ஓ-14)

## கருத்தரங்கு

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் தொழில்நுட்ப பாடத்தெரிவு மற்றும் தொழில்வழி காட்டல் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கல்லூரியில் 2013 ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும். ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களைக் கலந்துகொள்ளு மாறு பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சற்குணராசா செல்வமலர்

(ஆசிரியர் யா/இந்து மகளிர் கல்லூரி)



அன்னை மடியில்
20.01.1962

இறைவன் அடியில்
26.01.2013

தாயாய் தாரமாய் தலைவியுமாய்
தகை வாண்மை நிறையாசிரியை யுமாய்
நேயமோ டெந்தமையிந் நிலத்திற்தாங்கி
நித்தியமும் நம்முயர்வை நினைத்து வாழ்ந்தே
காயமே துறந்தீசன் கழலிற் சேர்ந்த
காலம் வந் தோரண்டு கழிந்த போதும்
தேயவாழ் வுள்ள மட்டும் செல்வமலரே
செகத்திலுனை நினைத்திருப்போம்
சேரும் சாந்தி

குடும்பத்தினர்.

இல.23, 6 ஆம் ஒழுங்கை.
பலாலிவீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(42365) (2.3.6)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**M.ஜோன்மேரி**
மலர்வு:- 03.01.1951
உதிர்வு:- 15.01.2009



**J.லூட்ஸ்சுபாசினி**
மலர்வு:- 14.12.1981
உதிர்வு:- 22.10.2008



**J.யூட்சுஜிவன்**
மலர்வு:- 10.04.1991
உதிர்வு:- 15.01.2009



**J.யூட்சுபாசன்**
மலர்வு:- 03.05.1996
உதிர்வு:- 24.01.2009

நிஜமாக நீங்கள் மறைந்து
ஐந்தாண்டு ஆனதோ!
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகள்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

- குடும்பத்தினர்.

(43059)(2.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 26 ★ 08 ★ 1930



விண்ணில் 26 ★ 01 ★ 2013

அமரர்

### பெரியதம்பி கணபதிப்பிள்ளை

திதி: மார்கழி பூரணை [15.01.2014]

ஆண்டொன்று மறைந்தது ஐயா...
அகலாது உங்கள் பிரிவுத்துயர்
இப்புவியில் நாம் இன்பமுடன் வாழ
உங்கள் உணர்வையும் உதிரத்தையும் எமக்களித்தீர்
காலச்சுவட்டில் ஓர் காவலன் போல் உடனிருந்து
உறவு பூண்டு எம் வாழ்வில் எல்லாமானீர் நீங்காத
நினைவலைகள் நெஞ்சிருக்கும் வரை
நிலைத்திருக்கும் என்றென்றும்
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முதலாம் ஆண்டு வருஷாப்திக நிகழ்வு இன்று (15.01.2014) புதன் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பூஜையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்,
இல. [illegible], [illegible]லிநகர்,
வவுனிக்குளம்.

[42283][3.6.4]

க.குணசிங்கம்
சமூகசேவைகள் உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், மாந்தை கிழக்கு.
077 059 4144

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் நடைபெற்ற போர் என்னையும் நோகடித்தது

## மக்கள் ஓலங்கள் இன்றும் என் மனத்திரையில் என்கிறார் மட்டக்களப்பு அரச அதிபர்




மட்டக்களப்பு.ஜன.15
ஈழத்தின் வலியை உணர்ந்தவர்களில் நானும் ஒருத்தி. இந்த வலியை உணர்ந்ததை விட மனதில் அனுபவித்திருக்கின்றேன்; உறக்கமில்லாத பல இரவுகளை நான் கழித்திருக்கின்றேன்; போர் இடம்பெற்ற போது நிம்மதியில்லாத நாள்களாக என் வாழ்நாளில் பல நாள்களை நான் தொலைத்திருக்கின்றேன்; உறவுகளிடம் கூட பகிர்ந்து கொள்ள முடியாத அந்த ஓலங்கள் இன்றும் என் மனத் திரையில் பதிந்து விட்டிருக்கின்றன.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ். எம். சாள்ஸ் கவலை தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக வைத்திய பீட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி மகேஸ்வரன் உமாகாந் எழுதிய 'ஈழத்தின் வலி- மாவிலாறிலிருந்து நந்திக் கடல் வரை நான்காம் ஈழப் போர்' என்ற நூல் வெளியீடு ஞாயிற்றுக்கிழமை ஈஸ்ட் லகூன் விடுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:-

2008 ஆம் ஆண்டு வன்னி மாவட்டத்தின் இக்கட்டான சூழ்நிலை யில் முல்லைத்தீவு. கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் நிர்வாகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் அந்த மக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளுக்காகவும் தங்களது உயிரைக் காத்துக் கொள்வதற்காகவும் ஓடிக்கொண்டிருந்தனர்.

அவ்வேளையிலே வைத்தியர்களான உமாகாந்தும், சத்தியமூர்த்தியும் இணைந்து அந்த நிர்க்கதியான மக்களுக்காக இரவு பகலாக கடமையாற்றிக் கொண் டிருந்தனர்.

நான் வவுனியாவில் மேலதிக அரச அதிபராகவும், அரச அதிபராகவும் கடமையாற்றிய காலத்தில் அவர்களது மனிதாபிமான சேவையை உணர்ந்திருந்திருக்கின்றேன்.

எந்தவிதமான சத்திர சிகிச்சைக் கூடங்களும் இல்லாமல் விஷேட நிபுணர்களுமில்லாமல் தனித்த இரு மனிதர்களாக முழுமை யாக மக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்துச் சேவையாற் றியிருந்தார்கள்.

மக்கள் இடம் பெயர்ந்து வவுனியாவை நோக்கி வந்து கொண்டிருந்தபோது. யார் வருகிறார்கள். எப்படி வருகின்றார்கள் என்று எதுவும் தெரியாத நிலையில் அந்த மக்களை வவுனியா மாவட்டம் உள்வாங்கிக் கொண்டிருந்தது.

ஓமந்தைச் சோதனைச் சாவடிக்குச் சென்று அந்த மக்களை நான் பார்த்திருக்கின்றேன்; அவர்களது துயரக் கதைகளைக் கேட்டிருக் கின்றேன்.

இந்த உண்மைகளை வெளிக் கொண்டு வரவேண்டிய தருணத்தில் அதனை வெளிப்படுத்தித்தான் ஆக வேண்டும்.

அங்குள்ள அரசியல் வாதிகளுக்கு உங்களுக்கு வாக்களித்த மக்கள் அநாதைகளாக வந்து கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களை வந்து பார்க்கமாட்டீர்களா? என்று அந்த மாவட்டத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நான் அந்த மக்கள் படும் துயரத்தை விளங்கப்படுத்தி பலமுறை வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன்.

பதிலளிக்க முடியாத அந்தத் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னுடன் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்ட சந்தர்ப்பங்களுமுண்டு. இப்படிப்பட்ட அரசியல்வாதிகளுக்கு மத்தி யில் தங்களது அரச பதவிக ளையும் உயிரையும் துச்சமாக மதித்து மக்களுக்காகச் சேவை செய்த இந்த இரு உத்தமர்களையும் ஒரு போதும் என்னால் மறக்க முடியாது - என்றார். (ச)

# மேய்ச்சல் தரையில் தனி ராஜ்ஜியம்

## துரைராஜசிங்கம் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு,ஜன.15
மேய்ச்சல் தரையில் அத்துமீறி குடியமர்ந்துள்ளவர்கள் அங்கு தனி ராஜ்ஜியத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அங்கு கால்நடைகள் சுடப்படுகின்றன. ஆனால் தற்போது எவருக்கும் கட்டுத்துப்பாக்கிக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை.

ஆனால் இவ்வாறான செயற்பாடுகள் மேய்ச்சல் தரைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பின்னணி என்ன என்பதைப் பொறுப்பானவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கி.துரைராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பில் 250, 000 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் வளாக்கப்படுகின்றன. மட்டக்களப்பில் போர் முடிவுற்றதன் பின் பெரும்பாலான மேய்ச்சல் தரை காணிகள் அத்துமீறி அபகரிக்கப்பட்டு வருகின்றன. அதனால் எமது கால்நடை வளர்ப்பாளர்கள் அதிகம் பாதிப்புறுகின்றனர்- என்றார். (ச)

# இந்த வருடம் முதல் ஆதனவரி அறவீடு

## அக்கரைப்பற்று மாநகர சபையில்

அம்பாறை,ஜன.15
இந்த வருடம் தொடக்கம் அக்கரைப்பற்று மாநகர சபையில் ஆதனவரி அறவீடு செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு மாநகர முதல்வர் அஹமட் ஸகி அதாவுல்லா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தனது வருடாந்த ஆதன வரிக் கொடுப்பனவை மாநகர முதல்வர் ஏ.எஸ். எம்.அஸ்மியிடம் கையளித்து குறித்த ஆதன வரி அறவீட்டை ஆரம்பித்து வைத்தார்.


அதன் பிரகாரம் அடிப்படையில் குடியிருப்பு ஆதனங்களின் வருடாந்த பெறுமதியில் 5 வீதமும், வியாபாரத் தலங்களின் வருடாந்த பெறுமதியில் 10 வீதமும் தொழிற்சாலைகளின் வருடாந்த பெறுமதியில் 12 வீதமும் ஆதனவரி யாக அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வருடாந்த ஆதன வரியை ஒரே முறையில் செலுத்தி முடிப் பவர்களுக்கு 10 வீத கழிவு வழங்கப்படும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அதிகமான உள்ளூராட்சி சபைகள் ஆதனவரிக் கொடுப்பனவை ஏற்கனவே நடைமுறைப்படுத்தி அறவீடு செய்து வருகின்ற போதிலும் அக்கரைப்பற்று மாநகர சபை இந்த வரியை இதற்கு முன்னர் அறவீடு செய்ய வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# டெங்கைக் கட்டுப்படுத்த மக்கள் பங்களிப்புத் தேவை

## சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு



மட்டக்களப்பு.ஜன.15
டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கு அரச அதிகாரிகளை விட பொது மக்களின் பங்களிப்பு மிக முக்கியம். பொது மக்களின் பங் களிப்பு இல்லாவிட்டால் டெங்கு நுளம்பின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது சிரமமான விடயமாகும்.

இவ்வாறு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ர.நஜீப்கான் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுமக்களுக்கு தெளிவை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் ஓட்ட மாவடி. பதுரியா நகர அல் அமீன் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பகுதியில் கடந்த மாதம் டெங்கு நோயாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்ட போது நோயாளரது வீட்டுச் சூழலில் உள்ள நூறு வீடுகளின் வீட்டுச் சூழலை பரிசோதித்த போது அதில் ஒன்பது வீட்டு சூழலில் நுளம்புப் பெருக்கத்துக்கான சூழல் இனம் காணப்பட்டது.

அதேபோன்று அந்தப் பகுதியில் தொடர்ந்து இருந்தால் அவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும். நமது என்ற உணர்வுடன் நாம் ஒவ்வொருவரும் செயற்படுவோமாக இருந்தால் எமது பிரதேசத்தில் அதிகமான பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு கொள்ளலாம் - என்றார். (ச)

**காணி விற்பனைக்கு**
கோப்பாயில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0775 953196

**பெயர்மாற்றம்**
வளலாய், அச்சுவேலியைச் சேர்ந்த கோபிலாம்பிள்ளை சிவபாதம் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை கோபாலபிள்ளை சிவபாதசுந்தரம் எனப் பெயர் மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் எனச் சகலருக்கும் அறியத்தருகிறேன்.
- கோ.சிவபாதசுந்தரம்.

**பிரத்தியேக வகுப்புக்கள்**
க.பொ.த (உயர்தர) மாணவர்களுக்கான Engineering Technology துறைசார்ந்த விரிவுரையாளர்களினால் இரு மொழிகளிலும் சுண்டுக்குளியில் நடத்தப்படுகின்றது.
தொடர்பு: 077 711 1748

**வீடு வாடகைக்கு**
கிளிநொச்சி நகரில் மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக மூன்று படுக்கை அறைகள் சேர்ந்த குளியல் அறை, சமையல் அறை வசதி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 631 9882

அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான
**HNB அறிவித்தல்**
**ஹற்றன் நஷனல் வங்கி அச்சுவேலி, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், மானிப்பாய், நெல்லியடி, கொடிகாமம்** ஆகிய கிளைகளில் **15.12.2012**இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் **17.01.2014** தொடக்கம் **26.01.2014** (வெள்ளி - ஞாயிறு) வரை காலை 09.00 மணி தொடக்கம் மாலை 07.00 மணி வரை இல. 212, 214, ஆஸ்பத்திரிவீதியில் அமைந்துள்ள எமது யாழ்.கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.
ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.
**ஹற்றன் நஷனல் வங்கி**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 11.01.2014 அன்று நடைபெற்ற 29 ஆவது பட்டமளிப்பு விழாவில் 2013 - நுண்கலைமாணி (இசைத்துறை) BFA (Music) பட்டம் பெற்ற
செல்வன்
**லோகேஸ்வரன் ஸ்ரீகுமார்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பட்டங்களைப் பெற இறைவனை வேண்டுகின்றோம்.
காமாட்சியம்பாள் கோயிலடி, நீர்வேலி வடக்கு.
வாழ்த்துவோர்: **சிவகுமார் குடும்பத்தினர்** (தென்னம்பிள்ளை ராசா)
(42372)(2.6.3)

**சேவை நலன் பாராட்டு**

ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்வி அலுவலராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் அரும்பணியாற்றிய எமது வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்)
உயர்திரு **கோவிந்தசாமி செல்வராசா**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது பணி எம் மாவட்டத்திற்கு மேலும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துவதுடன் பல்லாண்டுகாலம் வாழ இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
**பாடசாலைச் சமூகம்**
**கிளி/ உமையாள்புரம் அ.த.க.பாடசாலை, ஆனையிறவு, பளை**
(42571)(2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேவாலயங்கள் மீதான தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை அவசியம்

தென்னிலங்கையின் ஹிக்கடுவப் பகுதியில் உள்ள மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது பௌத்த பிக்குகள் தலைமை வகித்த குண்டர் குழுக்களால் கடந்த ஞாயிறு காலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வணக்க ஸ்தலங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களின் வரிசையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் தற்போது இலக்காகியுள்ளன. கடந்த காலங்களில் பள்ளிவாசல்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குக் காரணமானவர்கள் மீது இதுவரை அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. தாக்குதல் நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் மூலம் அவர்களைச் சுலபமாக அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. அப்படி இருந்தும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தீவிரவாத பௌத்த பிக்குகளால் மத ஸ்தலங்கள் தொடர்ந்து தாக்கப்படுவதற்கு. தாக்குதல்காரர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியமையே காரணம். சுமார் 200 பேர் கொண்ட கும்பல் 20க்கும் அதிகமான பௌத்த குருமார் தலைமையில் தமது வழிபாட்டின்போது வந்து தேவாலயங்களை அடுத்தடுத்துத் தாக்கியதாக தாக்குதலுக்குள்ளான தேவாலயங்களின் மதகுருமார்கள் தெரிவிக்கின்றனர். தாக்குதல் நடத்திய பௌத்த பிக்கு ஒருவர் கிறிஸ்தவ மதகுரு ஒருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமை சபைக் கூட்டத்தில் அமெரிக்காவால் கொண்டுவரப்படவுள்ள இலங்கைக்கு எதிரான மூன்றாவது தீர்மானத்தைத் தோற்கடிக்கும் முயற்சியில் இலங்கை தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஆதரவு கேட்டு உறுப்பு நாடுகளுக்குத் தூது அனுப்பிக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி. இப்படியான நிலையில் மதஸ்தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை அனுமதிப்பது இலங்கை தொடர்பான அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளின் அணுகுமுறை கடினப்படவே வழிவகுக்கும்.


ஹிக்கடுவ தாக்குதல்களின்போது பொலிஸாரின் செயற்படாமையை ஒப்புக்கொண்டார் பொலிஸ் பேச்சாளரான அஜித் ரோஹண. பொலிஸ் குழு மிகவும் சிறியதாக இருந்ததால் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தமுடியாது போனதாகக் கூறுகிறார். சம்பவம் நடந்தபோது பொலிஸார் சம்பவ இடத்தில் இருந்தபோதிலும் அவர்கள் பௌத்த குருமாரைத் தடுக்க முயற்சி எதுவும் செய்யவில்லை என்று கிறிஸ்தவ அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன. ஹிக்கடுவையில் தேவாலயங்கள் தாக்கப்படப்போவது குறித்த தகவல் தாக்குதலுக்கு முதல்நாளே பொலிஸாருக்குத் தெரிந்திருந்தது என்று கூறப்படுகிறது. தாக்குதல் நடத்தப்படலாம் என்று தேவாலய மத குருமாரைப் பொலிஸார் எச்சரித்திருந்தனர். தாக்குதல் நடக்கப்போவதான தகவல் ஏற்கெனவே தெரியவந்தபோதிலும் அவர்களால் தாக்குதலை நிறுத்தமுடியாது போனமை கவலைக்குரியது; கண்டிக்கத்தக்கது.

நாட்டில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இந்து. இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதத்தினர் மீதும் மத ஸ்தலங்கள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை பௌத்த அடிப்படைவாத அமைப்புகள் மிகவும் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகின்றன. ஹிக்கடுவையில் தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தியோரில் எட்டுப் பிக்குகள் உட்பட 24 பேரை அடையாளம் கண்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். அடையாளம் காணமுடியுமானால் அவர்களைக் கைது செய்யத் தயங்குவது ஏன்?

தேவாலயங்கள் மீதான தாக்குதல்களின்போது பொலிஸார் சம்பவ இடத்தில் இருந்தும் நடவடிக்கை எடுக்காதமை குறித்து அரசு விசாரணை நடத்த வேண்டும். பிக்குகள் தலைமையிலான குண்டர்கள் சிங்களத்தில் கூச்சலிடுவதும் தேவாலயப் பொருள்களைத் தீயிடுவதும் கல்வீச்சு நடத்துவதும் தனியார் தொலைக்காட்சி நிலையங்களினால் ஒளிபரப்பப்பட்டுள்ளன. தேவாலயங்களின் ஜன்னல்கள், கதவுகள், இசை வாத்தியங்களும் உடைத்து நாசமாக்கப்பட்டுள்ளன.

கௌதம புத்தர் சகல இன மக்களும், மத மக்களும் சமாதானமாக வாழவேண்டும் என்றே போதித்தார். பெரும்பான்மை சிங்கள பௌத்த தேசியவாத எழுச்சியில் புத்தரின் போதனைகள் கூட காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. பௌத்த தேசியவாதம் என்ற பெயரில் பௌத்தம் அல்லாத மதங்கள் தாக்கப்படுகின்றன. சர்வதேச பார்வையில் இலங்கையிலுள்ள பௌத்த பிக்குகள் வன்முறையாளர்களாகக் கருதப்படுகின்றார்கள். தேவாலயங்கள் அமைக்கப்பட்டமை சட்டவிரோதமென்றால் அதற்கு நீதிமன்றம் இருக்கிறது. சட்டத்தைத் தமது கையில் எடுத்துக்கொண்டு செயற்படுகிறார்கள் பௌத்தமத தீவிரவாதிகள். நாட்டில் சட்ட ஆட்சி சீர்குலைந்து வருவதையே இது எடுத்துக் காட்டுகிறது. அரசு [illegible]யாவது இப்படியான தாக்குதல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# அருகிப் போகும் பட்டிப் பொங்கல்



தட்சா.ஜோ

தை மாதம் பிறந்தாலே இந்து மதத்தவர்களது பண்டிகைகளும் வரிசையாக வந்துவிடும். தைப்பொங்கல், தைப்பூசம், பட்டிப்பொங்கல் என அனைத்தும் நாள்கணக்கு வித்தியாசத்தில் வாசற்கதவைத் தட்டும்.

உழவர் திருநாளின் தொடர்ச்சியாகவே பட்டிப்பொங்கலும் கொண்டாடப்படுகின்றது.

உழவர்களோடு உழவனாக வயலில் நின்று கடுமையாக உழைக்கும் மாடுகள் உழவர்களைப் பொறுத்தவரை தெய்வமே.

மாரி மழை பருவம் தப்பி வந்த நிலையில் விவசாயிகள் தற்போது விரக்தியின் விளிம்பில் இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் பொங்கல் பற்றி அதீத ஆர்வம் காட்டியதாக இல்லை. யாழ்ப்பாணத்தில் விவசாயத்தை ஜீவனோபாயமாக கொண்டிருப் போரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களிடம் பட்டிப்பொங்கல் பற்றி பல விடயங்களை அறியக்கூடியதாக இருந்தது.

"உழவுக்கு எங்களுக்கு உதவி செய்யுற பட்டிகளுக்கு நன்றி செலுத்துவதற்காகத்தான் பட்டிப்பொங்கல் கொண்டாடுறம். பட்டிகள் இல்லாம நாங்கள் இல்லை". எனப் பட்டிகளை விட்டுக் கொடுக்காமல் பேசுகிறார் விவசாயி தணிகாசலம்.

நகர்ப்புறங்களிலும் பார்க்கப் பழைமை மாறாத கிராமப்புறங்களில் மண் வாசனையோடு இன்றும் சிறப்பிக்கப்படுகின்றது பட்டிப்பொங்கல். மாடுகளை குளிப்பாட்டி பட்டுக் கட்டி, சந்தனம், குங்குமம் இட்டு அலங்கரித்து பொங்கி படைக்கும் சம்பிரதாயத்தை பண்பாட்டோடு கூடியவாறு செய்து முடிப்பதில் தனி முத்திரை பதிக்கிறார்கள் விவசாயிகள்.

"மாட்டுப்பொங்கல், பட்டிப்பொங்கலாக யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடைபெற்ற காலம் ஒன்றிருந்தது. தை மாத ஆரம்பமே களைகட்டத் தொடங்கிவிடும். பட்டிகளின் கொம்புகளை அழகாகச் சீவி அதுக்கு வர்ணம் தீட்டும் இளைய சமுதாயமொன்று அந்தக் காலத்தில இருந்தது. இப்ப யார் அப்படிச் செய்கிறார்கள்? எங்கட வயசுக்காரர் இருக்கு மட்டும் அதைச் சொல்லிக் கொண்டாவது இருப்பம். நாங்கள் போனால் பட்டிப்பொங்கல் என்ற ஒன்று நடந்ததுக்குரிய தடயமே இல்லாமல் போகும் என்றால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை" என்கிறார் 78 வயதான சிவனேசராசா. சங்குவேலி வயற்பகுதியில் அவரை சந்திக்க முடிந்தது.

பட்டிப் பொங்கல் அன்று வீடுகளில் பசுக்களை வைத்திருப்போருக்கு திருவிழாதான். மாடுகள் குளிப்பாட்டப்பட்டு, கழுத்தைச் சுற்றி மாலை போட்டு முழு அலங்காரங்களுடன் காணப்படும்.

வன்னிப்பகுதில் பல வருடங்களுக்கு முன்னர் பட்டிப்பொங்கல் பல்வகை விளையாட்டுப் போட்டிகளுடன் இணைத்து கொண்டாடப்பட்டிருந்தன. பட்டிகளுக்கு பொங்கிப் படைத்த பின் அவைகளை அவிழ்த்து விட்டுவிடுவார்களாம். அத்தருணத்தில் நீளமான தடிகளில் கொழுக்கி போன்றதொரு கம்பியைக் கட்டி பட்டிகளின் கழுத்தில் இருக்கும் மாலைகளை எடுப்பதையே இலக்காகக் கொண்டு செயற்பட்டுள்ளனர். இதற்குக் காரணம் அந்தக் காலத்தில் பட்டிப்பொங்கலுக்கு மாடுகளுக்கு வடை மாலைகளும், அந்த மாலைகளுடன் பணநோட்டுக்களும் சேர்த்துக் கட்டப்படுவதுதான். இதுக்காகவே ஒரு குழுவாக திரிந்த இளையோரும் இருந்திருக்கிறார்களாம். மாலைகள் அறுக்கபட்ட காளைகளையோ, பசுக்களையோ யாரும் கலைக்க மாட்டார்களாம். இவை எல்லாவற்றையும் இன்று செவிவழிச் செய்திகளாகவே கேட்க முடிகின்றது.

"இந்த விளையாட்டில் கிடைத்த வடைகளை உடனேயே அடிபட்டு சாப்பிட்டம். கிடைச்ச காசை வைத்து இரவு சினிமாவுக்கு போனம்" என்கின்றனர் முதியவர்கள் .

நாம் முன்னோர்களிடம் இவை பற்றிக் கேட்கும்போது அவர்களுக்கு தமது சிறு வயதுக்கால அனுபவங்களைச் சொல்ல பல சுவாரஸ்ய சம்பவங்கள் உள்ளன. எம்மிடம் எமது அடுத்த தலைமுறையினர் கேட்டால் சொல்வதற்கு என்னதான் உள்ளன.


விவசாயக் கலாசாரத்தில் கடவுளாகவும், வேலைக்காரனாகவும் இருப்பது மாடு என்பதுதான் விவசாயிகளின் அதிகாரம். ஒருகாலத்தில் பட்டிப்பொங்கலை முன்னிட்டு மாட்டுவண்டில் சவாரியே நடைபெற்றுள்ளது. இன்றும் நகரத்தை விட்டு விலகிய சில கிராமங்களில் பொழுது போக்குக்காக மாட்டுவண்டில் சவாரி நடைபெறுவதை காணக்கூடியதாக எள்ளது.

புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ளவர்களுக்கு பட்டிப் பொங்கலுக்குரிய தேவை இல்லாததால், தைப்பொங்கலை மட்டும் தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்..

பசுக்களின் உடம்பில் சகல தேவர்களும் ரிஷிகளும் இருப்பதால் அவற்றுக்கு ஒரு நாளேனும் பூஜை செய்ய வேண்டும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. வாக்குக்கு நாயகன் நந்தி, வளங்களின் நாயகி கோமாதா. இவர்களை ஒரே தினத்தில் வழிபடும் நியதியைத்தான் மாட்டுப்பொங்கல் விளக்குகின்றது. மாட்டுப்பொங்கலுக்கு ஏன் பட்டிப்பொங்கல் என்று பெயர் வந்ததெனில், பட்டி என்றால் காமதேனுவின் மகள்- கன்று எனப் பெயர் ஒன்று வழக்கத்தில் உள்ளதாகவும் விவரிக்கின்றனர் புராணக் கதைகளில் தேர்ந்தவர்கள்.

"பட்டிகளைத் தெய்வமென்று கருதி பூஜை செய்பவர்களுக்கு செல்வங்களுக்கு குறைவு இருப்பதில்லை. இந்த முறை மழை பொய்த்தாலும் நாங்கள் கடன் பட்டாவது பொங்குவம்" என்ற கனக சபாபதி தன் வீட்டு வறுமையை மறைத்துப் பேசினார்.

எமது எதிர்கால தலைமுறையினர் பட்டிப் பொங்கலா? அப்படியென்றால் என்ன? என்று கேட்கும்போது, அது 'கௌ' வுக்கு 'தாங்ஸ்கிவிங் பங்சன்' என்று சொல்லாமல் எமக்கான தனித் துவங்களை அடுத்த தலைமுறைக்கும் கொண்டுசெல்ல வேண்டும் என்ற நம்பிக்கையில் பட்டிப் பொங்கல் குறித் தும், அதன் சிறப்பியல்புகள் குறித்தும் எமது இளைய தலைமுறையினருக்கு ஞாபகமூட்ட வேண்டிய கடப்பாடு எமக்குண்டு என்பதை நாம் மறத்தலாகாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி விவேகானந்தரின் 151 ஆவது பிறந்த தின நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி வவுனியா சுத் தானந்த இந்து இளைஞர் சங்கத்துக்கு அருகில் உள்ள அவரது நினைவுத் தூபி அமைந்துள்ள இடத் தில் கொண்டாடப்பட்டது. இதில் கலந்து கொண்ட பிரமுகர்கள் இங்கு காணப்படுகின்றனர். (க-421)


வரராசசிங்கம் தயாபரன் எழுதிய மணிகண்டன் இசை மாலை நூலின் வெளியீட்டு விழா அண்மையில் வவுனியா முத்தையா கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது நூலின் முதற் பிரதியை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடமிருந்து அறநெறிச் செல்வி கு.ஜெயராணி பெற்றுக் கொள்வதையும் அருகில் வடமாகாண சபை உறுப்பினர்களான மா.தியாகராஜா, இ.இந்திரராஜா மற்றும் நூலாசிரியர் ஆகியோரையும் காணலாம். (க-402)



வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் 2013 ஆம் ஆண்டு இறுதிக்கான ஒன்று கூடல் நிகழ்வு நகர விடுதி ஒன்றில் இடம்பெற்றபோது அங்கு வருகை தந்த நத்தார் தாத்தா கரோல் கீதத்திற்கு ஏற்றவகையில் ஆடுகின்றார். (க-402)


வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவக் குழுவினரால் அதன் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜ் தலை மையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. (க-402)


பூநகரியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சுகாதார அதிகாரி பணிமனையின் வெளிப்புறத் தோற்றம். (க-18)

# மின்சாரத்தைக் காணாத கண்ணபுரம் பிரதேசம்

கிளிநொச்சி, ஜன.15

கிளிநொச்சியில் உள்ள கிராமங்கள், வீதிகள் ஆகியவற்றில் மின்சார குமிழ்கள் ஒளி வீசுகின்ற போதிலும் கண்ணபுரம் மண் வீதிப் பிரதேசம் இருளில் மூழ்கிய நிலையில் காணப்படுகின்றது.

தேசிய திட்டம், வடக்கின் வசந்தம், துரித திட்டம் ஆகியவற்றின் கீழ் மின்சார வசதி வழங்கப்படும் எனக் கூறப்பட்ட போதிலும் இந்தப் பிரதேசத்துக்கு மின்சார வசதி இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக சமூக சேவையாளர் ந.வேலுப்பிள்ளை கூறுகையில்;

இலங்கை மின்சார சபை ஸ்கந்தபுரம் சந்தையடி வரை மின்சார விநியோகத்தை மேற்கொண்டுள்ளது.

ஸ்கந்தபுரம் சந்தையில் இருந்து கண்ணபுரம் மண் வீதிக்கிடையிலான ஒரு கிலோ மீற்றர் வரையிலான பிரதேசத்துக்கு மின்சார வசதி வழங்கி உதவுமாறு பல கோரிக்கைகளை வடக்கின் வசந்தம் திட்டமுகாமையாளர், இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிளிநொச்சி அரச அதிபர் எனப் பலருக்கும் கடிதம் வாயிலாகத் தெரிவித்திருந்தோம்.

ஆனால் இதுவரையில் எமது பிரதேசம் தொடர்ந்து இருளில் மூழ்கியுள்ளது.

போரின் பின்னரான அபிவிருத்தி என்றால் முதலில் எமது பிரதேசமான கண்ணபுரம்- மண் வீதிக்கு மின்சாரம் கிடைத்திருக்க வேண்டும்.

மின்சாரம் கிடைக்காத காரணத்தினால் அரச அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், சிறு கைத்தொழிலாளர்கள், தொலைபேசி உரிமையாளர்கள் மற்றும் விவசாய வர்த்தகப் பெருமக்கள் எனப் பலரும் சிரமங்களை எதர் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (க-41)

"_"

**தேசிய திட்டம், வடக்கின் வசந்தம், துரித திட்டம் ஆகிய வற்றின் கீழ் மின்சார வசதி வழாங்கப்படும் எனக் கூறப்பட்ட போதிலும் இந்தப் பிரதேசத்துக்கு மின்சாரம் இது வரை கிடைக்க வில்லை.**

## அனுமதியின்றி இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள்

மாங்குளம், ஜன.15

துணுக்காய்ப் பகுதியிலுள்ள காட்டுப் பகுதிகளில் கால் நடைகள் அனுமதியில்லாது இறைச்சிக்காக வெட்டப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

துணுக்காய் பிரதேச சபையால் துணுக்காய், மல்லாவி ஆகிய பகுதிகளில் இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி கோரல்கள் அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்கு எவரும் விண்ணப்பிக்க வில்லை.

ஆனால் காட்டுப் பகுதியில் மாடுகள் வெட்டப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கும், அங்குள்ள உணவகங்களுக்கும் இறைச்சி விற்பனை இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தப் பகுதியிலுள்ள கால்நடைகள் அடிக்கடி காணாமற் போவதாக கால்நடை உரிமையாளர்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் பல தடவைகள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

மேலும் நோயினால் பீடிக்கப்பட்ட கால் நடைகளும் வெட்டப்பட்டு இறைச்சி விற்பனை இடம்பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சர் கூடிய கவனம் எடுத்து இதனைக் கட்டுப்படுத்த வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-422)

## கழிவுகள் வீசப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள்
### *கிளிநொச்சி குளப் பகுதிகளில்*

அக்கராயன், ஜன.15

கிளிநொச்சிக் குளத்தின் அணைக்கட்டு மற்றும் வான் பகுதிகளில் கழிவுகள் வீசப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பகுதியூடாக வட்டக்கச்சி செல்லும் மக்கள் கழிவுப் பொருள்களிலிருந்து எழும் துர்நாற்றத்தைத் தாங்க முடியாது மூக்கைப் பொத்திய நிலையில் செல்வதைக் காண முடிகின்றது.

அத்துடன் மழை வெள்ளத்தின் போது இந்தக் கழிவுப் பொருள்கள் கிளிநொச்சி வயல் நிலங்களைச் சென்றடைவதால் விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் நா.வை.குகராசா கருத்துத் தெரிவிக்கும்போது:- கரைச்சி பிரதேச சபையினால் தெரிவு செய்யப்பட்ட பரந்தன் உமையாள்புரம் பகுதியில் கழிவுப் பொருள்கள் இடப்பட்டு வருகின்றன.

மேலும் கிளிநொச்சிக் குளத்தின் கீழான பகுதிகளில் பொதுமக்கள் கழிவுகளை வீசுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்றே கூறவேண்டும்- என்றார். (க-18)

"_"

**வட்டக்கச்சி செல் லும் மக்கள் கழி வுப் பொருள்களி லிருந்து எழும் துர்நாற்றத்தைத் தாங்க முடியாது அவலப்படுகின்றனர்.**

## விகாரை அருகில் புதையல் தேடல் ஐவர் சிக்கினர் பொலிஸாரிடம்

வவுனியா, ஜன.15

வவுனியா மகாகச்சக்கொடி பிரதேசத்தில் உள்ள புராதன விகாரைக்கு அருகில் புதையல் தோண்டிய ஐவரை நேற்று முன்தினம் திங்கள் இரவு வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புராதன விகாரை அமைந்துள்ள பகுதியில் பற்றைக்காடுகள் காணப்படும் நிலையில் அங்கு மறைவாக இருந்து புதையல் தோண்டிய வேளையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகத்திற்கிடமான சிலர் புராதன விகாரை அமைந்துள்ள பகுதிக்குச் சென்று வருவதை அவதானித்த அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-402)

## வறுமையின் பிடிக்குள் மீள்குடியமர்ந்த குடும்பங்கள்

அக்கராயன், ஜன.15

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்ந்துள்ள பல குடும்பங் கள் வறுமையின் பிடிக்குள் சிக்கித் தவிப்பதை அவதானிக்க முடிகின்றது. தொழில் வாய்ப்புக்கள் இல்லாமையே இதற்கான முக்கிய காரணமாக விளங்குகின்றது.

மேலும் விவசாய முயற்சிகளும் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்ததால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் தமக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்காக பெறுமதி வாய்ந்த தங்க நகைகளை அடைவு வைத்தும், விற்றும் பெரும் கடனாளிகளாக மாறியுள்ளனர்.

மேலும் இங்கு தென்னிலங்கை மற்றும் பிற நாடுகளைச் சேர்ந் தவர்கள் தொழில்களில் ஈடுபட்டுள்ளதால் உள்ளூர் மக்கள் தொழில்வாய்ப்புக்களை இழந்த நிலையில் காணப்படுகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் மாண வர்களின் இடை விலகலுக்கான முக்கிய காரணமாக வறுமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட் டப்படுகின்றது. (க-18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் ஆதரவு உண்டு.



**இடபம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.



**மிதுனம்:** அவ்வப்போது கோபப்படுவீர்கள். உங்கள் குடும்பத்தினரைப் பற்றி வெளி நபர்களிடம் குறைக் கூறிப் பேச வேண்டாம். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய சில கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப் பிருக்கிறது. உத்தியோகத்தில்கூடுதலாகவேலைபார்க்கவேண்டிவரும்.



**கடகம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் கடினமாக உழைத்து இலாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.



**சிங்கம்:** நீண்டநாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துக்கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.



**கன்னி:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.



**துலாம்:** வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.



**விருச்சிகம்:** ஒருவித படபடப்பு வந்து செல்லும். சிலர் உங்களை மட்டம் தட்டிப்பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் மறைமுக அவமானங்கள் வந்து நீங்கும்.



**தனுசு:** புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரசுக் காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிடைக்கும்.



**மகரம்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்துபணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**கும்பம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். விருந்தினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.



**மீனம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். சகோதரவகையில் நன்மை பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

## நாளை

### தை-03 வியாழக்கிழமை | 16.01.2014

திதி: பூரணை மு.ப.10.47 வரை
நட்சத்திரம்: புநர்பூசம்
பி.ப.01.47 வரை

சுபநேரம்: 08.04-09.34 வரை
இராகுகாலம்:02.04-03.34 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### பயன் கருதாப் பணி

கல்கத்தா பாக்பஜாரில், இராமகாந்த போஸ் தெரு, 57– ஆம் எண் வீட்டில் நடைபெற்ற ஶ்ரீராம கிருஷ்ண மிஷன் நாற்பத்திரண்டாவது கூட்டத்தில் 'பயன் கருதாப் பணி' என்னும் பொருள் பற்றி 20–3–1898 அன்று சுவாமிஜி பின்வருமாறு கூறினார்.

கீதோபதேச காலத்தில் இந்து மதத்தின் இரு பிரிவினருக்கிடையில் பெரியதொரு சொற்போர் நடந்து கொண்டிருந்தது. வேத விதிப்படி யாகம், உயிர்ப் பலி இன்னும் இவை போன்ற கர்மங்களைக் குறைவறச் செய்தலே சமயம் என்பது ஒரு பிரிவினரின் கூற்று. எண்ணற்ற குதிரைகளையும் கால்நடைகளையும் கொல்வதைச் சமயம் என்பதே தவறு என்பது மற்றவர்களின் வாதம். இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்களுள் பெரும்பாலானோர் துறவிகளும் ஞான நெறியைப் பின்பற்றுபவர்களுமே. செயல்களை எல்லாம் விட்டு, தன்னைத் தானே அறியும் ஞானம் பெறுவதே மோட்சத்துக்கு வழி என்பது இவர்களது கொள்கை. பயன் கருதாப் பணி என்ற சீரிய தத்துவத்தை வழங்கிய கீதாசாரியர் இவ்விரு வாதங்களுக்கும் முடிவு கட்டிவிட்டார்.


'பகவத் கீதை மகாபாரதப் போரின் போது தோன்றியதல்ல; பின்னரே இணைக்கப்பட்டது' என்று பலர் கருதுகின்றனர். இது சரியல்ல. மகாபாரதத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கீதோபதேசத்தின் நடை முறையைக் காணலாம். கீதை, மகா பாரதத்தின் ஒரு பகுதியல்ல என்று விலக்க வேண்டுமானால், கீதோபதேசத்தையே அடிப்படையாகக் கொண்ட மகாபாரதத்தின் பல பகுதிகளை நீக்க நேரிடும்.

பயன் கருதாப் பணி என்பதன் பொருள் என்ன? இன்பமோ துன்பமோ தங்கள் மனத்தைத் தொடாதவாறு உழைப்பது என்று பலர் இப்போது நினைக்கின்றனர். இதுவே இதன் உண்மைப் பொருளானால், மிருகங்கள் பயன் கருதாப் பணி செய்வதாகக் கூறலாம். சில பிராணிகள் தங்கள் குட்டிகளையே விழுங்கி விடுகின்றன; இப்படிச் செய்யும்போது அவை சிறிதும் பாதிக்கப்படுவதே இல்லை. கொள்ளைக்காரர்கள் பிறர் பொருளைக் கொள்ளையடிக்கிறார்கள். கொள்ளையிடும் போது நேரும் இன்ப துன்பங்களை அவர்கள் பொருட்டாகக் கொள்வதில்லை. ஆகவே அவர்களும் பயன் கருதாப் பணி புரிகிறார்கள் என்று கூறிவிடலாமா? இதன் பொருள் இதுவானால்; சற்றும் இரக்கமே இல்லாத கல்நெஞ்சம் படைத்த கயவர்களும், பயன் கருதாமல் செயல் புரிபவர்களே என்று கூறலாம். இன்ப துன்பம் சுவருக்கில்லை; கல்லுக்கில்லை. இவை பயன் கருதாப் பணி செய்பவை எனலாமா? முடியாது. இந்தப் பொருளில் கொள்ளப்பட்டால் இந்தத் தத்துவம் தீயோர் கையில் சிக்கிய ஒரு சிறந்த ஆயுதமாகிவிடும். இவர்கள் தீய செயல்கள் செய்து கொண்டே இருப்பார்கள்; பயன் கருதாமல் செயல் புரிபவதாகச் சொல்வார்கள். இதுவே இந்தத் தத்துவத்தின் பொருளானால், கீதை பயங்கரமான ஒரு தத்துவத்தைப் போதித்துள்ளது என்றே கொள்ள வேண்டும். இதன் பொருள் அது அல்ல என்பது நிச்சயம். மேலும் கீதோபதேசத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களின் வாழ்க்கையை நாம் ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் வேறு வகையில் வாழ்ந்திருப்பதைக் காண்போம். பீஷ்மரையும் துரோணரையும் அர்ஜுனன் போரில் கொன்றான். எனினும் அவன் சுயநலம், ஆசை, தவறான ஆவல் இவற்றைக் கோடி முறை தியாகம் செய்திருக்கிறான்.

## நடு வீதியில் குளியல்

வளர்ந்து வரும் காலகட்டத்துக்கு ஏற்றவாறு மக்கள் வித்தியாசமான முறையில் போராட்டம் நடத்துகின்றனர்.

பிரிட்டனைச் சேர்ந்த ரோசி மோர்சன் என்பவர், மிக வித்தியாசமான முறையில் அதாவது நடு வீதியில் குளித்து தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.



அவர் தென் ஆபிரிக்கா சென்ற போது, கிராமப்புறச் சாலைகள் படுமோசமாக இருந்ததைப் பார்த்துள்ளார். ஓர் இடத்தில் சாலையில் மிகப்பெரிய பள்ளம் ஏற்பட்டு தண்ணீர் தேங்கி நின்றிருந்தது.

இதனைப் பார்த்ததும், தேங்கி நின்ற தண்ணீரில் குளித்து விட்டு அதனைப் படமெடுத்துக் கொண்டார். பிரிட்டனுக்குத் திரும்பிச் சென்றதும் புகைப்படத்தை இணையத்தில் வெளியிட்டு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். மோசமான சாலைகளால் 20 நிமிடத்தில் பயணிக்க வேண்டிய தூரத்தை கடக்க ஒரு மணி நேரத்தைச் செலவிட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | 3 | | | | 9 |
| | 4 | 3 | | | | 2 | 6 | |
| 9 | | | | 2 | 6 | 5 | | |
| 1 | | 7 | | 5 | | 6 | 9 | |
| | 9 | 4 | | | | 8 | 3 | |
| | 6 | 2 | | 8 | | 4 | | 5 |
| | | 9 | 8 | 7 | | | | 6 |
| | 3 | 1 | | | | 9 | 8 | |
| 8 | | | | 1 | | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 7 | 5 | 8 | 4 | 2 | 1 | 3 |
| 5 | 8 | 2 | 1 | 3 | 9 | 7 | 6 | 4 |
| 1 | 3 | 4 | 2 | 7 | 6 | 9 | 8 | 5 |
| 8 | 5 | 1 | 6 | 9 | 7 | 3 | 4 | 2 |
| 7 | 2 | 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 9 |
| 3 | 4 | 9 | 8 | 2 | 5 | 6 | 7 | 1 |
| 4 | 7 | 3 | 9 | 5 | 8 | 1 | 2 | 6 |
| 6 | 1 | 8 | 3 | 4 | 2 | 5 | 9 | 7 |
| 2 | 9 | 5 | 7 | 6 | 1 | 4 | 3 | 8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி வங்கி ஜன்னல் உடைப்பு

அம்பாறை,ஜன.15

அம்பாறை, நாவிதன்வெளி சமுர்த்தி வங்கியின் பின்புறமுள்ள ஜன்னல் திருடர்களால் நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு உடைக்கப்பட்டுள்ளது என்று சமுர்த்தி வங்கி முகாமையாளர் சவளக்கடை பொலிஸில் முறையீடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது அங்கிருந்து எந்தவொரு ஆவணங்களும், பணமும் எடுத்துச் செல்லப்படவில்லை என்று தெரிய வந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சவளக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## களை கட்டியது தைப்பொங்கல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொங்கல் நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை களை கட்டியிருந்தது. மக்கள் பொங்கல் பொங்கி ஆலய வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதேவேளை தைப்பொங்கல் விசேட நிகழ்வு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதமர் தி.மு.ஜெயரட்ண, மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாகாணசபை வேட்பாளர் தெரிவு 20 இல்

கொழும்பு,ஜன.15

மேல் மாகாண சபை மற்றும் தென் மாகாண சபைகளின் தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் தெரிவுச் சபை எதிர்வரும் 20ஆம் திகதி கட்சித் தலைமையகத்தில் கூடவுள்ளது என்று கட்சியின் பொதுச் செயலர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

வேட்பாளர்களாக வேட்புமனுவை தாக்கல் செய்ய விரும்புபவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்குச் சென்று வேட்பாளர் தெரிவுக்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை வேட்பாளர் தெரிவுக்காக இதுவரை சுமார் 200 இற்கும் மேற்பட்ட புதுமுகங்கள் விண்ணப்பித்துள்ளனர். (ச)

## தொழிலாளரைப் பாதுகாக்க இருநாட்டு உடன்படிக்கை

கொழும்பு, ஜன.15

இலங்கை அரசு, சவூதி அரேபியாவுடன் முக்கிய தொழில்சார் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான தொழில், இடம், கூடுதல் சம்பளம் மற்றும் உரிமைப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்களுக்கு இந்த இருநாட்டு ஒப்பந்தம் அடிப்படையாக அமைந்துள்ளது என்று இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணி யகம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அதிகளவிலான தொழிலாளர்கள் சவூதி அரேபியாவுக்கே செல்கின்றனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் புள்ளி விவரங்களின் படி, இலங்கைத் தொழிலாளர்கள் சுமார் நாலரை லட்சம் பேர் சவூதியில் உள்ளனர். அவர்களிலும் பெரும்பாலானவர்கள் பெண்கள்.

க்டந்த காலங்களில் வீட்டுப் பணிப்பெண்கள் பலர் சவூதி உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வீட்டு எஜமானர்களால் சித்திரவதைகளுக்கு உள்ளாகி இலங்கை திரும்பியுள்ளனர்.

பெண்கள் பலர் மர்மமான முறையில் உயிரிழந்து சடலங்களாகக் கூட இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்ததாக உறவினர்கள் முறையிட்டுள்ளனர். (ச)

# அரசை வீட்டுக்கு அனுப்ப ஓரணியில் இணையுங்கள்

*அனைத்துக் கட்சிகளையும் அழைக்கிறார் மங்கள*



கொழும்பு,ஜன.15

எதிர்வரும் ஜூன் மாதம் ஜனாதிபதித் தேர்தலையும் அதன் பின்னர் பொதுத் தேர்தலையும் நடத்துவதற்கு அரசு இரகசியமாக பேச்சுக்களை நடத்தி வருகிறது.

இந்தத் தருணத்தை பயன்படுத்தி அரசை வீட்டுக்கு அனுப்ப அனைத்து கட்சிகளும் பேதங்களை மறந்து ஓரணியில் இணைய வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.தே.கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றி போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டு தேர்தல்கள் ஆண்டாக அமையப் போகின்றது. மேல் மாகாண சபை மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான திட்டங்களை நாம் தயாரித்துள்ளோம்.

நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஜூன் மாதம் நடத்த அரசு திட்டமிடுகிறது.

அதன் பின்னர் பொதுத் தேர்தலையும் நடத்துவதற்கு இரகசியமாக திட்டங்கள் தயாரிக்கப்படுவதோடு இது தொடர்பில் அரசு இரகசியமாகப் பேச்சுக்களை நடத்தி வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

ஜே.வி.பி., தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளும் அரசியல் பேதங்களை மறந்து ஓரணியில் இணைய வேண்டும்.

நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் தேர்தலில் இந்த அரசைத் தோல்வியடையச் செய்ய வேண்டும் - என்றார். (ச)

## துமிந்த சில்வா சிங்கப்பூர் பயணம்



கொழும்பு, ஜன.15

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சிகிச்சைக்காக சிங்கப்பூருக்குப் பயணமாகியுள்ளார்.

முல்லேரியா பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்திருந்த துமிந்த சில்வா, சிங்கப்பூரின் மவுன் எலிசபெத் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று நாடு திரும்பியிருந்தார்.

இந்த நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக மீண்டும் துமிந்த சிங்கப்பூருக்குப் பயணம் செய்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி அவர் நாடு திரும்பவுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் துமிந்த சில்வா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## போதைப்பொருள் குறைந்தது; பொலிஸார் இடைநிறுத்தம்

கொழும்பு.ஜன.15


கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் குறைந்த காரணத்தால் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட போது அதன் அளவு குறைந்து காணப்பட்டது.

2.4 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அதனை நீதிமன்றில் சமர்ப்பித்தபோது அதன் எடை 2.4 மில்லி கிராமாக காணப்பட்டது.

இவ்வாறு நீதிமன்றில் போதைப் பொருளை சமர்ப்பித்த நாவலப்பிட்டி ஊழல் மோசடி தவிர்ப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் நீதிமன்ற சார் ஜன்ட் ஆகியோர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

2 கிராமுக்கு மேல் எடையுடைய ஹெரோயின் போதைப்



பொருள் தொடர்பான வழக்குகளே உயர் நீதிமன்றில் விசாரணை செய்யப்படும்.

மில்லி கிராம் அளவிலேயே ஹெரோயின் போதைப் பொருள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தால், அதனை வைத்திருந்த நபருக்கு 6000 ரூபா அபராதம் விதித்து நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் 2.4 கிராம் எடையுடைய போதைப் பொருள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மனித உரிமை ஆணைக்குழு அதிகாரங்கள் அதிகரிப்பு

கொழும்பு,ஜன.15

மனித உரிமை ஆணைக் குழுவின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஆணைக் குழுவின் தலைவர் பிரதீபா மஹானாமாஹேவா தெரிவித்தார்.

மனித உரிமை ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் உயர் நீதிமன்றம் ஊடாக அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நலன்களைக் கண்காணிக்கும் அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் வகையில் சட்டத் திருத்தம் செய்யப்பட உள்ளது.

தேசிய ரீதியில் விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கக் கூடிய வகையில் திருத்தம் செய்யப்பட உள்ளது.

தேசிய மனித உரிமை ஆணைக் குழுவின் அதிகாரங்களை



வலுப்படுத்துவது குறித்த 12 பரிந்துரைகள் முன்வைக்கப் பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். இந்தப் பரிந்துரைகள் ஜனாதிபதி செயலகம் மற்றும் நீதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மேல் மாகாணசபை தேர்தலில் களமிறங்கத் தயார்

கொழும்பு.ஜன.15

மேல்மாகாணசபைத் தேர்தலில் களமிறங்கத் தான் தயாராக உள்ளார் எனத் தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளர் ஹிருணிகா பிரேமசந்திர, முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் எதிர்பார்ப்பு தனக்கு இல்லை என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நியமனம் பெற்றுக் கொண்ட ஹிருணிகா பிரேமசந்திர தனது அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் மத்திய கொழும்பு அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன். இதனூடாக எனது அரசியல் பிரவேசத்தை ஆரம்பிக்கவுள்ளேன்.

நடைபெறவிருக்கின்ற மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளேன்.

எனினும் முதலமைச்சர் வேட்



### ஹிருணிகா அறிவிப்பு

பாளராக போட்டியிடும் எதிர்ப் பார்ப்பு என்னிடம் இல்லை. ஏனெனில் இப் போதுதான் நான் அரசியலுக்குள் பிர வேசிக்கின்றேன்.

அதனால் முதல மைச்சர் வேட்பாளராகப் போட்டியிட நான் எதிர்ப்பார்க்கவில்லை.

வேட்புமனுத் தாக்கல் திகதி அறிவிக்கப்பட்டு வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் தேர்தலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நான் திட்டமிட்டுள்ளேன். அதன் பின்னர் மக்கள் சந்திப்புகளை நடத்தத் திட்ட மிட்டுள்ளேன் - என்றார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறையில் மாட்டுப்பொங்கல் விழா

வடமராட்சி,ஜன.15

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் (சிவன்) ஆலய முன்றிலில் மாட்டுப் பொங்கல் விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற வுள்ளது. வடமராட்சி லயன்ஸ் கழகமும் சிவன் கோயில் நிர்வாகமும் இணைந்து இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

பருத்தித்துறை நகரையும்,அதனை அண்டிய இடங்களிலும் மாடுகளை வளர்ப்போர் இந்த விழாவுக்கு தமது மாடுகளையும் கொண்டு வரவுள்ளனர். (ஓ-173)

## வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம் கொட்டடியில் அமைந்துள்ள அருளாளர் யோசவ்வாஸ் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது. தினமும் மாலை 4.30 மணிக்கு செபமாலையும் தொடர்ந்து திருப்பலியும் இடம் பெறும். எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் நடைபெறும். (ந-51)

## முறைசாராக் கல்வி பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் 2014 ஆம் ஆண்டில் நடத்தப்பட வுள்ள பயிற்சி நெறிகளுக்கு பயிலுநர்கள் மற்றும் போதனாசிரியர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

கணினி, தையல், மணப் பெண் அலங்காரம், கேக் ஐசிங், வீட்டு மின்சுற்று அமைத்தல், குழாய் பொருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தர, உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்கள் அல்லது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பயிற்சி நெறிகளைப் போதிக்கக் கூடிய போதனாசிரியர்களிடம் இருந்தும் விண்ணப் பங்கள் கோரப் பட்டுள்ளன. பயிலுநர்கள் மற்றும் போதனாசிரியர்கள் சுய மாகத் தயாரித்த விண்ணப்பத்தை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலு வலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல் விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித் துள்ளார். பயிற்சிகள் நடைபெறும் பாடசாலைகளின் விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## சனசமூக நிலைய கட்டடத் திறப்பு

அச்சுவேலி,ஜன.15

அச்சுவேலி தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா சன சமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழாவும் விக்கினேஸ்வரா பாலர் முன்பள்ளி அங்குரார்ப் பண விழாவும் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பொ.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவு ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர் ப.பத்மகுமார, வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் அ.உதயகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினராக அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் பு.சாந்தரூபனும் கலந்து கொள்வர். (ஓ-11)

## மின்சார சபை கட்டடம் திறந்து வைப்பு

பருத்தித்துறை கல்லூரி வீதியில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட இலங்கை மின்சார சபையின் பருத்தித்துறை பிரதேச அலுவலகம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனைத் திறந்து வைப்பார். நிகழ்வில் இலங்கை மின்சார சபை உயர் அதிகாரிகள் உட்பட வடபிரதேச மின்சார சபை முகாமையாளரும் கலந்து கொள்வார்கள். இலங்கை மின்சார சபை பருத்தித்துறை பிரதேச அலுவலகம் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இயங்கிய அதே இடத்தில் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 140 லட்சம் ரூபா செல வில் மாடிக் கட்டடமாக இந்த அலுவலகம் நிர்மாணிக் கப்பட்டுள்ளது. இதற்கான காணியை பருத்தித்துறை நகர சபை வழங்கியிருந்தது. (ந-173)

## நூற்றாண்டு விழா

வலி.தென்மேற்கு,ஜன.15

புங்குடுதீவு ஸ்ரீசித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை மாலை என இரு அமர்வுகளாகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் என்.கலைநாதன் தலைமையில் ஆரம்பமாகும் கலை நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை ஆளுநர் அலுவலக செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.எஸ்.சத்தியசீலன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண்குயின்ரஸ், வேலணைப் பிரதேச சபை தவிசாளர் எஸ்.சிவராசா, ஸ்தாபகரின் புதல்வன் வைத்தியகலாநிதி வி.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர்.

பேராசிரியர் கே.குகபாலன் தலைமையில் நடைபெறும் மாலை நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பி.பாலசுந்தரம்பிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, வேலணை பிரதேச செயலர் திருமதி எஸ்.மஞ்சுளாதேவி, கோட்டக் கல்விப் பணிப்பாளர் பி.சிவானந்தராசா, ஸ்தாபகரின் புதல்வி முன்னாள் ஆசிரியை திருமதி மீனாச்சி சிங்கராசா ஆகியோர் கலந்துகொள்வர். (ந-115)

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி றெஜினா கூஞ்ஞ - தி.கு



தலைமன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி றெஜினா கூஞ்ஞ நேற்று (14.01.2014) செவ்வாய்க்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.01.2014) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபின்னர், மன்னார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்,
மாகாணத் தலைவி,
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(42368) (12)(3.6)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சின்னையா குணரட்ணம்
(லக்கி கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

மண்ணுலகில் 25.05.1937 விண்ணுலகில் 22.01.2008

அன்பின் தெய்வமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்து எம்மை
விட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஆறு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம் மனதை விட்டு நீங்காதையா

லக்கி கிறீம் ஹவுஸ்
"செல்வச்சந்நிதி வாசா"
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
குடும்பத்தினர்.
(42361)(2.6.3)

## மரண அறிவித்தல்



திருமதி சிவன் உமைச்செல்வி இராசப்பா

யாழ்.ஊரெழு மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கொ/வெள்ளவத்தை, 121/3, மெனிங் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவன்உமைச்செல்வி இராசப்பா 13.01.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பெருமாள்பிள்ளை - வன்னித்தம்பி அன்னலக்சுமி (சிவபாக்கியம்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை சரவணமுத்து - சுந்தர் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சரவணமுத்து இராசப்பாவின் (உத்தரவு பெற்ற நில அளவையாளர், நீதிமன்ற ஆணையாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்) அன்புத் துணைவியும், இராசப்பா செல்வராசா (லண்டன்), மிர்நாளினிதேவி (கனடா), லக்ஸ்மிஹாசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.01.2014) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலார்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளின் பின் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[illegible]
077 732 8370
(சி10582) (12)(3.6)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 16.12.2013 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

திருமதி
### கிருஷ்ணவேணி நவரட்ணசாமி

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.01.2014) புதன்கிழமை காலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அந் நிகழ்விலும் தொடர்ந்து மு.ப. 11 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சி.நவரத்தினசாமி (கணவர்)
பிள்ளைகள் -விஷ்ணுகாந், அர்ச்சனா
ந.ஆனந்தன் (பெறாமகன்-UK)
ஆ.ராஜீ (மருமகன்-UK)

துன்னாலை,
கரவெட்டி. (சி/10798)(3.6.4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### செல்லம்மா நடேசு

தோற்றம் 28.10.1935
மறைவு 26.01.2013

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகங் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த தெய்வமே!
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்

சம்பியன் லேன்,
நந்தாவில், கொக்குவில்.
குடும்பத்தினர்.
(C1101)(2.6.3)

## ஆறாம் ஆண்டு நினைவு நாள்



தாயின் மடியில்
12 ★ 06★1974

ஆண்டன் அடியில்
22 ★ 01★2008

### அமரர் செல்வராசா துளசிதாசன்
(Tulasi: cable T.V. உரிமையாளர்)

திதி-தை மாத பூரணை 15.01.2014 புதன்கிழமை

சின்ன தொரு புன்சிரிப்பு
அமைதியான பேச்சு
எளிமையின் வடிவு - எல்லாம்
உன்னிடத்தில் கண்டோம் அண்ணா!
அன்புடனே அரவணைக்கும் அம்மாவும்
ஆசையுடன் வரவேற்கும் அப்பாவும்
பாசமுடன் பேசிச் சிரிக்கும் சகோதரர்களும்
உருகியழ வைத்து விட்டு ஓடி விட்டாய்.....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.077 314 4991 (43058) (2.6.3)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இலங்கை - இந்தியா இன்று பேச்சு

## நேற்று டில்லி பறந்தார் அமைச்சர் ராஜித

மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்திய - இலங்கை அமைச்சர்கள் டில்லியில் இன்று பேச்சு நடத்தவுள்ளனர். இந்தியா சார்பில் மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத்பவாரும், இலங்கை சார்பில் கடற்றொழில் நீரியல் வளங்கள் துறை அமைச்சர் ராஜித சேனாரட்னவும் பேச்சில் பங்கேற்கின்றனர். இந்தப் பேச்சில் பங்கேற்பதற்காக அமைச்சர் ராஜித சேனாரட்ன நேற்றுக்காலை டில்லி பயணமானார்.

மன்னார் வளைகுடாவில் மீன் பிடிப்பதில் நிலவும் எல்லைப் பிரச்சினை தொடர்பாக இருவரும் கலந்துரையாடவுள்ளனர். இதன் தொடர்ச்சியாக, தமிழக மீனவர்களும், இலங்கை மீனவர்களும் எதிர்வரும் 20 ஆம் திகதி பேச்சு நடத்த விருக்கின்றனர். இந்தியா செல்லும் அமைச்சர் ராஜித, இந்திய மீன்வளத் துறை அமைச்சர், தமிழக மீனவர்கள் என பல தரப்பினரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இதேவேளை, இம்மாதம் 20 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ள தமிழக - இலங்கை மீனவர்கள் கலந்து கொள்ளும் பேச்சு தொடர்பான விவரப் பட்டியல் குறித்து விரைவில் அதிகார பூர்வ அறிவிப்பு வெளியாகும் என இந்திய கப்பல் துறை அமைச்சர் ஜி.கே. வாசன் சென்னையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் வாசன் செய்தியாளர்களிடம் பேசிய போது,

சிறையில் உள்ள இரு நாட்டு மீன வர்களையும் பரஸ்பரம் விடு தலை செய்யும் நடவடிக்கைகளில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது. மீனவர் பிரச்சினை என்பது அவர்களின் வாழ்வாதாரம் தொடர்பானது என்பதை அனைவரும் உணரவேண்டும். இதில் அரசியல் காரணங்களைப் புகுத்தக் கூடாது. இது குறித்து இலங்கை அமைச்சர் ஒருவர் தெரிவித்த கருத்து கண்டனத்துக்குரி யது.

கச்சதீவு மீட்கப்பட வேண்டும் என் பதில் தமிழக காங்கிரஸுக்கு மாற்றுக் கருத்து இல்லை. இதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்துத் தான் கருத்துத் தெரிவிக்கிறோம். 1967ஆம் ஆண்டிலிருந்து காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துத்தான் திராவிடக் கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன. எனவே காங்கிரஸ் தனித்துவிடப்பட்டுள்ளதாக கூறப்படுவது சரியானதல்ல. 2004 ஆம், 2009 ஆம் ஆண்டு மக்கள வைத் தேர்தல்போல் அகில இந்திய அளவில் வெற்றிக் கூட்டணியை கட்சித் தலைமை அறிவிக்கும். இந்த இரண்டு முறையும் கூட்டணியில் இருந்த தி.மு.க. மீண்டும் காங்கிரஸ் கூட்டணியில் இணையுமா என்பது குறித்து தற் போது கூற இயலாது.

காங்கிரஸ் கட்சி மட்டுமே கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பரவியுள்ள தேசியக் கட்சி. தேர்தல்களில் போட்டியிட விரும்புவர்களிடம் மனு வாங்குவது காங்கிரஸ் நடைமுறை அல்ல - எனத்தெரிவித்துள்ளார். (த-சி)

# ஜெனிவாவில் இலங்கை இலகுவில் தப்பமுடியாது

## மஹிந்தவின் வரலாற்றுத் தவறே காரணம் என்கிறது தேசப்பற்று இயக்கம்

"13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக ஒழிக்காது வடக்குத் தேர்தலை நடத்தியமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்த மாபெரும் தவறாகும். இதனாலேயே இன்று சர்வதேச அழுத்தங்களுக்கு அவர் முகங் கொடுக்க வேண்டிய நிலை நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது."

இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர தெரிவித்தார். அடுத்த மார்ச் மாதம் நாட்டிற்கு சர்வதேச அழுத்தங்கள் வருவதை யாராலும் தடுக்க முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மார்ச் மாதக் கூட்டத் தொடரில் இலங்கையின் நிலை குறித்தும், கடந்த ஞாயிறன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்தமை குறித்தும் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அரசு தற்போது பெரும் பிரச்சினை களை சந்தித்து வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதத்தைக் கொண்டு செய்ய முடியாமல்போனதை வடமாகாணசபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் அரசியலைக் கொண்டு செய்யப் பார்க்கிறார். இவர் ஒரு நீதிபதி யாகச் செயற்பட்டிருந்தாலும் நாட்டில் பிரிவினைவாதத்திற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். குறிப்பாகக் கூறினால் புள்ளிகளற்ற ஒரு புலிபோன்றவரே இந்த விக்னேஸ்வரன். இதற்கு மேற்குலக நாடுகளும் பக்கபலமாக இருக்கின்றன.

இதுபோன்ற பல பிரச்சினைகளுக்குக் காரணம் நமது நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவேயாகும். ஏனென்றால், இவர் வடமாகாணசபைத் தேர்தலை அவசரப்பட்டு வைத்திருக்கவே கூடாது. தேர்தலை வைப்பதற்கு முன் பாக 13 ஆவது திருத்தத்தை முற்றாக இல்லாதொழித்திருக்க வேண்டும். வடக்கிலுள்ள மக்களின் அத்தியாவசியத் தேவைகளை முதலில் கருத்தில் கொண்டு அபிவிருத்திகளை செய்திருக்க வேண்டும்.

ஆனால், ஜனாதிபதியோ இவ்வாறு செய்யாது மேற்குலக நாடுகளின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற பிரம்மையில் அவசரப்பட்டு வடமாகாணசபைத் தேர்தலை நடத்தி மாபெரும் வரலாற்றுத் தவறை செய்து விட்டார். இறுதியின் மேற்குலகத்தினர் எமது நாட்டை எதிர்த்ததுடன், நாட்டிற்கு எதிராக ஜெனிவாவில் பிரேரணையையும் கொண்டு வரவுள்ளனர்.

இந்நிலையில் தற்போது விக்னேஸ்வரன் அரசியல் கைதிகளை சந்தித்துள்ளமையானது மேலும் நாட்டை அழுத்தத்திற்குள் கொண்டுசெல்லவுள்ளது. இதற்கெல்லாம் ஜனா திபதி மஹிந்தவே முழுக் காரணம். இவர் முதலில் மக்களை உணர்ந்து செயற்பட்டிருக்க வேண்டும். அடுத்த மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடரில் இலகுவில் தப்பிக்க முடியும் என அரசு நினைத்துக் கூட பார்க்கக் கூடாது" என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சர்வதேச

இந்தத் தகவலை காணாமற் போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் நேற்று மாலை 'உதயனி'டம் உறுதிப்படுத்தினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் ஊடகவியலாளர்கள், இளைஞர், யுவதிகள், குடும்பஸ்தர்கள், குடும்பப் பெண்கள் எனப் பல ஆயிரக்கணக்கானோர் காணாமற் போயுள்ளனர். மஹிந்த அரசின் ஆட்சியில்தான் அதிகமானோர் காணாமற்போயுள்ளனர் என்பது உலகறிந்த உண்மை.

எனவே, இந்த அரசு காணாமற்போனோரை மீட்டுத் தரும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச சமூகம் தான் இதில் உடன் தலையிட வேண்டும்; காணாமற்போனோரை மீட்டுத்தர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். படைகளினால கடத்தப்பட்டவர்கள், இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் மற்றும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்கள், அரசின் அநீதிகளை ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணர்ந்த போது கடத்தப்பட்டவர்கள் ஆகியோருக்கு என்ன நடந்தது என்பது இதுவரைக்கும் தெரியாமல் உள்ளது.

இவ்வாறு காணாமற்போனோரில் பெரும்பாலானோர் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களின் உறவுகள் உள்ளன.

இவ்வாறான நிலையில், காணாமற்போனோர் தொடர்பான முறையீடுகளை விசாரிப்பதற்கான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும் என்று அரசு அறிவித்துள்ளது.

அரசின் இந்த விவரத் திரட்டில் எமக்கு நம்பிக்கை இல்லை.

ஏனெனில், எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா மாநாட்டில் தமக்கு வரக்கூடிய நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே இந்த விவரத் திரட்டில் அரசு ஈடுபடவுள்ளது.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றி காலத்தைக் கடத்துவதில் மஹிந்த அரசு குறியாகவுள்ளது.

எனவே, காணாமற்போனோருக் கும் அவர்களைத் தேடும் அவர்களின் உறவுகளுக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நீதி கிடைக்க வேண்டும் என்பதில் காணாமற்போனோரைத் தேடியறியும் குழு உறுதியாகவுள்ளது.

இந்நிலையில், வடக்கு, கிழக்கு உட்பட நாடு பூராகவும் காணாமற்போன ஊடகவியலாளர்கள், இளைஞர், யுவதிகள், குடும்பஸ்தர்கள், குடும்பப் பெண் களை மீட்டுத் தருமாறு கோரியும், காணாமற்போனோர் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானத்தை எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றுமாறு வலியுறுத்தியும் இம்மாத இறுதியில் கொழும்பில் மாபெரும் போராட்டம் நடத்த நாம் தீர்மானித்துள்ளோம்.

சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நடைபெறவுள்ள இந்த ஜனநாயகப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு காணாமற்போனோரின் விடுதலைக்காகக் குரல் கொடுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் நாம் அழைப்பு விடுக்கவுள்ளோம் - என்றார். (த-சி)

### நிகழ்வின்

செய்யப்பட்டதாக முள்ளியவளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.திலகரட்ன தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவமோகனால் முள்ளியவளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டன. இலவசக் கண்ணாடி விநியோகம் மற்றும் முன்னாள் போராளிகளின் கலை நிகழ்சிகள் என்பன இதில் இடம்பெற்றன.

முன்னாள் போராளிகளில் விசேட தேவைக்குரியவர்களின் கலை நிகழ்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அங்கு வந்த பொலிஸார் நிகழ்வை நிறுத்துமாறு தெரிவித்ததாகவும், தாம் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாமல் தொடர்ந்து நிகழ்வை நடத்தியதாகவும் தெரிவித்த மாகாணசபை உறுப்பினர் சிவமோகன், நிகழ்வின் இறுதியில் மண்டபத்துக்குள் புகுந்த பொலிஸார் நிகழ்வை குழப்பிவிட்டனர் எனவும் கூறினார்.

அத்துடன் பொலிஸாருடன், சிவில் உடை தரித்த இராணுவத்தினர் 20 பேர் மற்றும் புலனாய்வாளர்கள் 50 பேர் வரை அங்கு வந்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வை ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்தவரின் ஒளிநாடாவை(வீடியோ கசட்) முள்ளியவளைப் பொலிஸார் பறித்துச் சென்றதாகவும் மாகாண சபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திலகரட்ணவை தொடர்பு கொண்டு கேட்டபோது, இவ்வாறான சம்பவங்களை அனுமதிக்க முடியாது. அத்துடன் விசேட தேவைக்குரிய முன்னாள் போராளிகளைப் பயன்படுத்தி இலங்கை அரசுக்கு எதிராகச் சர்வதேச ரீதியில் செயற்பட முனைவதை அனுமதிக்க முடியாது என அவர் 'உதயனி'டம் தெரிவித்தார். (த-5)

### வீதியில்

கள், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றில் வந்த இளைஞர்கள் சிலரே தைப்பொங்கல் தினமான நேற்று இந்தச் சாகசத்தை நிகழ்த்தினர்.

வேகமாக வந்த ஓட்டோக்கள் ஒரு பக்கம் சரிந்து இரண்டு சில்லுகளில் ஓடியும், மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்து முன் பகுதிச் சில்லை மேலே உயர்த்தி ஒரு சில்லில் ஓடியும் இவர்கள் வீதியில் வேடிக்கை காட்டினர்.

இதனால் பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணம் செய்த வாகனங்களும் பருத்தித்துறையில் இருந்து யாழ். நோக்கிப் பயணித்த வாகனங்களும் விபத்து ஏற்படும் என்ற அச்சம் காரணமாக வீதியோரங்களில் தரித்து நின்றதை அவதானிக்க முடிந்தது.

சிவில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் இடம் பெற்ற இந்த சாகசத்தை அவ் வீதியால் சென்ற வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரும் கண்டும் காணாதது போன்று சென்றனர் என்று வீதியில் காத்திருந்த மக்கள் தெரிவித்தனர்.

அனுமதியின்றி பிரதான வீதிகளில் இவ்வாறு சாகசங்களைக் காட்டும் இளைஞர்களின் அடாவடியை அடக்குவதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-11-400)

### கொக்கிளாய்

கின்றன. இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் தொடர்ச்சியாகக் கைது செய்து வருகின்ற போதும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அங்கு தொடர் கின்றன.

கடந்த வாரம், புல்மோட்டையிலிருந்து கொக்கிளாய் கடல் நீரேரியில் மீன்பிடிக்க வந்திருந்த மீனவர்கள், தடை செய்யப்பட்ட கூட்டுவலை யைப் பயன்படுத்தியுள்ளனர். தகவலறிந்த கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் பொலிஸாரின் உதவியுடன் கூட்டுவலை பயன்படுத்தி மீன்பிடித்த மீனவர்களிடமிருந்து 51 கூட்டு வலைகளைப் பறிமுதல் செய்தனர்.

இவ்வாறு சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடருமானால் அவர்கள் கைது செய்யப்படுவதுடன் மீன்பிடி உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்படும் என்று கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-5)

### கனேடியக்

பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டுள்ளனர்.

நண்பகலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை இவர்கள் சந்தித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் பொருளாதார நிலைமைகள் தொடர்பிலேயே இவர்கள் அதிகளவு கவனம் செலுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

### வடக்கு

ஆட்சி அமைத்து நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நாளை வியாழக்கிழமையே முதல் தடவையாக வடக்கு மாகாண அரச நிர்வாக அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளார்.

இழுபறி

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட வடக்கு மாகாண சபைக்கும், திணைக்களத் தலைவர்கள், செயலாளர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் தொடர்ச்சியாக நீடித்து வருகின்றன. வடக்கு மாகாண ஆளுநர், மாகாணசபை நிர்வாகத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றது.

இந்த நிலையில் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு முதலமைச்சர் அலுவலகத்தில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அலுவலகம் திறப்பு

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் அலுவலகம் நாளை வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. 26, சோமசுந்தரம் அவனியூவில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது. (த-5)

### இன்றும்

மெதுவான காற்றுடன் மழை பெய்யக்கூடிய காலநிலை நிலவுகிறது. எனினும் கடும் காற்று, கடற்கொந்தளிப்பு இருக்காது என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணிவரை 11.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் நேற்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை 0.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் திருநெல்வேலியில் பதிவாகியுள்ளது.

இந்த வருடத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.30 மணி வரை 87.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன.15

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.



அதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈஸ்வரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் கோப்பாய் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# நவஜீவன்ஸ்-விண்மீன் அணிகள் இறுதியாட்டத்தில் பலப் பரீட்சை




யாழ்ப்பாணம், ஜன.15

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெல்லியடி செலான் வங்கி வடமராட்சி கழகங்களுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்துக்கு உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும், விண்மீன் அணியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்த அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன.

இதில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் சக்கோட்டை சென்சேவியர் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. ஆட்டம் தொடங்கியதில் இருந்து நவஜீவன்ஸ் அணி ஆட்டத்தை தன் வசப் படுத்தியது.

நவஜீவன்ஸ் அணியின் பந்துப் பரிமாற்றத்தை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு சென்சேவியர் அணியினர் சிரமப்பட்டனர்.

8 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணி வீரர் பொபி மிகச் சிறப்பான ஒரு கோலைப் போட மேலும் உஷார் அடைந்தது ஆட்டம்.

24 ஆவது நிமிடத்திலும் நவஜீவன்ஸ் அணி வீரர் பொபி மேலும் ஒருகோலைப் போட இடைவேளைக்கு முன்னர் 2:0 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கி 3 ஆவது நிமிடத்திலேயே நவஜீவன்ஸ் அணி வீரர் உஷானந் ஒரு கோலைப் போட்டார். அதன் பின்னர் சென்சேவியர் அணியினர் நிலைகுலைந்தனர்.

பின்னர் சென்சேவியர் அணியினர் பல தடவைகள் மோதிய போதும் கோல் போட முடியவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று நவஜீவன்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அடுத்த அரை இறுதியாட்டத்தில் விண்மீன் அணியை எதிர்த்து கலைமதி அணி மோதியது. இவ்விரு அணிகளுக்குமான ஆட்டம் மிகப் பரபரப்பாக நடைபெற்றது.

இரு அணிகளும் சம பலத்துடன் மோதிக் கொண்டன. 10 ஆவது நிமிடத்தில் விண் மீன் அணி வீரர் காண்டீபன் அழகான ஒரு கோலைப் போட ஆட்டம் விண்மீன் அணி பக்கம் சாய்ந்த போது போராடிப் பந்தை தம் வசப்படுத்திய கலைமதி அணியினர் 19 ஆவது நிமிடத்தில் அந்த அணி வீரர் அபி அதிரடியான ஒரு கோலைப் போட்டு சமப்படுத்த ஆட்டம் விறுவிறுப்பின்

> 8 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணி வீரர் பொபி மிகச் சிறப்பான ஒரு கோலைப் போட மேலும் உஷார் அடைந்தது ஆட்டம்.

உச்சக் கட் டத்தை எட்டியது. இதனால் முற்பாதியாட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலை யில் இருந்தது.

இடைவேளையின் பின்னரும் இரு அணிகளும் பலமாக மோதிக் கொண்டன. 32 ஆவது நிமிடத் தில் விண்மீன் அணி வீரர் ரஞ்சித் மேலும் ஒரு கோலைப் போட்டனர். கலைமதி அணியினரின் கோல் போடும் முயற்சிகளை விண்மீன் அணியின் பின்கள வீரர்கள் துவம்சம் செய்ததையால் கோல் போடும் முயற்சிகள் முறியடிக்கப்பட இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் விண்மீன் அணி வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-422)






இருபத்திரண்டாவது பிறந்த தினமும்

மூன்றாம் ஆண்டு நினைவுகளும்

அமரர் தங்கராசா சுரேந்தினி

தாய்மடி மகிழ 1991.05.16

திதி:2014.01.15

மண்மடி தவழ 2011.01.19

அம்மா என்ற வார்த்தைக்கு அர்த்தம் தந்தவளே
உன் வருகையின் பின்தான் உயிர்வாழ ஆசைப்பட்டேன்
மடிதவழ மறுக்கிறாய் புன்னகையை வஞ்சிக்கிறாய்
பேசாது மௌனிக்கிறாய் நினைவுகளை உதிர்க்கிறாய்
கனவிலே கலைகிறாய் நிழலாய் வருகிறாய்
நிஜத்தில் மறைகிறாய்

அனலாய் வேகுது மனம் ஆறாய்ப் பெருகுது துயர்
நாலாய் உடையுது திடம் வெறுமையை உணருது தினம்
காலன் உனைக் கவர ஓடிவந்த அந்த நொடி
இன்னும் மறையவில்லை ஆண்டுகள் மூன்றானபோதும்
சிரித்த உன்முகம் என்றென்றும் எம் மனத்திரையில்...
என்றும் உன் நினைவுகளைச் சுமந்து நிற்கும்


(C/11016) (2.6.3)

- குடும்பத்தினர்.

சுதன் தச்சுத் தொழிலகம்,
விக்னேஸ்வரா வீதி, சங்கானை. T.P: 0776594625


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## தங்கப்பந்தை வென்றார்

# றொனால்டோ

**உலகின் தேசிய அணிகளின் தலைவர்கள், பயிற்சி யாளர்கள் மற்றும் பத்திரிகையாளர் ஆகியோர் சிறந்த வீரர்களைப் பரிந் துரை செய்தனர். இதன்படி இம்முறை விருதை கிறிஸ் ரி யானோ றொனால்டோ வென்றார்.**

சிறந்த உதைபந்து வீரருக்கான தங்கப் பந்து விருதை இந்த முறை போர்த்துக்கல் வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோ வென்றுள் ளார். ச ர்வதேச ரீதியில் சிறந்து விளங்கும் உதைபந்து வீரர்களுக்கு ஆண்டுதோறும் தங்கப் பந்து விருது வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி, 2013ஆம் ஆண்டுக்கான விருதுக்கு ஆர்ஜென்ரீனாவின் லயனல் மெஸ்சி, கிறிஸ்ரியானோ றொனால்டோ மற்றும் பிரான்ஸின் பிரான்க் றைபரி ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டனர்.

உலகின் தேசிய அணிகளின் தலைவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பத்திரிகையாளர் ஆகியோர் சிறந்த வீரர்களைப் பரிந்துரை செய்தனர். இதன்படி இம்முறை விருதை கிறிஸ்ரியானோ றொனால்டோ வென்றார்.

நேற்று முன் தினம் இரவு சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் இந்த விருது வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இதன்போது பிரேசில் உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலே றொனால்டோவுக்கான தங்கப்பந்து விருதை அறிவித்தார். விருதைச் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் செப் பிளாட்டர் றொனால்டோவுக்கு வழங் கினார்.

தொடர்ந்து 4 முறை இவ்விருதைக் கைப் பற்றிய லயனல் மெஸ்ஸியை முந்தி இம் முறை றொனால்டோ விருதைத் தனதாக் கினார்.

கடந்த ஆண்டில் றொனால்டோ ரியல்மட்ரிட் அணி மற் றும் போர்த்துக்கல் அணிக்காக 59 போட்டிகளில் பங் கேற்று 69 கோல்கள் அடித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)



## அனுஷ்காவுடன் கோஹ்லி



இந்திய அணியின் இளம் வீரர் விராட் கோஹ்லி, பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மாவுடன் ஒரே வீட்டில் தங்கியி ருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தென்னாபிரிக்கா சுற்றுப்பயணத்தை முடித்து நாடு திரும்பிய இந்திய அணி நேற்று முன் தினம் நியூசி லாந்து புறப்பட்டுச் சென்றது. அங்கு 5 ஒருநாள் போட் டிகள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கிறது.

இந்நிலையில் நியூசிலாந்து புறப்படுவதற்கு முன்பாக விராட் கோஹ்லி, நடிகை அனுஷ்கா சர்மா புதிதாக வாங்கியிருக்கும் வீட்டில் தங்கியிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்தாண்டு விளம்பரம் ஒன்றில் நடிப்பதற்காக சந்தித்துக் கொண்ட இருவரும், அடிக்கடி ஒன்றாக ஊர் சுற்றி வருகின்றனர்.

நேற்று முன் தினம் மற்ற வீரர்கள் புறப்பட்டுச் சென்ற பின்னர் விமான நிலையத்தில் சுமார் 20 நிமிடங்கள் விராட் கோஹ்லி அமர்ந்திருந்தார். அதற்கு அனுஷ்காவின் கார் வருவதற்கு 20 நிமிடங்கள் தாமதமானதே காரணமெனக் கூறப்படுகிறது. இதேபோன்று தான் தென்னாபி ரிக்கா செல்வதற்கு முன்பாகவும் அனுஷ்காவை கோஹ்லி சந்தித்து விட்டு சென்றது குறிப்பிடத்தக்கது. (கு)

## தரவரிசையில் முன்னேற்றம்

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே டுபாயில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்ற நிலையில் தரப்படுத்தல் வரிசையில் இலங்கை அணியினர் முன்னேறியுள்ளனர்.

குறிப்பாக மஹேல ஜெயவர்த்தன சர்வதேச ரீதியாக முதல் 20 வீரர்களில் ஒருவர் என்ற நிலையை எட்டியுள்ளார்.

இந்தநிலையில், 3 ஆவது டெஸ்ட் போட்டியிலும் இலங்கை அணி வெற்றிகொள்ளும் பட்சத்தில் கிரிக்கெட் அணிகளின் தரப்படுத்தல் வரிசையில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை விட முன்னேறி 5 ஆவது இடத்தைப் பெறும்.

இதுதவிர, துமித்த கருணாரட்ன மற்றும் கௌசல் சில்வா ஆகியோரும் தர வரிசையில், முன் னேற்றத்தை அடைந்துள்ளனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் இளம் வீரர்கள் எதிர்காலத்தில் சாதிப்பார்கள்

இந்திய அணியின் அசத்தலான இளம் வீரர்கள் எதிர்காலத்தில் ஜொலிப்பது உறுதி என ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் இயன் சப்பல் தெரிவித்துள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் இந்திய அணியில் மூத்த வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக ஓய்வு பெறத் தொடங்கினர். முதலில் கங்குலி, கும்ளே அடுத்து லட்சுமண், டிராவிட் வரிசையில் கடைசியாக சச்சின் விடைபெற்றார்.

இவர்களுக்கு மாற்று தேடுவது சிரமம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், புதிதாகவந்துள்ள இளம் வீரர்கள் நம்பிக்கை தருகின்றனர்.

இதுகுறித்து இயன் சாப்பல் கூறுகையில், மூத்த வீரர்கள் ஓய்வு பெற்றநிலையில், இந்திய அணியில் எப்போதும் இல்லாத வகையில் திறமையான இளம் வீரர்கள் உருவாகி வருகின்றனர். ஷிகர் தவான், விராட் கோஹ்லி, புஜாரா, ரோகித் சர்மா மற்றும் உன்முக்த் சந்த் என இவர்கள் தான் எதிர்கால இந்திய வீரர்களாக ஜொலிக்கக் காத்திருக்கின்றனர்.

உலககிண்ணத் தொடருக்கு இன்னும் 13 மாதங்கள் உள்ளன. இந்நிலையில் பெரும்பாலான அணிகள், அதிகமாக ஒருநாள் போட்டித் தொடர்களில் பங்கேற்க தொடங்கி விட்டனர் என்று தெரிவித்துள்ளார். (த-400)

# பெடரர் இரண்டாம் சுற்றுக்கு



ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டிகள் மெல்போர்ன் நகரில் நடந்துவருகின்றன. நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் போட்டியின் முதல் சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர்பெடரர், ஆஸ்திரேலியாவின் ஜேம்ஸ் டக்வொர்த்தைச் சந்தித்தார்.

சுட்டெரிக்கும் வெயிலில் ஒரு மணி நேரம் 46 நிமிடங்கள் நடைபெற்ற இப்போட்டியில் ரோஜர் பெடரர் 6-4, 6-4, 6-2 என்ற செற்களில் வீழ்த்தினார். 4 முறை ஆஸ்திரேலிய ஓபன் சம்பியனான ரோஜர் பெடரர் இந்த வெற்றியின் மூலம் இப்போட்டியின் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளார். தொடர்ந்து 57 ஆவது கிரண்ட்ஸலாம் போட்டிகளில் அவர் விளையாடுகிறார். (த-400)

# இளையோர் உலகக்கிண்ண இந்திய அணி அறிவிப்பு

உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியின் அணித்தலைவராக விஜய் ஜோல் நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சார்பில், 19 வயதுக்குட் பட்டோருக்கான 10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட்(50 பந்து பரிமாற்றம்) தொடர், ஐக்கிய அரபு எமிரேட்சில் அடுத்த மாதம் 14 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதிவரை நடைபெற இருக்கிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 16 அணிகள் பங்கேற்கின்றன.



இந்த 16 அணிகள் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு லீக் சுற்றில் மோதும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடங்களை பிடிக்கும் அணி கள் காலிறுதிக்கு முன்னேறும்.

காலிறுதியில் வெற்றி பெறும் அணிகள் பெப்ரவரி 24, 26 ஆம் திகதியில் நடக் கும் அரையிறுதியில் மோதும்.

இறுதிச்சுற்று பெப்ர வரி 28 ஆம் திகதி டுபாயில் நடக்கவுள் ளது.

இத்தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி வீரர் களின் பெயர்கள் வெளி யிடப்பட்டுள்ளது.

அணித்தலைவராக விஜய் ஜோல் நியமிக்கப்பட்டார். இவ ரது தலைமையி லான இளம் இந்திய அணி, சமீபத்தில் ஜூனியர் ஆசியக்கிண்ணத்தை வென்று சாதித்தது.

இந்திய அணி விவரம்: விஜய் ஜோல் (அணித்தலைவர்), அகில் ஹெர்வாத்கர், அன்குஷ் பைன்ஸ், ரிக்கி புய், சஞ்சு சாம்சன், ஸ்ரேயாஸ் ஐயர், சர்பராஸ் கான், தீபக் ஹோடா,குல்தீப்யாதவ், அமிர் கானி, கரண் கைலா, மிலிந்து, அவேஷ் கா மோனு குமார் சிங், ஆதித் சேத். (த - 400)

கன்னாகம் கிழக்கு சனசமூக நிலையம் கட்டட மைதான வளர்ச்சி நிதிக்காக நடாத்திய (14.01.2014) மாபெரும் அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் வருமாறு

1 ஆம் பரிசு - 04650

2ஆம் பரிசு - 04685

3 ஆம் பரிசு - 03468

ஆறுதல் பரிசில்கள்

05961, 00958, 08335, 04197, 00591, 06157, 06041, 02447, 08200, 06701

பரிசில்களை 30.01.2014 ஆம் திகதிக்கு முன்னர் பற்றுச்சீட்டினைக்காட்டி நிலையத்தில் பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 077 9181069, 077 4121275

எமது முயற்சிக்கு ஆதரவளித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நிர்வாகம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர்,பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,தொழில் புரிவோர் இணைய முடியும்.

"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் இப்பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 18.01.2014 சனிக்கிழமை

1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. காலை 11.30 - 01.00
4. மாலை இடமில்லை

வார நாள் பிரிவுகள் ஆரம்பம் 20.01.2014 (திங்கள்,புதன்)

1. காலை 9.00-11.00
2. காலை 11.00-01.00

குறிப்பு - 3 மாதங்களில் ஆங்கிலம் சரளமாக பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் மீள வழங்குவதற்கான உத்தரவாதம்.

SAAMSON LANGUAGE SCHOOL 179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

FRENCH LANGUAGE CENTRE
FALC யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.

FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 750 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF Exam இல் வடக்கில் எம் மாணவர்கள் மட்டுமே சித்தி..... குறுகிய காலத்தில் DELF பரீட்சைக்கு தோற்றலாம் நேரத்தை வீணடிக்காது. எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறார்கள்......

ஆரம்பம்: 18.01.14 at 8am, No. 40, Palaly Road, ஆரியகுளம்.
ஆரம்பம்: 20.01.14 at 3pm. No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் நடை பெறுகிறது... 0779 789 456

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

IELTS

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

A1 B1

இலவச ஆலோசனைகளுக்கு 0777240707

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

யாழ்ப்பாணம் 0212224403 | நெல்லியடி 0212262470 | சாவகச்சேரி 0212270775 | சுன்னாகம் 0212241970

தேவை

யாழில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்துக்கு Receptionist (பெண்) தேவை.

தகைமை: A/L, 3 பாடத்திலும் சித்தி மற்றும் English, Computer அறிவு விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளோர் 16.01.2014 வியாழன் மு.ப. 10-11 மணிக்குள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

இல. 23, பலாலி வீதி, ஆரியகுளம்.
077 9789456

shopping இன்புதிய வடிவம் Online
www.thars fashion.com

தை முதல் புதிய வரவு
www.thars shoppes.com
தை மாத வெற்றியாளர் க. டர்ஷா சுவிஸ்லாந்து
தொடர்புகளுக்கு:-
ப. தயாருபன் 077 1516013

ஒகன், கிற்றார் இசை வகுப்புக்கள்

[சிறுவர்கள் மற்றும் யாவருக்குமானது]

ஆரம்பம் : 17.01.2014
பிற்பகல் 3.30 மணிக்கு
இடம் : 36, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு

அன்பகம்

கைதடி கிழக்கு, கைதடி.
தொடர்பு: 0777 110523
(42373) (10.14)

Computer Courses

கல்வியாண்டு 2014 க்குரிய அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 111: 18.01.2014
பிரிவு 1V: 23.01.2014
காலை 10.00மணி

2013 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே உங்களுக்காகவே இவ் விஷேட பிரிவுகள் ஆரம்பம். இப்பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் Flash Memory ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளும் அதே வேளை ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயில முடியும்.

மேலதிக விபரங்களுக்கு : 021 222 2831

INSTITUTE OF INFORMATICS STUDIES

100 மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோவில் அருகாமை),யாழ்ப்பாணம்

T.P : 021 222 2831 FAX : 021 222 6933

WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk

யாழ். நகரில் புதியதோர் நிறுவனம்

Economics Hall

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்

பொருளியல் உதயன்

(30 வருட சேவையை கடந்த ஆசிரியசேவை)

| Day Class | திங், செவ், புதன், | சனி, ஞாயிறு |
|---|---|---|
| பிரிவு I | 8.00 - 10.00 - - - - | 9-10 - 9-10 |
| பிரிவு II | 10.00 -11.30 - - - - | 9-10 - 9-10 |
| பிரிவு III | 11.30 - 01.00 - - - - | 9-10 - 9-10 |

றோயலின் கண்ணீர் காணிக்கைகள்



எமது கல்வி நிறுவனத்தின் வர்த்தக ஆசிரியரான S.நித்தி அவர்களின் அன்புத் தாயார்.

சின்னையா செல்லம்மா

அவர்களின் மறைவினால் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

றோயல் அக்கடமி

நல்லூர் ← → யாழ்ப்பாணம்

CIMA பெறுபேற்றில் MCS மாணவர்கள் சாதனை.



CIMA பெறுபேற்றில் MCS மாணவர்கள் அனைவரும் சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.இவ்வெற்றியினை கொண்டாடுமுகமாக AL 3A பெற்ற மாணவர்கள் மட்டுமன்றி அனைத்து மாணவர்களுக்கும், CIMA certificate Level course Fee , UK Reg 17000 Rs என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படுகின்றது.விண்ணப்பிக்க விரும்புவோர்

Type CIMA FREE <NAME>& send to 0772395895

Operational Level & Managerial level start on 18th Jan.

MCS யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ரொட்டி மீது தடவி விட்ட வெண்ணெயைத் திரும்பத் திரட்டினாலும் திரட்டலாம். பரவி விட்ட வதந்தியை அடக்குவது முடியாது.
*கிப்ளிங்கர்*

# புதன் பொய்கை A

உதயன் ஜனவரி 15 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

ராஜராஜன்

# உயர்வுக்குத் தடைபோடும் தாழ்வு மனப்பான்மை


இன்றுஎம்மிடையேவாழும் பலர் தாழ்வு மனப்பான்மை மற்றும் கூச்ச உணர்வினால் தமக்குக் கிடைக்க வேண்டிய உயர்ந்த இடத்தை இழந்து நிற்கின்றனர்.

இதற்கு உயர்ந்தவர், தாழ்ந்தவர் , கற்றவர், கல்லாதவர், பணக்காரன், ஏழை என்ற வேறுபாடுகள் காணப்படுவதில்லை. இந்தத் தாழ்வு மனப்பான்மையும், கூச்ச சுபாவமும் வேறுபாடுகளைக் கடந்து அனைவரிடத்திலும் நிறைந்து காணப்படுகின்றது.

இதனை நாம் மனம் சம்பந்தப்பட்டதொரு குறைபாடாகவும் கருத முடியும். சிலர் வாழ்க்கையின் அடிமட்டத்தில் உழன்ற போதிலும் தமது முயற்சியால் உயர்ந்த நிலைக்கு வருகின்றனர். ஆனால் இவர்களது பழைய நினைவுகள் எளிதில் மறக்கப்படுவதில்லை. இவர்கள் மறக்க நினைத்தாலும் மற்றவர்கள் விடுவதாக இல்லை. அவர்கள் பழையனவற்றைக்கிளறிக்கொண்டே இருப்பதால் இத்தகையவர்கள் தம்மை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகி விடுகின்றனர். அதிலிருந்து மீள முடியாத் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

வேறு சிலர் தம்மைத் தாமே தாழ்த்திக் கொள்வார்கள். மற்றவர்கள் தம்மிலும் பார்க்க உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் இவர்களது மனங்களில் நிறைந்திருக்கும். இதனால் தம்மைச் சுற்றி ஒரு வட்டத்தை இவர்கள் போட்டுக் கொள்வார்கள். இந்த வட்டத்திலிருந்து வெளிவருவதற்கு இவர்கள் ஒருபோதுமே துணிவதில்லை. இத்தகையவர்கள் முதலில் தம்மைச் சுற்றித் தாமே அமைத்துக் கொண்ட மனச் சிறையிலிருந்து வெளியே வரவேண்டும். மேலும் அதனை வானத்தில் சிறகடித்து சதந்திரமாகப் பறப்பதற்கு அனுமதிக்க வேண்டும். நான் எவருக்கும் தாழ்ந்தவன் அல்ல. என்னாலும் எதனையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை இவர்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதன் பின்னர் இவர்களைப் பீடித்துள்ள தாழ்வு மனப்பான்மை என்னும் வியாதி தானாகவே பறந்தோடிவிடும்.

எம்மில் சிலர் தமது மனைவியரிடத்தில் பழகுவதில் கூட தயங்கியவாறு காணப்படுவார்கள். சில வேளை அவரது மனைவி அவரை விட அழகில் சிறந்து விளங்கலாம். கல்வியில் உயர்ந்த நிலையில் இருக்கலாம். அல்லது அந்தஸ்த்தில் வேறுபாடு காணப்படலாம். இவற்றையெல்லாம் திருமணத்துக்கு முன்னர் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். எல்லாமே முடிந்த பின்னர் தற்போது தாழ்வு மனப்பான்மை காரணமாகப் புலம்புவதில் பயனேதும் கிடைக்காது. ஒரு சிலர் நிறைவான கல்வி அறிவைப் பெற்றிருக்க மாட்டார்கள். அந்தஸ்த்திலும் உயர்ந்த நிலையில் இருக்க மாட்டார்கள். ஆனால் எந்தச் சபையிலும் முன் நிற்பார்கள். அங்குள்ளவர்களை வழிநடத்தும் ஆற்றலும் பெற்றிருப்பார்கள். அந்தச் சபையிலே கல்வியில் உயர் நிலையிலுள்ள பலர் அமர்ந்திருந்த போதிலும் மேற்கூறியவர்களிடம் தாழ்வு மனப்பான்மை கிடைக்காது. கூச்சமும் அறவே இல்லை. இதனால் அனைவருடனும் இயல்பாகப் பழகுவதுடன் நற்பெயரையும் சம்பாதித்துக் கொள்வார்கள். இவர்களே வாழ்க்கையின் வெற்றியாளர்கள். அரசியலில் கூட இந்த நிலைதான் காணப்படுகின்றது.



எமது நாட்டு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகச் செயற்படும் ஐக்கிய தேசியக் கட்சி உயர் மட்டத்தவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இதனால் கிராமப்புற மக்களிடத்தில் இதற்குச் செல்வாக்கு இல்லையெனக் கூறுவோரும் உண்டு. இதற்கு ஏற்றாற் போன்று அந்தக் கட்சியின் தலைவர்கள் விளங்கினார்கள்.

ஆனால் இவற்றையெல்லாம் ஒருவர் உடைத்தெறிந்து நாட்டின் உயர் பதவியை வகித்தார். அவர் தான் மறைந்த ஜனாதிபதியான ஆர்.பிரேமதாஸ. இவர் மிகச் சாதாரண குடும்பமொன்றில் பிறந்தார். இவருக்கு உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புக்களும் கிடைக்கவில்லை. ஒரு இரவுநேரப் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அரசியல் இவரை ஈர்த்தது. முழுநேர அரசியல்வாதியாக மாறினார்.

இவர் எந்த வேளையிலும் தம்மிடம் இல்லாதவற்றை எண்ணித் தாழ்வு மனப்பாங்கு கொள்ளவில்லை. தம்மிலும் உயர்ந்த நிலையில் உள்ளவர்களிடம் கூச்ச சுபாவத்துடன் பழகவில்லை. துணிவும், உறுதியும் அவரிடம் நிறைந்து காணப்பட்டன. கட்சியிலிருந்து ஒதுங்கியிருந்த கீழ் மட்டத்திலுள்ள மக்களைக் கவரும் வகையிலான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தினார். கொழும்பு மாநகரசபை உறுப்பினராகத் தமது அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர் நாடாளுமன்ற உறுப்பினர், பிரதியமைச்சர், அமைச்சர், பிரதமர், ஜனாதிபதி என உயர்ந்த நிலைக்குச் சென்றார். அவரது சில செயற்பாடுகள் இங்கு வாழ்கின்ற சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குத் துன்பங்களை ஏற்படுத்தியதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் அவர் ஏழை , எளிய மக்களிடத்தில் காட்டிய பரிவும் பாசமும் என்றுமே மறக்க முடியாதவாறு காணப்பட்டன. இவ்வாறு தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதி, குஜராத் முதல்வர் நரேந்திரமோடி ஆகியோரும் தமது திறமைகளால் முன்னிலைக்கு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மறைந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர், பணபலம் இல்லாதவர். மக்களை வசீகரிக்கும் முக லட்சணம் பெற்றிருக்காதவர். தேர்தல்களில் போட்டியிட்டுத் தொடர் தோல்விகளைக் கண்டவர் என இவரிடம் எதிர்மறையான அம்சங்களே காணப்பட்டன. ஆனால் லிங்கன் இவற்றையெல்லாம் ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. தாழ்வு மனப்பான்மை கொண்டு துவண்டு விடவில்லை. துணிவும், நம்பிக்கையும் நிறைந்த மனதுடன் மீண்டும், மீண்டும் முயன்றார். இறுதியில் அமெரிக்காவின் உயர்ந்த பதவியில் அமர்ந்து கொண்டார்.

இந்த உலகம் உயர்வு தாழ்வுகளால் நிறைந்து காணப்படுகின்றது. இதற்கேற்றவாறு மனிதர்களும் காணப்படுகின்றனர். அவர்களிடத்திலும் பல்வேறு வேறுபாடுகளைக் காண முடிகின்றது. இந்த நிலையில் எமக்கென ஒரு தனியான வாழ்க்கை அமைந்துள்ளது. அதனைச் செம்மையான வகையில் அமைத்துக் கொள்வதற்கு நாம் முயல வேண்டும். தாழ்வு மனப்பான்மை மற்றும் கூச்ச சுபாவம் உள்ளவர்கள், வாழ்க்கையின் உயர்ந்த நிலைக்குச் செல்வதற்கான ஏணிப் படிகளில் ஏற முடியாதவர்கள். இவர்கள் எப்போதுமே மேலே உள்ளவற்றை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பவர்கள். அவற்றை அடைவதற்கான சாத்தியப்பாடுகளும் இவர்களிடம் இருப்பதில்லை. ஒருவித குற்ற உணர்ச்சி இவர்களைக் குடைந்து கொண்டே இருக்கும். அதிலிருந்து மீள்வது இவர்களின் கைகளிலேயே உள்ளது.

நாம் எமக்கு மேலே உள்ளவர்களை மட்டுமே பார்த்துப் பெருமூச்சு விடுகின்றோம். பொறாமைப் படுகின்றோம். அவர்களிடத்தில் பழகுவதற்கு கூச்சப்படுகின்றோம். தாழ்வு மனப் பான்மையால் துடிக்கின்றோம். ஆனால் எமக்கும் கீழே பலர் இருப்பதை மறந்து விடுகின்றோம். அவர்களையும் நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். போரின்போது தமது கை, கால்களை இழந்த பலர் நம்பிக்கையை இழந்து விடாது, மூலையில் முடங்கிக் கிடக்காது சுயமாகப் பாடுபட்டுச் சம்பாதித்து தமது குடும்பங்களுக்கு உதவி வருகின்றனர். இந்த நிலையில் முழுமனிதர்களாக உலவும்நாம் உபயோகமற்றவர்களாக விளங்கு வது நியாயமானதாகத் தெரியவில்லை. ஆகவே நாம் இனியாவது எம்மிடம் காணப்படும் கூச்ச சுபாவம், தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றுக்கு உடனடியாக விடை கொடுப்போம். எதனையும் எம்மால் முடியுமென உறுதி பூணுவோம். இதன் பின்னர் எமது வாழ்க்கையில் ஏற்படும் உயர்வுகளை அனுபவிப்போம்.

> இந்த உலகம் உயர்வு தாழ்வுகளால் நிறைந்து காணப்படுகின்றது. இதற்கேற்றவாறு மனிதர்களும் காணப்படுகின்றனர். அவர்களிடத்திலும் பல்வேறு வேறுபாடுகளைக் காண முடிகின்றது. இந்த நிலையில் எமக்கென ஒரு தனியான வாழ்க்கை அமைந்துள்ளது. அதனைச் செம்மையான வகையில் அமைத்துக் கொள்வதற்கு நாம் முயல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சி செய்தவுடன் உண்ணக்கூடாத உணவுகள்

உடற்பயிற்சியை சரியாக செய்தாலும், உணவுண்பதில் சில தருணங்களில் தவறு செய்கி றோம். அதாவது நாம் உண்ணும் உணவுகளுக்கு அதற்கென்று ஒரு நேரம் உள்ளது.

அந்த நேரத்தைச் சரியாகப் பின்பற்றி உணவை உண்ணாமல் இருந்தால் அதற்கான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

உடற்பயிற்சி செய்து முடித்த உடனேயே, கண்ட கண்ட உணவுகளை உண்டால் அது மிகவும் ஆபத்தானது.

உடற்பயிற்சியின் போது உடலில் உள்ள குளுக்கோஸ் உடலில் எரிபொருளாக மாறு கிறது.

எனவே இந்த நேரம் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை அதிகரிக்கும் உண வுகளை உண்ணாமல் இருக்க வேண்டும்.


எனவே அவ்வாறு உடற்பயிற்சிக்குப் பின்னர் உண்ணக்கூடாத உணவுப் பொருள்கள் என்ன வென்று பார்ப்போம்.



பழ ஜூஸ்

எவ்வளவு தான் பழங்கள் உடலுக்கு நல்லதாக இருந்தாலும், உடற் பயிற்சிக்குப் பின்னர் உடனே பழங்களை உண்ணக் கூடாது. இதனால் அதில் உள்ள சர்க்கரை, இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை அதிகரித்துவிடும். ஏதாவது குடிக்க வேண்டுமென்று தோன்றினால், தண்ணீர் அல்லது இளநீரைக் குடிக்கலாம். அது மிகவும் ஆரோக்கியமானது.

முட்டை



முட்டையானது உடற்பயிற் சிக்குப் பின்னர் உண்ணக் கூடிய உணவுப் பொருள் தான். ஏனெ னில் அதில் உள்ள புரோட்டீன் மற்றும் கோலைன் இதயத் துக்கு மிகவும் நல்லது. ஆனால் அவற்றை பொரியல் செய்து உண்ணக் கூடாது. அப் போது அதில் கொழுப்புகள் அதி கமாக இருக்கும். எனவே அதனை வேகவைத்து உண்பது தான் நல்லது.

காய்கறிகள்

காய்கறிகளை வேக வைக்காமல் உண்டால், அதில் உள்ள சத்துக்கள் உடலுக்கு அப்படியே சேரும். ஆனால் அவற்றையே உடற்பயிற்சிக்குப் பின்னர் உடனே உண்டால், உடற்பயிற்சி செய்ததே வீணாகிவிடும்.

பதப்படுத்தப்பட்ட இறைச்சி



உடற்பயிற்சி செய்த பின்னர், பதப்படுத்தப்பட்ட இறைச்சி யால் செய்யப்பட்ட உணவுகள் உண்பதைத் தவிர்க்க வேண் டும்.

ஏனெனில் பதப்படுத்தப்பட்ட இறைச்சியில் கொழுப்புகள் மற்றும் உப்பு அதிகமாக இருக் கும்.

இதனால் அவை செரிமான மண்டலத்தின் இயக்கத்தைக் குறைத்துவிடும்.

# கவலைகளிலிருந்து விடுபட .......



வாழ்க்கை என்பது இன்பமும், சுவாரசியமும் கலந் தது. ஆனால் வாழ்க்கையில் எல்லாமே நல்லபடியாக இருந்து விடும் என்று சொல்வதற்கில்லை. வாழ்க்கை யின் மந்தமான ஓட்டத்தில் நீங்கள் தொந்தரவுக்கு உள்ளாகலாம்; ஏமாற்றமடையலாம்; ஏமாற்றப் படலாம்.

இந்த நேரங்களில் நீங்கள் வாழ்க்கையிலுள்ள நல்ல விடயங்களைப் பற்றியே கவனிக்க வேண்டும்.

உங்களைப் பற்றி குறைவாகவும், தோல்வி மனப்பான்மையுடனும் நினைப்பதை விட்டு விட்டு ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் செயற்பட வேண் டும்.

உங்களைப் பற்றிக் குறைவாக எண்ணும் போதோ அல்லது நீங்கள் சோர்ந்து போய் இருக்கும் போதோ நீங்கள் எண்ணிப் பார்த்து முயற்சிக்க வேண்டிய நல்ல விடயங்கள் பல உள்ளன. மோசமான விட யங்களைப் பற்றி மேலும் நினைத்துக் கொண்டி ருக்காமல், உங்களுக்கு பிடித்தமான விடயங்களைச் செய்யும் வகையில் மனதை திடப்படுத்த வேண்டும்.

உங்களிடம் குறையுள்ளது என்று நீங்கள் எண்ணும் போது செய்ய வேண்டிய சில விடயங்களைப் பார்ப்போம்

உங்களுக்கு பிடித்த ஆசிரியர் எழுதிய புத்தகத்தையோ அல்லது நாவலையோ படிக்கத் தொடங்குவது உற்சாகமாக இருப்பதற்கான நல்ல வழியாகும். இவ்வாறு நீங்கள் குறைபட்டுக் கொண்டி ருக்கும் போது ஊக்கப்படுத்தவும் மற்றும் ஆர்வமூட் டவும் புத்தகங்களைப் படியுங்கள். நேர்மறையான கருத்துக்களையும், மகிழ்ச்சியான முடிவுகளையும் கொண்டிருக்கும் புத்தகங்களுக்கு எண்ணங்களை மாற்றும் வலிமை உண்டு.

உங்களைப் பற்றிக் குறைபட்டுக் கொண்டிருக்கும் போது, வீட்டை விட்டு வெளியேறி சற்றே நடந்து செல்லுங்கள்; அருகிலுள்ள தோட்டம், பூங்கா அல்லது வேறு ஏதாவது பொழுதுபோக்கு பூங்காவுக்கு செல்வ தன் மூலம் மகிழ்ச்சியாக சுற்றிக் கொண்டிருக்கும் குழந்தைகளை உங்களால் காண முடியும்.

வெளியே நடந்து செல்வதன் மூலமாக உங்களின் குறை காணும் மனம் கரைந்து, வாழ்க்கையின் கவலைகள் உடையத் தொடங்கும்.

உங்களிடம் நெருக்கமாக இருக்கும் ஒருவரிடம் சென்று, நீங்கள் என்ன மாதிரியான சூழலில் இருக்கி றீர்கள் என்று மனம் விட்டு பேசுங்கள். இதன் மூலம் உங்களுடைய மனம் இலேசாவதையும், மகிழ்ச்சியடைவதையும் உணருவீர்கள்.

சுதந்திரமாக செயற்படுவதன் மூலம் மனதை ஆறுதல் படுத்த முடியும். அதாவது உங்கள் மனதுக் குப் பிடித்த விடயங்களைச் செய்யுங்கள்.

உங்களுடைய உணர்வுகள் மற்றும் பிரச்சினைக ளைப் பற்றி எழுதுவது மனதை ஆற்றுப்படுத்தும் என்பது உண்மை.

இதன் மூலம் உங்கள் மூளைக்குள் குடைந்து கொண்டிருக்கும் பல விடயங்களை கோர்வை யாக வெளியே கொண்டு வந்து தீர்வு கூடக் காண முடியும்.

உங்களை விரும்புபவர்கள் மற்றும் குடும்பத்தி னரின் ஆதரவை நாடிச் சென்றால் குறை இருக்கும் இடம் தெரியாமற் போய்விடும்.



# 60 ஆண்டுகளாக குளிக்காமல் சாதனை படைத்த முதியவர்

ஈரான் நாட்டைச் சேர்ந்த முதியவர் ஒருவர் 60 ஆண்டுகளாக குளிக் காமல் சாதனை படைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

தினந்தோறும் குளிக்காவிட்டால் எதையோ பறிகொடுத்தது போன்று அனைவரும் உணர்வார்கள்.

உலகமே இவ்வாறு சுழன்று கொண் டிருக்க, ஈரானை சேர்ந்த 80 வயது முதியவர் அமோவ் ஹாஜி, கடந்த 60 ஆண்டுகளாக குளிக்காமல் வாழ்ந்து கொண்டி ருக்கிறார்.

இளவயதில் தனது வாழ்க்கையில் சந்தித்த கசப்பான அனுபவங்களை அடுத்து, உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்ட இவர், இவ்வுலக வாழ்க்கையையே வெறுத்து, பற்றற்ற துறவியின் நிலை யில் வாழ்ந்து வருகிறார்.

இவரை மடக்கிப் பிடித்து குளிக்க வைக்க ஊர் மக்கள் எவ்வளவோ முயன்றும் பலனில்லாமல் போனது.

இவர் விரும்பிச் சாப்பிடுவது, பழுத டைந்த இறைச்சியையும், உயிரி ழந்து கிடக்கும் உயிரினங்களின் மாமிசத்தையும் தான்.

இந்த சாதனையை இவர் எட்டுவ தற்கு முன்னர் வரை 66 வயதான ஒரு நபர் 38 ஆண்டுகளாக குளிக் காமல் வாழ்ந்தது தான் பெரிய சாத னையாகக் கருதப்பட்டது.

அந்தச் சாதனையை தற்போது அமோவ் ஹாஜி முறியடித்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சிவலிங்கத்தைச் சுற்றி நான்கு தூண்கள் அமையப்பெற்றுள்ளன. இந்தத் தூண்கள் சத்ய யுகம், திரேத யுகம், துவாபர யுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்களைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு யுகம் முடிவடையும் போதும் ஒவ்வொரு தூணாக இடிந்து விழும்."

# ஒவ்வொரு யுகத்துக்கும் இடிந்து விழும் தூண் உலக அழிவின் அடையாளமா?

மகாராஷ்டிராவின் மால்ஷேஜ் காட் ஸ்தலத்தின் முக்கியமான வரலாற்றுச் சின்னமான ஹரிஷ்சந்திரகட் கோட்டை 6 ஆம் நூற்றாண்டில் கலாசூரி பேரரசால் கட்டப்பட்டது. 1424 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள இந்தக் கோட்டை சாகசப்பயணிகள் விரும்பும் மலை யேற்றத்துக்கான ஓர் அற்புதமான வாய்ப்பைத் தருகிறது. இந்த அற்புதமான கோட்டையை நோக்கி மேலே ஏறும் பயணமானது சாகச 'த்ரில்' விரும்பிகளுக்கும் இயற்கை ஆர்வலர்களுக்கும் மிகவும் பிடித் தமாக இருக்கும்.

இதன் அருகிலுள்ள ஹரிஷ்சந்திரகட் சிகரத்தை பயணிகள் தவற விட்டு விடக்கூடாது. இந்தச் சிகரப் பகுதியிலிருந்து ஒரு நாணயத்தை நீங்கள் கீழ் நோக்கி வீசி எறிந்தால் அது புவியீர்ப்பு சக்தியை மீறி மேல் நோக்கி தள்ளப்பட்டு மிதந்து செல்லும் அதிசயத்தைப் பார்க்கலாம்.

இங்குள்ள புவியியல் அம்சங்களே இப்படி ஓர் அற்புதத்தை நிகழ்த்துகின்றன. அதாவது அரை வட்டப் பாறை அமைப்பும் கீழ் உள்ள பள்ளத்தாக்கில் நிலவும் அதிகபட்ச காற்றழுத்தச்சூழலும் இதற்குக் காரணமாக சொல்லப்படுகிறது. இந்த ஹரிஷ்சந்திரேஷ்வர் கோயிலுக்கு வலது புறமாகச் சென்றால் கேதாரேஷ்வர் குகை என்ற மிகப்பெரிய குகையை அடையலாம். இங்கு முழுவதுமாக நீரால் சூழப்பட்ட பெரிய சிவலிங்கம் ஒன்று அமைந்திருக்கிறது. 5 அடி உயரமுள்ள இந்த லிங்கத்தை சுற்றி இடுப்பளவு நீர் சூழ்ந்துள்ளது. அத்துடன் இந்த நீர் மிகவும் குளிர்ச்சியாக இருப்பதால் இதை கடந்து லிங்கத்தை அடைவது சற்று கடினமானது. அதுமட்டுமல்லாமல் மிகப்பெரிய நீர் பிரவாகமே இங்கு ஓடும் என்பதால் மழைக்காலத்தில் இந்தக் குகையை அடைவது முடியாத காரியம்.

சிவலிங்கத்தைச் சுற்றி நான்கு தூண்கள் அமையப்பெற்றுள்ளன. இந்தத் தூண்கள் சத்ய யுகம், திரேத யுகம், துவாபர யுகம், கலியுகம் ஆகிய நான்கு யுகங்களைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு யுகம் முடிவடையும் போதும் ஒவ்வொரு தூணாக இடிந்து விழும்.

அதன்படி தற்போது 3 தூண்கள் இடிந்துவிட்ட நிலையில் கலியுகத்தின் முடிவில் நான்காவது தூணும் இடிந்துவிடும் என்று நம்பப்படுகிறது. அந்த நாளில் இந்த உலகமும் அழிந்துவிடும் என்று ஒரு நம்பிக்கை நிலவுகிறது.

# ஒட்டகம் பற்றி நீங்கள் அறியாத அபூர்வ தகவல்கள்

ஒட்டகத்தின் உடலில் மிக முக்கிய பகுதியாக விளங்குவது அதன் முதுகிலுள்ள தசை முண்டு அல்லது புடைப்புப் (hump) பகுதியாகும். அந்தத் தசைமுண்டு வெற்றிடமாக இருக்கையில் தன் வடிவத்தை இழந்து ஒரு பக்கமாகச் சாய்ந்து தொங்கும் (flops). இத்தசை முண் டுவின் முக்கிய நோக்கம் ஒட்ட கத்துக்குத் தேவையான உணவைச் சேமித்து வைப்பதே. அதே நேரத்தில் ஒட்டகம் தனக்குத் தேவையான தண்ணீரையும் சேமித்துக் கொள்கிறது. ஒட்டகத்துக்கு மூன்று வயிறுகள் உள்ளன.

முதல் வயிறு, மேயும்போது பெறப்படும் உணவைப் பின்னர் அசை போடு வதற்காகச் சேமித்து வைக்கும் இடமாகப் பயன்படுகிறது. இரண்டாவது வயிற்றில் உணவைச் செரிப்பதற்கான செரிமானச் சாறு (digestive juice) உற்பத்தி செய்யப்படுகிறது. மூன்றாவது வயிற்றில் அசைபோட்ட உணவு செரிமானமாகிறது. முதல் இரண்டு வயிறுகளின் சுவர்ப் பகுதிகளில் தண்ணீரைச் சேமித்து வைப்பதற்கான பொட்டலம் போன்ற அமைப்புகள் உள்ளன.

இவ்வமைப்புகள் நீரால் நிரம்பி இருக்கும்போது தசைகளால் பாதுகாக் கப்படுகின்றன. ஒட்டகத்திற்குத் தண்ணீர் தேவைப்படும் போது தசைகள் திறந்தும் மூடியும் தேவையான நீர் வெளியேற்றப் படுகிறது. ஒட்டகம் மெதுவாகவும் குறைந்த அளவு எடை கொண்ட சுமையுடனும் பயணம் செய்யும் போது, அதன் வயிற்றிலுள்ள நீர் ஆறு முதல் பத்து நாள்கள் வரை அதற்குப் போதுமானதாயிருக்கும்.



"முண்டுவின் முக்கிய நோக்கம் ஒட்டகத்துக்குத் தேவையான உணவைச் சேமித்து வைப்பதே. அதே நேரத்தில் ஒட்டகம் தனக்குத் தேவையான தண்ணீரையும் சேமித்துக் கொள்கிறது. ஒட்டகத்துக்கு மூன்று வயிறுகள் உள்ளன."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நீங்கா நினைவுகளில்

# ஓராண்டு

தோற்றம் : 06.09.1990
மறைவு : 26.01.2013

## தனராஜா துளசிகா

(கலைப்பிரிவு மாணவி -யாழ்.பல்கலைக்கழகம்)







எம் இல் வாழ்வின் நல்முத்தாய்
வந்துதித்த குலக் கொழுந்தே!
புன்னகைக்கும் புதுமலராய்
மடிதவழ்ந்து மகிழ்வித்தாய்
சிறு காற்றும் உனைத் தீண்டா
சிறகிடுக்கில் காத்து வந்தோம்
மூவுடலும் ஒருயிராய்
ஓர் கூட்டில் மகிழ்ந்திருந்தோம்
எங்கு சென்றாய் மரகதமே?
துள்ளி ஓடும் புள்ளிமானாய்
பல்கலை செல்லும் உன்னழகு
பொறுக்காமல் பறித்தானோ கொடுங்காலன்?
உன்னைச் சுமந்த என் வயிற்றில்
பெரு நெருப்பு எரியுதம்மா
கண்முன்னே விழுந்தாயே கண்மணியே!
அறிவின் சிகரமாய் நீ உயர அகமகிழ்ந்தோம்
ஏக புத்திரியே: நீயே அனைத்துமாய் என்றிருந்தோம்
எல்லாம் கனவாகி வானுறைந்தாய் தெய்வமாய்
மறு ஜென்மம் என்றிருந்தால்
மகளாக வா மகளே
உனக்காகக் காத்திருக்கும் என் கருவறை

**குடும்பத்தினர்.**

64/7, 2 ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(42217) (2,6,3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ண அலைகளின் இயக்கமும் ஆழ்மன ஈடுபாடும்

(மயூ)

ஏதாவது ஒன்றை அடைய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அது வெறும் ஆசையாய் இருப்பதானால் பயன் இல்லை. அந்த விருப்பமானது நிறைவேற்ற முயற்சி தேவை. சரி முயற்சி செய்கிறோம் எப்போது சாத்தியப்படும்?விரும்பியதை அடைய முடியும் என்கிற நம்பிக்கை இருந்தால்தான் முயற்சியும் சாத்தியமாகிறது. மின் அலைகள் பரவிச் சென்று பொருள்களைப் பாதிப்படைய செய்வதுபோல எமது எண்ண அலைகளும் பரவிச் சென்று பொருள்களை பாதிக்கின்றன.

கிறிஸ்து பிறப்பதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பிதகோரஸ் என்ற கணித மேதை. உலகில் நாம் காணும் அனைத்துப் பொருள்களும் அதிர்வுகள் என்கிற அலை ரூபங்களாகத்தான் இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொன்னார். இந்த உண்மையை அணு விஞ்ஞானிகளும் கண்டறிந்து சொல்லி இருக்கிறார்கள். அணுவின் இயக்க தத்துவமே அது தான். அனைத்துப் பொருள்களும் அலை வடிவங்களாகத் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எமது எண்ணங்களும் அலை வடிவில் எம்மைச் சுற்றிலும் வியாப்பித்திருக்கின்றன.எனவே வலிமையான எண்ணங்களின் மூலம் எம்மை சுற்றி உள்ளவர்களிடம் எம்மால் பாதிப்பை ஏற்படுத்த முடியும். ஆழ் மனதைப் பயன்படுத்தத் தெரிந்து கொண்டால் எமக்கு அரிய சேவைகள் புரிய அது எப்போதும் தயாராக இருக்கின்றது.

ஆழ்மனதை பெரிய மகான்களும் தலைவர்களும் மட்டும் தான் பயன் படுத்த முடியும் என எண்ண வேண்டாம் ஆழ் மனதை பயன் படுத்தியவர்களே உன்னதமான நிலைக்கு உயர்ந்திருக்கிறார்கள்.

மனிதனின் எண்ண அலைகள் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களைப் பாதிக்கும் சக்தி 'சைகோகைனோஷிஸ்' என்று அழைக்கப்படுகிறது. நீண்டகாலமாக மனிதர்கள் அறிந்தோ அறியாமலோ இந்த சக்தியைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

மழையை வரவழைக்க மேகராகக்குறிஞ்சி என்ற ராகத்தை வாசிப்பது பண்டைய தமிழகத்தின் ஒரு பழக்கமாக இருந்திருக்கிறது. கற்பனையும் அழுத்தமான எண்ணங்களும் காந்த சக்தி போன்ற ஒரு சக்தியை எம் ஆழ் மனதில் ஏற்படுத்துகிற வலிமை படைத்தவைகளாக இருக்கின்றன. தனிமனிதனானாலும் சமூகமானாலும் ஒரு விடயத்தை அழுத்தமாக எண்ணுகிறபோது அந்த எண்ணங்களின் அடிப்படையில் காரியங்களும் நடைபெறத் தொடங்குகின்றன.

மனப்பாடம் அழுத்தமாக இல்லாதபோது காரியங்கள் நடப்பதில்லை.நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்று ஆழ் மனதில் அழுத்தமான எண்ணத்தை உருவாக்கிக் கொள்கின்றபோது அந்த வேலை கிடைப்பதற்கான வழிவகைகள் தானாக தென்படும் அதற்காக மனதில் நினைத்தால் வேலை கிடைத்து விடும் என பொருள் இல்லை. எதைச் சாதிக்க விரும்புகிறோமோ அதைச் சாதிக்க முடியும் என்று ஆழ்மனதில் முதலில் அழுத்தமான இமேஜை (உருவத்தை) ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதற்கான தீர்வு வழிமுறைகள் உங்களுக்குத் தென்படும் அந்த வேலையைப் பெறுவதற்கான ஆற்றலை ஆழ்மன்ம் உங்களுக்கு கொடுக்கும். இதற்கு அடிப்படைத் தேவை 'image creation' தான் நீங்கள் மன உறுதியுடனும் நம்பிக்கையுடனும் ஈடுபடும் காரியங்கள் வெற்றி கண்டிருப்பதை நம்பிக்கை இல்லாமல் சந்தேகத்தோடு அணுகுகின்ற காரியங்கள் தோற்றுப்போய் இருப்பதையும் நீங்களே உணர்வீர்கள். உள்ளபடியே மனப்பூர்வமாக அந்த காரியத்தில் வெற்றி பெறப்போகிறோம் என்று நீங்கள் அழுத்தமான நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா? என்பது தான் முக்கியம்.

# விஷம் கொடுத்து மாவீரர் அலெக்ஸாண்டர் கொலை?



மாவீரன் அலெக்ஸாண்டர் இறப்பின் பின்னணியில் உள்ள மர்மங்கள் தற்போது அம்பலமாகி உள்ளன.

கிரேக்க நாட்டில் கி.மு. 356 இல் மாவீர புதல்வராய் தோன்றியவர் அலெக்ஸாண்டர். அவர் மக்கெடோனின் மூன்றாம் அலெச்சாண்டர் என்றும் அழைக்கப்பட்டார். உலக வரலாற்றில் பெரும் வெற்றிகளை குவித்தவராக இன்றளவும் போற்றப்படுகிறார். 32 வயது வரை பெரும் போர்களை அசாதாரணமாக மேற்கொண்டு. உலகின் பெரும் பகுதியை வென்று சாதனை படைத்துள்ளார். வரலாற்றில் தனக்கென தனி இடம் ஒன்றைப் பிடித்து தோல்வியே கண்டிராத இம்மாவீரரின் இறப்பு சர்ச்சைக்குரியதாகவே இருக்கிறது. இதுகுறித்து ஒட்டாகோ பல்கலைக் கழக ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் திடுக்கிடும் தகவல்கள் வெளி யாகியுள்ளன. இதுதொடர்பான ஆய்வில் ஈடுபட்ட ஆய்வாளர் லியோ செப் கூறுகையில். கேளிக்கை விருந்தின்போது அலெக்ஸாண்டர் அதிக அளவில் மது அருந்துவது வழக்கம்.

அவ்வாறான விருந்தொன்றின்போது அவருக்கு 'வெராட்ரம் அல்பம்' எனப்படும் மூலிகைச் செடியின் பூவில் இருந்து தயாரிக்கப்பட்ட மது வழங்கப்பட்டிருக்கிறது. வெராட்ரம் அல்பம் வொய்ட் ஹெல்போர் என்றும் அழைக்கப் படுகிறது. வெள்ளை நிறப் பூவை உடைய இந்த மூலிகை, கிரேக்க பழங்கால மருத்துவத்தில் வாந்தி எடுக்கத் தூண்டுவதற்காக பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்தப் பூவைக் கொண்டு நொதிக்கச் செய்யப்பட்ட மதுவே அலெக் ஸாண்டரின் உயிரைப் பறித்திருக்கிறது. ஏனைய விஷங்கள் உடனடியாகக் கொன்றிருக்கும். ஆனால் அலெக் ஸாண்டர்மரணப்படுக்கை யில் 12 நாள்கள் இருந்தார். அவரால் நடக்கவோ, பேசவோ இயலவில்லை. மிகுந்த அவஸ்தைக்குப் பின்னர் அவர் உயிர் பிரிந்திருக்கிறது என்று தெரிவித்துள்ளார். எனினும் அலெக்ஸாண்டருக்கு எப்படி விஷம் கொடுக்கப்பட்டது என்பது புரியாத ஒரு விடயமாக உள்ளது எனவும் ஆய்வாளர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றே AA இணைந்து கொள்ளுங்கள்
விசேட சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளும் பெற்று மகிழுங்கள்
உங்கள் சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரத்தை எங்களிடம் பெற்றுகொள்ளுங்கள்
Your partner in motoring
தை மாதம் 17.18.19 ஆம் திகதிகளில்
துரையப்பா விளையாட்டரங்கில் எங்களை நீங்கள் சந்திக்கலாம்
B29
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha, Colombo 03
Tel : 2 421528. E-mail : aacmotor@sltnet.lk
website : www.aaceylon.lk
estd. in 1904
24 x 7 Hrs 0117 555 557

'ஆரோக்கிய வாழ்வே அளவற்ற செல்வம்'
வடக்கு வாழ் மக்களின் ஆரோக்கிய விழிப்புணர்வுக்காக
இப் புத்தாண்டில் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் வழங்கும்
இலவச சுகாதார பரிசோதனை!

2014 ஜனவரி 17 முதல் 19 வரை
யாழ் துரையப்பா மைதானத்தில்
(38 மற்றும் 71ஆம் இலக்க கூடங்களில்)

- பொது சுகாதார விழிப்புணர்வு 2014 ஜனவரி 17ஆம் மற்றும் 18ஆம் திகதிகளில் - பி.ப. 12.00 மணி, மாலை 4.00 மணி, மற்றும் மாலை 7.00 மணி - (3 பிரிவுகளாக)
- இருதய அறுவை சிகிச்சை ஆலோசகர், லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் இருதய சிகிச்சை நிலைய தலைவர் டாக்டர். காந்திஜி அவர்கள் வழங்கும் இருதய சிகிச்சை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் 2014 ஜனவரி 19ஆம் திகதி பி.ப.1.00 மணி, பி.ப.3.30 மணி மற்றும் மாலை 6.30 மணி - (3 பிரிவுகளாக)

இலவச் சேவைகள் - இரத்த சர்க்கரை பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் வழங்கும் சேவைகள் பற்றிய விபரங்கள்.

578, எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு 5, இலங்கை.
தொ.பே.: +94(0) 115 430000, +94(0) 115 530000
www.lankahospitals.com
LANKA HOSPITALS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● தென்னவன்

# மண்மகிழ மனம் குளிரவைத்த மார்கழித் திங்கள் முழுநிலா

வடமாகாணக்கல்வித்திணைக் களத்தின்அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயம் மகோன்னதமாக நடத்திய மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலை விழா பற்றிய பார்வைக்குள் வாசகர்களாகிய உங்களை அழைத்துச் செல்கின்றேன். தமிழர்தம் கலை, பண்பாடு, மற்றும் வாழ்வியல், பொருளாதார நடத்தைகளைப் பேணுகின்ற வகையிலும், அவற்றைப் பாதுகாத்து சிதைவடைந்து விடாது எம் எதிர்கால சந்ததிக்கு பரிமாற்றம் செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்தும் வடமாகாணக் கல்வித் திணைக்களம் மாதம் ஒருமுறை வரும் முழுநிலாவினை வடமாகாணத்தில் அமைந்துள்ள பன்னிரண்டு கல்வி வலயங்களில் ஒழுங்குபடுத்தி முழுநிலா கலை நிகழ்வு என்ற செயற்றிட்டத்தை பின்பற்றி வருகின்றது. அந்த ஒழுங்கில் வருடத்தின் நிறைவு மாதமாகிய மார்கழித் திங்கள் கலைநிகழ்வுக்குரிய மாதமாக தென்மராட்சிக் கல்வி வலயத்தைத் தெரிவுசெய்திருந்தது.


அதற்கேற்ற வகையில் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமாரின் தலைமைத்துவத்திலும், தென்மராட்சியின் கல்வியியலாளர்களின் திட்டமிடலிலும் சிறந்த ஒழுங்கமைப்புக்கும் ஏற்ற வகையில் தென்மராட்சிக் கல்விச் சமூகம் மிகச் சிறப்பாக வெளியக, உள்ளக அரங்குகளைப் பயன்படுத்தி எழுச்சியுடன் ஏற்றம் காணும் வகையில் ஏற்பாடு செய்திருந்தது.

மேற்படி நிகழ்வின் வெளியகக் காட்சி கற்பக தருக்களுடன் கடல் வளத்தையும் காணி நிலத்தின் ஏற்ற விவசாய நடவடிக்கைகளையும், மார்கழிமாத திருவெம்பாவை வழிபாட்டின் மகிமையையும், இலக்கியச் செல்நெறியில் அதியமானும் ஔவைப்பிராட்டியும், மறந்து போன மாட்டுவண்டிப் பவனியுடன் கூடிய ஊர்திப் பவனிகள் ஏ9 பாதையை எழில்மிக்கதாக்கின. பல பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கொடிகாமத்தில் இருந்து தென்மராட்சியின் வீதியூடாக தைப்பொங்கல் விழாவின் பட்டிப் பொங்கல் சிறப்பை எடுத்தியம்பும் வகையில் காளை மாடுகளின் கழுத்தில் மாலையிட்டு கொம்பு சீவி நிறமிட்டு மாட்டு வண்டிச் சலங்கை ஒலி ஒலிக்க அலங்காரப் பவனியிலே உலா வந்த பண்பாடு காணாமல் போனதை மீண்டும் ஒருமுறை காட்சிக்குக் கொண்டுவந்ததாக இது அமைந்திருந்தது. எனினும் வண்டியை சலுத்தக் கூடிய சாரதிகள் நம்மவர்களில் இப்போது இல்லை என்பதும் கவலைக்குரியதாகின்றது.

அவற்றுள் தென்மராட்சி இலக்கிய அணியினரின் நெல்லிக்கனி கொடுத்த கதையின் காட்சிப் படிமத்தை மாட்டு வண்டியில் மண்வாசனையின் வெளிப்பாடாய்க் காட்டி வலம் வந்தமை 21ஆம் நூற் றாண்டில் வாழும் எம் இளம் சந்ததியினருக்கு காணக் கிடைத்த பெரும் பேறாய் அமைந்தது. ஔவைப்பிராட்டியினதும் அதிகமானினதும் ஒப்பனை இருவரும் மீண்டும் ஒரு பிறப்பெடுத்ததுபோல் தோன்றியது.

கச்சாய் பாடசாலை சமூகத்தின் ஆதரவில் கடலோடு ஒன்றித்த எம்மவர்களின் வாழ்வியல் பண்பாட்டு சிறப்பை வெளிப்படுத்தும் வள்ளப் பொங்கல் காட்சி ஊர்தி பல செய்திகளைச் சொல்லிற்று. அதாவது இயற்கையே எம் இருப்பு, இணைந்து வாழ்வதே எம் பொறுப்பு, வல்லமையும் வலிமையுமே வாழ்வியலை மேம்படுத்தும் எழுத்தறிவே எழுச்சியின் வடிவம் எண்ணறிவே ஏற்றத்தின் வடிவம் போன்ற பதாகைகளைத் தாங்கிய வண்ணம் வருகை தந்ததும், வளம் கொழிக்கும் வரணி மத்திய கல்லூரிச் சமூகத்தின் வெளிப்பாடாக கற்பக தருவின் பயனை பறைசாற்றுகின்ற வகையில் அருகிவரும் அதன் உற்பத்திப் பொருள்களையும் அதன் பாவனையின் பயனுறுதியையும், அதைப் பேண வேண்டியதன் அவசியத்தையும், ஆடவர்களின் ஆடல் பாடலுடன் அசைந்தாடி வந்தமை ஆனந்தத்தின் வெளிப்பாடாய் அமைந்திருந்தது. மேலும் வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதிபலிப்பாக மார்கழி மாதத் திருவெம்பாவை திருப்பாட்டுடன் இந்துவாய் வாழ்ந்து, இனியன செய்து ஆன்மிக வாழ்வில் ஆனந்தமடைவோம் என்ற வாசகத்தைச் சுமந்த வண்ணம் வட்டவடி வாகனத்தில் வலம் வந்தமை ஆன்மிக ஆதாரத்தை ஆணித் தரமாய் காட்டி நின்றது.

அத்துடன் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய சமூகத்தின் ஏற்பாட்டில் இலங்கைத் திருநாட்டின் சீவனோபாயமாகிய விவசாயச் செய்கையின் பாரம்பரிய முறையிலான துலா மிதித்து விவசாயம் செய்யும் தொழில்பற்றிய நினைவுபடுத்தலையும், ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை, என்றும், நம்ம வாழ்விலே பஞ்சமேயில்லைஎனும்பாடல்வரிகள்மூலம்பவனி வந்தமை பார்ப்பவர்களைப் பரவசமூட்டியது. மேலும் அந்நிலை தற்போது நம்மவரிடையே அருகி வரும் நிலைமாற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் ஊர்திப் பவனி ஊர்ந்து வந்தமை நாம் கடந்து



வந்த பாதையையும் புராதன தொழில் முறையையும் மீள நினைவூட்டிற்று.

மேலும் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய சமூகத்தின் வெளிப்பாடாக புறநானூற்றின் புலவர்கள் பற்றியும் புலவர்கள் போல் வேடம் புனைந்து இசை மழையில் நனைந்து ஆண் பெண் இருபாலாரும் வருகை தந்தமை எம்மவர்களுக்கு புராதன கால புலவர்களினது புலக்காட்சியை புலப்படுத்தி நின்றது. மேற்குறித்த காட்சிப் படிமங்களைக்கண்ணுக்குவிருந்தளிக்கக்கூடிய வகையில்கற்பனைத்திறனுடனும் கச்சிதமாகவும்களத்தில்உலவவிட்டபாடசாலைகளை பாராட்டாமல் இருக்க முடியாது.

இவ்வூர்த்திகள் முன்னே செல்ல தமிழர் தம் பண்பாட்டை எடுத்தியம்புகின்ற ஆடற்கலையின் சிறப்பை அல்லாரை வித்தியாலய மாணவர்களின் காவடி நடனமும், நாவற்குழி மகாவித்தியாலய மாணவர்களின் கோலாட்டமும், மிருசுவில் றோ.க.த.க பாடசாலை மாணவர்களின் கும்மி நடனமும், கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவர்களின் ஒயிலாட்டமும், வரணி மத்திய கல்லூரி மாணவர்களின் கரகாட்டமும், மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய மாணவர்களுடைய செம்பு நடனமும், கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலய மாணவர்களின் வெண்ணிற அன்ன நடையும், வெளியக காட்சி நிகழ்வுகளை வெற்றிக்குரியதாய் மாற்றியிருந்தன.

அதற்கு மேல் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஆசிரியர்களுடைய பெரும் உழைப்பின் பேறாக தமிழர்களின் அடிப்படை பண்பாட்டம்சங்களை எடுத்தியம்புகின்ற இன்னியம் என்கின்ற கலைப்படிமத்தின் காட்சியமைப்பு எல்லோரையும் வியக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. தமிழ் மன்னனாகிய சங்கிலிய மன்னனின் காலத்தில் தோற்றம் பெற்ற இக் கலைப்படைப்பு புராதன காலத்துத் தமிழ் மன்னனை பறைசங்கு முழங்க கொடி கொம்பு ஆலவட்டத்துடன் வரவேற்று வலம் வரும் நிகழ்வாக அமைந்திருந்தது. அவ்வாறான ஒரு நிகழ்வு மார்கழித் திங்கள் கலை நிகழ்வில் மங்காப் புகழுடன் எம்மக்களின் முதல்வர் அவர்களை வரவேற்க ஏற்பாடு செய்யப்பட்டமை தென்மராட்சிப் பாட சாலைகளில் இதுவே முதற் தடவையாகும்.

மேற்குறித்த விடயங்களைப் பிரதிபலிக்கும் ஊர்திகளும், மாணவச் செல்வங்களின் கலை வெளிப்பாட்டு அம்சங்களும், முன்னே செல்ல முத்தான நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்கள் பவனி வர தென்மராட்சியின் கல்விச் சமூகம் ஒன்றுகூடி அவர்களை வரவேற்க தமிழர் தம் பண்பாட்டின் அடையாளமாகிய பூரண நிறைகுடம் வைத்து வீதிகளில் மக்கள் விருப்புடனே வரவேற்ற அந்தக் கணப் பொழுதில் வணிகத்தில் பெயர் பெற்ற சேரியாம் சாவகச்சேரி பெருமை கண்டது.

தென்மராட்சியின் கலாசார மண்டபம் காலத்தின் பதிவின் வெளிப்பாடாக மண்டபம் நிறைந்த மக்கள் வெள்ளத்தை கொண்டிருந்ததை விருந்தினர் வரவேற்பு பறைசாற்றிற்று. வெளியக நிகழ்வுகள் நிறைவுற மண்டப நிகழ்வில் தமிழர் தம் பாரம்பரியங்களில் ஒன்றாகிய பெண்தெய்வ வழிபாட்டை உணர்த்தும் வகையிலும் தாய்த் தெய்வமே ஆதாரம் என்பதற்கேற்ற வகையில் தமிழ் தாயை உருவகப்படுத்தி அதற்கு மாலையிட்டு கௌரவித்தமை மேற்படி விழாவை மெருகூட்டச் செய்ததுடன் புறநானூற்றின் புரிதல்களை எமக்கெடுத்தியம்பியது.

தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், மங்கல இசை, மதரீதியான பிரார்த்தனையுடன் ஆரம்ப நிகழ்வுகள் மனம் நிறைந்த மங்கலத்துடன் ஆரம்பமாகின. மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் கதிரைகள் இன்றி நிற்கவும் செய்தது. அரங்க நிகழ்வின் வரிசையிலே முழுநிலவை வரவேற்று தென்மராட்சிப் பாடசாலை ஆசிரியர்களின் நிலாப் பாட்டு நிகழ்வின் தாற்பரியத்தை மனம் கொள்ளச் செய்தது. தொடர்ந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம் மிகவும் சிறப்பாகபல்பரிமாண ஆடற்கலையின் அற்புதத்தை மின்னொளியில் பார்த்தது போன்ற உணர்வுடன் அரங்கேறியமை அனைவர் உள்ளத்தையும் பூரிப்படையச் செய்தது.

அருந்தவபாலன் அதிபரின் இரத்தினச் சுருக்கமாய் அமைந்த வரவேற்பு உரை, ஆசிரியர்களின் மருதநிலாக் கானம் இசைக்கொடையின் வெளிப்பாட்டு இனிமையைக் காட்டி நின்றது. அத்துடன்சாவகச்சேரிமகளிர்கல்லூரிமாணவர்களின் அருகிப் போன ஆடற் கலையின் அற்புதத்தை பின்னல் கோலாட்டம் என்னும் வடிவில் பிரகாசிக்கச்செய்தமை பிரமாதமாய் அமைந்திருந்தது.



தென்மராட்சி வலயத்தினதும் நிகழ்வினதும் சீரிய தலைவர் சு.கிருஸ்ணகுமாரின் தலைமையுரை நிகழ்வின் வெற்றியைக் கோடிட்டு காட்டி நின்றது. எம்மில் அருகிவரும் ஓதல் கலை வெளிப்பாட்டின் ஓர் அம்சமாகிய புராண படனம் எழுதுமட்டுவாள் அ.த.க பாடசாலை ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்தது. மேலும் வளரும் பயிரை முளையில் தெரியும் என்பதற்கேற்றாற் போல் கொடிகாகம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை மாணவி நேருஜாவின் பேச்சு சபையைக் கவர்ந்தது.

மேலும் எல்லோருடைய மனங்களையும் ஆனந்தத்தோடும் அழுகையோடும் கவரக்கூடிய விதத்தில் மாற்றுவலுவுள்ள மாணவி கீர்த்தனாவின் பாடல் வரிகள் பார்வை இல்லாவிடினும் எதிர்காலம் ஒன்று நிச்சயம் உண்டு என்பதற்கான கட்டியமாய் அமைந்தது. அதற்கேற்ற வகையில் அம் மாணவியின் கலைத்துறை ரீதியான உயர்கல்வி வரை உதவி வழங்க சித்தமாய் இருப்பதாக வடமாகாண சபையின் உறுப்பினர் கே.சயந்தன் பிரகடனம் செய்தமை மார்கழித் திங்களின் மற்றுமோர் மாண்பை வெளிப்படுத்தி நிற்கின்றது. தொடர்ந்து கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம், சாவக்சசேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்களின் மேலைத்தேயப் பாணியினாலான ஒகன்இசைஅவர்களின்இணைக்கலைத் திட்டத்தின் இயலுமையை வெளிப்படுத்தியிருந்தமை பாராட்டுதற்குரியது.

தொடர்ந்து நிகழ்வொழுங்கில் தென்மராட்சி மண்ணின் மைந்தன் மறவன் புலவு சச்சிதானந்தனது ஆன்மிக, அறிவியல், அரசியல், பொருளியல் பணிக்கான கௌரவிப்பு காலத்தின் தேவை ஒன்றாக அமைந்தபோதும் மேற்படி நிகழ்வின் பிரதான நோக்கை திசை திருப்பும் வழியில் அமைந்திருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. எம்மவர்களின் கௌரவிப்பு எனும் நிகழ்வில் பொன்னாடை போர்த்தல் கலாசாரம் வேகமாக பரவிவருவதையும் அது பொருத்தமான இடத்தில் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொருத்தமடையாவிடத்து சிந்தனை மாற்றத்தை சிதறடித்து சென்றுவிடுவதை பல பகீரங்க மேடை நிகழ்வுகளில் காணக்கூடியதாக உள்ளது. தொடர்ந்து தென்மராட்சியின் நாட்டிய ஆசிரியைகளினால் நவரச நாயகிகளின் அரங்காற்றுகை அரங்கினை அமைதி கொள்ள வைத்தது. அதேபோன்றுஆசிரியர்களின்மெல்லிசை பாடல்மேடையை மெருகூட்டிச்சென்றது.


தொடர்ந்து மிருசுவில் அ.த.க பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவர்களின் கிராமிய கதம்பம் பல வர்ண நிறங்களில் கிராமியப் பண்பாட்டை பறைசாற்றும் வகையில் பார்ப்பவர் கண்களுக்கு விருந்தளிக்கக் கூடிய வகையில் ஆற்றுகை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. சங்கீத ஆசிரியர்களின் சாஸ்திரிய இசை மண்டபத்தை மகிழ்வூட்டிய போதும் மேலும் மெருகூட்ட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. நிறைவு நிகழ்வாகிய மயானத்தின் மைந்தன் என்ற ஆசிரியர்களதும் மாணவர்களதும் நாடகம் மனம் கொள்ளத்தக்கவையாக அமைந்த போதும் நேர முகாமைத்துவத்தின் நீட்சி காரணமாக அவ்வளிக்கை அமைதியாகவே அரங்கை விட்டுச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஒட்டுமொத்தத்தில் ஒத்திகை பார்த்த நிகழ்வுகள் யாவும் மிகவும் சிறப்பாகவும், சிந்தனைக்கு விருந்தாகவும் செயலூக்கம் உடையதாகவும், அமைந்திருந்தன. எனினும் சிற்சில குறைபாடுகள் ஒழுங்கமைப்பில் தோன்றி மறைந்தன என்பதை மறுப்பதற்கில்லை. அத்துடன் திட்டமிட்ட நேர முகாமைத்துவத்தில் சற்று விலகல் காணப்பட்டமையையும் அவதானிக்க முடிந்தது. மேலும் விருந்தினர்கள் தங்களது அரசியல் சூழலியல் நிகழ்வுகளுக்கேற்ற வகையில் உரைகளை நிகழ்த்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறிருப்பினும் தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு மார்கழித் திங்கள் நிகழ்வானது வலயக் கல்வி அலுவலகத்தின் பதவிநிலைசார் உத்தியோகத்தர்களினதும், பதவி நிலை சாரா உத்தியோத்தர்களினதும் அனைத்துப் பாடசாலை அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் ஒத்துழைப்பும் குறிப்பாக கலை நிகழ்வு மற்றும் ஊர்தி ஒழுங்கமைப்பை அளிக்கை செய்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகத்தினர் என்ற தரப்பினரின் ஒட்டுமொத்த அர்ப்பணிப்பும் முதன்மை விருந்தினர் உட்பட ஏனைய விருந்தினர்களுடைய வருகையும் இந்தவெற்றிக்கு ஊன்றுகோலாக அமைந்திருந்தது என்றால் மிகையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வெளிச்சத்தைப் பயன்படுத்தி படம் எடுத்து வெற்றி கண்ட இயக்குநர்



> “யாழ்ப்பாணக் கல்லூரியில் பௌதீகத்தில் பட்டம்பெற்று இலங்கை அரசின் நில அளவைத் துறையில் புகைப்படக் காரராகப் பணியாற்றினார். வானத்தில் பறந்து பல்வேறு நிலத்தின் தன்மை களை புகைப்படம் எடுப்பதே இவரின் வேலை ஆனால் அவரின் எண்ண மெல்லாம் திரைப்படத்தின் மீது குவிந்திருந்தது.




இயற்கை வெளிச்சத்தைப் பயன்படுத்தி காட்சிய மைப்பை அழகாக எடுத்து ஒளிப் பதிவிலும் இயக்குநர் தளத்திலும் தனக்கென தமிழ் சினிமாவில் ஓர் இடத்தைப் பதிவு செய்தவர் பாலு மகேந்திரா. இவர் மட்டக்களப்பில் அமிர்தகழி என்ற சிற்றூரில் 20.05.1939 இல் பிறந்தார். சென்னையில் வாழ்கிறார். 13 ஆவது வயதில் தந்தை இவருக்கு வாங்கிக் கொடுத்த 14 ரூபா பெறுமதியான ஒரு கமரா தான் இவரைக் கற்பனை உலகில் விழக் காரணமாக இருந்த முதல் வித்தாகும். பின்பு 500 ரூபாவுக்கு ஒரு கமராவை வாங்கி புகைப்படப் போட்டியில் பங்கேற்று பரிசும் பெற்றார்.

கத்தோலிக்க பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பொழுது அங்கிருந்த பாதிரியார் ஒருவர். திரைப்படங்களின் மீது பற்று மிக்கவராக இருந்தார். வகுப்பு நேரங்களுக்குப் பிறகு மாண வர்களுக்கு 16 மி.மீ. திரையில் படங்களை திரை யிட்டுக் காட்டுவார். பை சைக்கிள் தீவ்ஸ் படத் தைப் பார்த்து பாலு மகேந்திரா சினிமாவின் மீது பித்துக் கொண்டார். 15 ஆவது வயதில் கண்டி அருகே டேவிட் லீன் என்ற புகழ் பெற்ற இயக்குநர் தி பிரிட்ஜ் ஆன் தி ரிவர் கிவாய் படமெடுப்பதை காணும் வாய்ப்பைப் பெற்றார். அதுதான் படமியக்கும் ஆர்வத்தை அவருள் விதைத்தது.

யாழ்ப்பாணக் கல்லூரியில் பௌதிகத்தில் பட்டம்பெற்று இலங்கை அரசின் நில அளவைத் துறையில் புகைப்படக்காரராகப் பணியாற்றினார். வானத்தில் பறந்து பல்வேறு நிலத்தின் தன்மைகளை புகைப்படம் எடுப்பதே இவரின் வேலை. ஆனால் இவரின் எண்ண மெல்லாம் திரைப்படத்தின் மீது குவிந்திருந்தது. இதனால் புனே திரைப்படக் கல்லூரியில் இயக்குநர் பயிற்சிக்கு விண்ணப்பித்தார். ஆனால் அவருக்கு ஒளிப் பதிவு பயிற்சியிலேயே இடம் கிடைத்தது. அங்கு 1969 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார்.

1960 களிலும் 1970 களிலும் ஐரோப்பாவின் சினிமா மேதைகளின் தாக்கம் அந்தக் கல்லூரியில் அதிகமிருந்தது. இதனால் இவர் விட்டோரியா டி சிகாவினால் ஈர்க்கப்பட்டார். வங்கத்தில் சத்யஜித்ரே அறிமுகப்படுத்திய இத்தாலிய றியோரியவும் நிரந்தரமான பாதிப்பை இவரிடம் ஏற்படுத்தியது.

இவரது முதல்படமான அழியாத கோலங்கள் படத்தின் மூலம் பாலுமகேந்திரா சினிமாவுக்குள் நுழைந்தார். 10 வருடங்கள் கழித்து இவரது இரண்டாவது படமான வீடு சிறந்த தமிழ் படத்துக் கான தேசிய விருது பெற்றது. புனேயில் உள்ள தேசிய திரைப்பட ஆவண காப்பகத்தில் இந்தப் படத்தின் புத்தம் புதிய பிரதி ஒன்று பாதுகாக்கப் படுகின்றது. இவருடைய படங்களில் பெண் பாத்தி ரங்கள் அழுத்தமாக படைக்கப்பட்டிருக்கும்.

மலையாளத்தில் வெளிவந்த நெல்லு திரைப் படமே இவரை ஒளிப்பதிவாளராக அறிமுகப்படுத் தியது. இந்தப் படத்துக்கான சிறந்த ஒளிப் பதிவாளருக்கான விருதைப் பெற்றார். 1992 ஆம் ஆண்டு தேசிய திரைப்பட விருதுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். பின்பு இவரே ஒளிப்பதிவாளராகவும் இயக்குநராகவும் கன்னடம் (கோகிலா), தமிழ் (முள்ளும் மலரும்), மலையாளம் (யாத்ரா), தெலுங்கு (நிரீக்ஷ்னா) போன்ற படங்களில் பணியாற்றினார்.

இவர் 1983 இல் வெளிவந்த சத்மாவின் மூலம் இந்தி சினிமாவிலும் கால் பதித்தார். 52 குறும்படங்களை எடுத்தார். இவை அதிகாரத்தி மிர், சுற்றுச் சூழல் மாசுபாடு போன்ற பல்வேறு கருத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண் டவை. சிறந்த இயக்குநருக்கான தேசிய விருதை மூன்று முறை பெற்றார்.

சிறந்த திரைக்கதைக்கு கோகிலா, அழியாத கோலங்கள் ஆகியன விருது பெற்றன. ஜீலி கணபதி சிறந்த படத்தொகுப்புக்கான சாந்தாராம் விருது பெற்றது. மூன்று துறைகளுக்கான விருது பெற்ற ஒரே திரைப்பட நிபுணர் இவரே ஆவார். இவரின் உதவி இயக்குநராக பணியாற்றிய பலர் தமிழ் திரை உலகில் பிரசித்தி பெற்று இருக்கின்றார்கள். இவர் இயக்கிய கதைநேரத்தில் தமிழின் முக்கியமான பல படைப்பாளிகளின் ஆக்கங்களை சின்னத்திரை வழியாக காட்சிப்படுத்தினார்.

கோகிலா, அழியாத கோலங்கள், மூடுபனி, மஞ்சு மூடல் மஞ்சு (மலையாளம்), ஓலங்கள் (மலையாளம்), நீரசஷ்னா (தெலுங்கு), சத்மா (ஹிந்தி), ஊமை குயில், மூன்றாம்பிறை, நீங்கள் கேட்டவை, உன் கண்ணில் நீர் வழிந்தால், யாத்ரா, ரெண்டு தொகலதிட்ட (தெலுங்கு) இரட்டை வால் குருவி, வீடு, சந்தியாராகம், வண்ண வண்ண பூக்கள், பூந்தேன் அருவி சுவன்னு, சக்ர வியூகம், மறுபடியும், சதி லீலாவதி, அவுர் ஏக் ப்ரேம் கஹானி (ஹிந்தி), ராமன் அப்துல்லா, ஜீலி கணபதி, அது ஒரு கனாக்காலம் போன்ற திரைப்படங்களை எடுத்துள்ளார்.

பாலு மகேந்திராவிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய பலர் இன்று புகழ் பெற்ற இயக்கு நர்களாக இருக்கின்றனர். அதாவது பாலாராம், வெற்றி மாறன், சீமான், சுகா போன்ற இயக்கு நர்கள் இன்று புகழ் பெற்று பாலு மகேந் திராவின் பெறுமதியை உலகறியச் செய்கின்ற னர். பாலு மகேந்திரா பாலி மிஸ்திரி, ஜி.கே. மூர்த்தி, சுப்ரதோ முதர்ஜி ஆகியோரின் ஒளிப்பதிவால் கவரப்பட்ட வர். ஆனால் இவர் எவரிடமும் உதவியாளராகப் பணியாற்றிய தில்லை. எவரு டைய பங்களிப்பும் இல்லாமல் தனது முயற்சி மூலம் வெற்றி கண்ட சினிமா படைப்பாளி என் றால் சும்மாவா? இன்றும் வாய்ப்புகள் அவரைத் தேடிவருகின்றன. ஆனால் அனைத்தையும் மறுத்து வருகிறார் புதியவர் களுக்கு வழி விடுகிறாரோ தெரியவில்லை.

பார்வையாளன்

---

# இவர்கள் திருந்துவது எப்போது?

## கோப்பாய் சண்முகம்
### கதையோடு செய்தி

சில அரச அலுவலகங்களில் பியோனுக்கு இருக்கிற செல்வாக்கு அதிகாரிக்கும் இருக்காது பாருங்கோ. பியோன் சொன்னால்தான் அதிகாரி சம்மதம் தெரிவிப்பார். அந்தளவுக்கு பியோனின் செல்வாக்கு இருக்கும். கெட்டதோ, நல்லதோ சில விடயங்களில் பியோனே முடிவெடுத்து விடுவார். பல அலுவலகங்களில் சனங்களும் அதிகாரியைச் சந்திக்காமல் பியோனை சந்தித்து தமது காரியங்களை நிறைவேற்றுகினம்.

அதிகாரி அலுவலகத்தில் இல்லாத போது பியோ னைத் தானே சனம் சந்திக்க நேரிடுகிறது. இதைச் சாக்காக வைத்து பியோனும் தனது மேலோங்கித் தனத்தைக் காட்டி விடுகிறார்.

அதாவது மக்கள் தமது தேவைகளை நிறை வேற்ற அரச அலுவலகங்களுக்கு வரும் போது பியோனே அதிகாரியாக மாறி முடிவைச் சொல்லி விடுவார். இதனால் அதிகாரி மீதே சனம் வீண் பழியைப் போடுகிறது. அதிகாரியும் தம் மீது மக்கள் பழியைப் போடுவதற்குக் காரணமென்ன என்று ஆராய்ந்தறிந்து அதற்கான சரியான நடைமுறையைக் கைக்கொள்ள முனைவ தில்லை. இதனால் சில அரச அலுவலகங்களின் செயற்பாடு மந்த கதியில்தான் நகர்கிறது.

அலுவலக வேலைக்குத்தான் பியோனை நியமனம் செய்திருக்கிறது அரசு. ஆனால் அதிகாரியின் தனிப்பட்ட வேலைகளைத்தான் சில பியோன்கள் ஒழுங்காகச் செய்கிறார்கள் போலும். அதாவது அதிகாரியின் வீட்டு வேலை களையும் அதிகாரி அலுவலகத்துக்கு வந்தவுடன். அவரது பாக்கையும் சுமந்து செல்லும் அளவுக்கு, அலுவலக கடமைக்கு அப்பாற்பட்ட, அதிகாரியின் தனிப்பட்ட தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுத்து காக்காய் பிடித்து வைத்துக் கொள்கி றார்கள். அதிகாரியின் தனிப்பட்ட வேலைகளை நிறைவேற்றிக் கொடுக்க அரசாங்கம் பியோனை நியமனம் செய்யவில்லை என்பதை அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால் தான் அதிகாரியின் முதுகில் சில பியோன்கள் ஏறி சவாரி செய்யக் கூடியதாக இருக்கிறது.

மக்கள் தமது தேவைகள் சம்மந்தமாக அரச அலுவலகங்களுக்கு வரும் போது அவர்களை அதிகாரிகள் நேரடியாகச் சந்தித்து அவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண் டும். பியோனை சந்திக்க வைத்து அவரூடாக பொது மக்களைச் சந்திக்க முயலக்கூடாது. சனங்களின் தேவைகள் சம்பந்தமாக அதிகாரி கள்தான் முடிவு செய்யவேண்டும். அரச அலுவ லகங்களுக்குச் செல்லும் மக்கள் அதிகாரிகளைச் சந்திக்க முடியாமல் தமது தேவைகள் நிறை வேறாமல் பியோன் சொல்வதைக் கேட்டு அதிகாரி சொன்னதாக முடிவு செய்து திரும் புகின்றனர். இப்படிப்பட்ட சம்பவங்கள் நிறைய இடம்பெற்றும் சில அதிகாரிகள் அது குறித்துக் கண்டும் காணாமற் இருப்பதற்கு என்ன கார ணம் என்று தெரியாமல் மக்கள் குழம்பிப் போய் உள்ளனர்.

இப்படித்தான் வலிகாமப் பகுதி ஒன்றில் உள்ள அரச அலுவலகம் ஒன்றில் கடந்த 2 ஆம் திகதி பியோன் அதிகாரியாக மாறிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அதாவது ஒரு பிள்ளையின் பெற்றோர் தமது ஊரில் உள்ள ஒரு பாடசாலை யில் முதலாம் ஆண்டில் தமது பிள்ளையை சேர்ப்பதற்குத் தீர்மானித்தனர்.

விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அந்தப் பாடசாலையில் சேர்ப்பித்துள்ளனர். எல்லோரும் தமது பிள்ளைகளை சேர்ப்பதற்கு நகரப் பாட சாலையை நோக்கி படையெடுக்கும் போது குறிப்பிட்ட பெற்றோர் தமது ஊரிலேயே உள்ள ஒரு பாடசாலையில் தமது பிள்ளையை சேர்ப் பதற்கு முன் வந்தமை என்பது பாராட்டத்தக்க விடயமாகும். கிராமப்புறப் பாடசாலை என்றால் என்ன, நகரப்புறப் பாடசாலை என்றால் என்ன எல்லாப் பாடசாலைகளிலும் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள்தான் கல்வி கற்பிக்கிறார்கள் என்பது சனத்துக்குத் தெரியாதோ? பிறகேன் நகரப் பாடசாலையை நோக்கிப் படையெடுக்கிறார்கள் என்பது புரியாத புதிராகவே இருந்து வருகிறது. விண்ணப்பித்து விட்டு பாடசாலையில் இருந்து கடிதம் வரும் என்று பார்த்துக் கொண்டு இருந்தனர். கடிதம் வரவில்லை. பாடசாலையும் ஆரம்பமாகி விட்டது. பாடசாலையில் பிள்ளை யைச் சேர்ப்பதற்கான அனுமதி மறுக்கப்பட் டிருக்குமோ என்று ஒன்றுமே புரியாமல் பெற் றோர் அன்றைய தினமே பாடசாலைக்குச் சென்றனர். அங்கு சென்ற போதுதான் நிலைமை வெளிச்சத்துக்கு வந்தது.

அதாவது பாடசாலையில் அனுமதிப்பதற்கான ஒப்புதல் கடிதம் வீட்டுக்கு அனுப்பி வைக்கப் பட்டமை தெரியவந்தது. உடனே அந்தப் பெற் றோர் தமது பிள்ளையை மறுநாள் பாடசாலை யில் சேர்த்தனர். சேர்த்து விட்டு பாடசாலையி லிருந்து அனுப்பப்பட்ட கடிதம் ஏன் வரவில்லை என்பதை அறிவதற்காக அந்தப் பகுதியில் உள்ள தபால் நிலையத்துக்குச் சென்றனர்.

தபால் நிலையத்தில் வேலை பார்ப்பவர்களோ என்ன நடந்தது என்பதை விசாரித்து விட்டு விசாரித்துச் சொல்லுகிறோம் என்று பெற்றோரை திருப்பி அனுப்பி விட்டனர். மறுநாள் காலை அந்தப் பெற்றோர் மீண்டும் தபால் நிலை யத்துக்குச் சென்றபோது “வீட்டில் நீங்கள் இல்லாததால் கடிதத்தை பாடசாலைக்கு திருப்பி அனுப்பி விட்டோம்" என்று அங்கிருந்த பணியா ளர்கள் தெரிவித்தனர்.

பெற்றோரோ "கடிதம் கொண்டு வரும் போது வீட்டில் நாங்கள் இருந்திருக்காவிட்டால் பக்கத்து வீட்டில் கொடுத்திருக்கலாமே என்று கேட்ட போது அந்த தபால் நிலையத்தில் பணிபுரியும் பியோன் சத்தம் போட்டு அந்தப் பெற்றோரை மிரட்டி வெளியே போகும்படி கட்டளை பிறப்பித்தார்.

பியோனின் அதிகாரத்தைப் பார்த்ததும் பெற்றோர் பயந்து போய்விட்டனர். கடிதத்தைப் பற்றி கேட்க வந்தால் பியோன் ஏன் ரென்சன் ஆகிறார். எதற்கும் தயவாக கேட்டுப் பார்ப்பம் என்று அந்தப் பெற்றோர் இதற்கு தீர்வுதான் என்ன என்று கேட்டனர். பியோனோ தீர்வைக் கேட்டவையெல்லாம் காணாமற் போய் விட்டினம். நீங்கள் எங்க வேண்டுமானாலும் முறையிடலாம். என்னை எவராலும் ஒன்றுமே செய்ய முடியாது என்று சிங்கம் போல் கர்ச்சித் தாராம்.

அந்த தபால் நிலையத்தில் பியோன்தான் அதிகாரியோ என்று நினைத்துக் கொண்டு பெற்றோர் பாடசாலைக்குச் சென்றனர். அங் குள்ள ஆசிரியர் ஒருவர் கடிதம் திரும்பி வந்து விட்டது என்றார். பிள்ளையைச் சேர்த் தாச்சுத் தானே, பிறகேன் விஷயத்தைப் பெருப்பிப்பான் என்று பெற்றோர் வீடு போய்ச் சேர்ந்தனராம்.

ஒருவேளை வேலை வாய்ப்பொன்றுக்குக் காத்திருக்கும் ஓர் இளைஞனுக்கோ, யுவ திக்கோ, அரச திணைக்களமொன்றிலிருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதமோ, அல்லது நியமனக் கடிதமொன்றுதானோ அனுப்பப்பட்டிருந்தாலும் அதனை உரிய வர்களுக்குச் சேர்ப்பிப்பதில் இவ்வித அசண் டைத்தனம் பின்பற்றப்பட்டால் குறிப்பிட்டவரின் எதிர்காலமே பாழாகிப் போய் விடுமல்லவா? மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற மனப்பாங்குடன் அரச சேவையாளர்கள் சேவையாற்ற வேண்டுமென்று அரசியல்வாதி கள் மேடைக்கு மேடை அறிவுரை கூறுகிறார் கள். இப்படிப்பட்ட, குறிப்பாக பொது மக்களுடன் நேரடித் தொடர்பு பேணி, கடமையைக் கண் ணியமாக, மனித நேய உணர்வுடன் மேற் கொள்ள வேண்டிய அரச ஊழியர்கள் தரப்பினர் என்றைக்குத்தான் திருந்தப் போகிறார்களோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிக்க வைக்கும் ஒட்டகச் சிவிங்கி



சஹாரா பாலைவனத்தில் பெரிய பாறை ஒன்றில் செதுக்கப்பட்டுள்ள ஆறு மீற்றர் உயரமுள்ள ஒட்டகச்சிவிங்கியின் உருவம் பிரமிக்க வைக்கும் ஒரு கண்டுபிடிப்பு என்று மலைச் சித்திரங்கள் பற்றி ஆராயும் நிபுணர் டேவிட் கௌல்ஸன் கூறியுள்ளார்.

நைஜரில் உள்ள பாலைவனத்தின் நடுவே ஒரு சிறிய குன்றுபோல இருந்த பாறை மீது சில நிபுணர்கள் ஏறினர். 900 அடி நீளமும் 50 அடி உயரமும் உள்ள பாறை அது!

அங்கே பல சித்திரங்கள் செதுக்கப்பட்டிருப்பதைப் பார்த்து வியந்து போன அவர்கள், சுமார் 500 பாறை செதுக்கல் சித்திரங்களைக் கண்டுபிடித்தனர். அவற்றில் பெரிய ஒட்டகச்சிவிங்கியின் உருவத்தைப் பார்த்து அதிசயித்துப் போய் விட்டோம் என்றார் டேவிட் என்கிற நிபுணர்.

சுத்தியல் மற்றும் உளி கொண்டு செதுக்கப்பட்ட இந்த உருவம், காலம் காலமாக மழை வெயிலுக்கு ஈடு கொடுத்து அழியாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்தச் சித்திரம் 6000 முதல் 9000 ஆண்டுகளுக்கு முன்னர் செதுக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் டேவிட்!

கொடிகள் தழைத்து இருக்க வளமான பூமியாக அது இருந்திருக்க வேண்டும்!


ஆபிரிக்காவில் ஒட்டகச்சிவிங்கி ஒரு முக்கியமான மிருகம். அங்கே அது புனிதமானதாகக் கருதப்படுகிறது.

இந்தப் பாறைச் சித்திரங்கள் அனைத்தும் என்னென்னவென்று அந்தப் பகுதி வாழ் டுவார்க் இன மக்களுக்குத் தெரியுமாம்.

மைக்கேல் ஏஞ்சலோ படைப்பைக் கண்ட ஆனந்தம் இந்தப் பழைய பாறைச் செதுக்கல் சித்திரங்களைப் பார்த்ததில் ஏற்பட்டது என்று டேவிட் கூறுகிறார்.

உலகின் பழைமையான மலைப்பாறைச் செதுக்கல் இது என்பதே இதன் சிறப்பு.

# ஏரிகள்... சில தகவல்கள்




உலகில் உயரமான ஏரி பொலிவியாவிலுள்ள டிடிகாகா ஏரி. கடல் மட்டத்திற்கு மேல் 12,000 அடிகள்.



கடல் என்று அழைக்கப்படும் உலகிலேயே மிகப்பெரிய ஏரி காஸ்பியன். உலகிலேயே பெரிய உப்பு நீர் ஏரியும் காஸ்பியன்தான்.

# பனைமரமும் பச்சைக் கிளியும்



சென்றவாரத் தொடர்.........

மற்றொரு நாள், ஆலமரத்தின் கனிகளைக் கிளி ஆசையோடு கொத்தித் தின்று கொண்டிருந்தபோது மேகம் சூழ்ந்தது. இடி இடித்தது. மின்னல் மின்னியது. மழை வரும் போலிருந்தது. அதற்குமுன் பனை நண்பனிடம் சென்றுவிட வேண்டும் என்ற முடிவில் கிளி வேகமாகக் கரிசல் காட்டை நோக்கிப் பறந்தது.

அப்போது சற்றுத் தொலைவில் ஒரு பெரிய இடி விழும் சத்தம் கேட்டது. இடி இடித்த சத்தத்தில் பயந்துபோன கிளி மேலும் வேகமாகப் பறந்தது.

பனைமரத்தை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில், இடிவிழுந்து பனைமரம் தீயில் எரிந்து கொண்டிருந்த காட்சியைக் கண்டது கிளி.

ஐயோ... அம்மா வலிக்கிறதே என்று அலறிக் கொண்டிருந்தது பனைமரம்.

பனை மரத்தின் அழுகுரலைக் கேட்டதும், அதிர்ச்சியில் உறைந்துபோன பச்சைக்கிளி, பனை மரத்தை நெருங்கி, தீயை அணைக்க முயன்றது.

கிளியே... வேண்டாம். தீயை அணைக்க முயலாதே. தீ உன்னையும் சுட்டுவிடும். தள்ளிப் போ என எச்சரித்தது பனை மரம். இருந்தாலும் கிளி தீயை அணைக்க முயன்றது.

அதனால் முடியவில்லை. கிளியின் கால் ஒன்று தீயில் கருகிப் போனது. கிளி நொண்டிக் கிளி ஆனது.

கிளியே, என் விதி அவ்வளவுதான். நான் மடிந்து போவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. பாசக்காரக் கிளியான உன்னைவிட்டுப் பிரிந்து போவதை நினைத்துத்தான் வேதனைப்படுகிறேன் என்று கூறிய பனை மரம் கொஞ்சம், கொஞ்சமாக உயிரைவிட்டது. கிளி தேம்பித் தேம்பி அழுதது.



அதைத் தேற்ற அங்கு யாரும் இல்லை.

இடி விழுந்த பனைமரம் மொட்டைப்பனை ஆகிப் போனது என்றாலும் பனைமரத்தைப் பிரிய மனமில்லாத அந்தப் பாசக்காரப் பச்சைக்கிளி மட்டும் மனதில் நம்பிக்கையோடு காத்திருந்தது. பல கடவுள்களை வேண்டியது. எப்படியாவது மீண்டும் என்பனை நண்பனை துளிர்க்கச் செய்து விடுவார் கடவுள் என உறுதியாக நம்பியது.

ஒருநாள் அந்த வழியே முனிவர் ஒருவர் வந்தார். தன் ஞானதிருஷ்டியால் பனைமரத்திற்கு ஏற்பட்ட நிலையையும் அதைக் காப்பாற்ற முனைந்த கிளியின் கால் ஒன்று கருகியதையும் உணர்ந்தார்.

மொட்டைப்பனையில் இருந்த கிளியைப் பார்த்து, தன்னைப் பற்றியும், தன் ஞானதிருஷ்டியைப் பற்றியும் பனை மரத்துக்கு இடியால் ஏற்பட்ட நிலையையும் எடுத்துச் சொல்லி,

'உனக்கு, நான் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ அதை என் தவ வலிமையால் செய்வேன்' என்றார்.

உடனே கிளி, 'நான் ஒற்றைக்காலோடு அலைந்து திரிந்தால்கூட பரவாயில்லை, என்பனை நண்பன் உயிர்பெற வேண்டும். உதவுங்கள்' என்றது கிளி.

உடனே முனிவர், உன்னுடைய நல்ல எண்ணம் பாராட்டுக்குரியது. இழந்த காலைக் கேட்காமல், உன் பனைமர நண்பன் உயிர் பெற உதவக் கேட்டாயே! இதுதான் உனது நல்ல எண்ணத்திற்கு அடையாளம். எனவே உன் பனை நண்பன் என் தவ வலிமையால் மீண்டும் உயிர் பெறுவான். நீயும் இழந்துபோன காலைத் திரும்பப் பெறுவாய், எனக் கூறி ஏதோ மங்கல வார்த்தை ஒன்றைச் சொல்ல, பனைமரம் மீண்டும் துளிர்க்க கிளியின் ஒற்றைக் காலும் குணமானது. பனைமரமும் பாசக்காரக் கிளியும் ஒன்றையொன்று தழுவிக்கொள்ள, அந்தப் பாச நிகழ்வுகளை ரசித்துக் கொண்டிருந்தார் முனிவர்.

கடவுள்தான் முனிவர் வடிவில் வந்ததாக உணர்ந்தது கிளி.



*கிளியே, என் விதி அவ்வளவுதான். நான் மடிந்து போவதைப் பற்றிக் கவலைப்படவில்லை. பாசக்காரக் கிளியான உன்னைவிட்டுப் பிரிந்து போவதை நினைத்துத்தான் வேதனைப்படுகிறேன் என்று கூறிய பனை மரம் கொஞ்சம், கொஞ்ச மாக உயிரைவிட்டது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org